# முப்பூ இரகசியம்

## (அகமும் - புறமும்)



சுவாமி பிரபஞ்சநாதன்

# நூல் விளக்கம்



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முப்பூ இரகசியம் (அகமும் - புறமும்) |
| ஆசிரியர் | : | சுவாமி பிரபஞ்சநாதன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2020 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 163 |
| தாள் | : | A5 (5.83” X 8.27”) |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அகவிழிப்பு |

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

# முப்பூ இரகசியம்

## (அகமும் - புறமும்)



சுவாமி பிரபஞ்சநாதன்

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முப்பூ (அகம்) | 14 |
| 2 | அண்டமும், பிண்டமும் | 22 |
| 3 | தச தீட்சை | 32 |
| 4 | அண்ட, பிண்ட இரகசியம் | 41 |
| 5 | வாலைப் பூசை | 53 |
| 6 | மெய்ப்பொருள் விளக்கம் | 64 |
| 7 | சாகாக்கலை | 70 |
| 8 | அண்டக்கல் | 74 |
| 9 | அட்டாங்க யோகம் | 79 |
| 10 | சித்தர்களின் இயமம் - நியமம் | 91 |
| 11 | விந்து - நாதம் | 106 |
| 12 | இரசவாதம் | 112 |
| 13 | வழலை என்ற உப்பு | 114 |
| 14 | முப்பூ (அகம்) நிறைவுரை | 140 |
| 15 | முப்பூ - புறம் | 141 |
| 16 | பூநீர் | 143 |
| 17 | அகத்தியர் குரு நூல் முப்பு 50 | 153 |

# என்னுரை

சித்த மருத்துவத்தில் "**முப்பூ**" என்பது மிகப் பெரிய ஒரு மருத்துவப் பொருளாக கருதப்படுகிறது. உடலை கல்பமாக்க (உறுதியாக்க) சித்த வைத்திய முறையில் மூன்று விதமான உப்புக்களை சித்தர்கள் கண்டார்கள். அதற்கு "**முப்பூ**" என்று பெயர் வைத்தனர்.

அந்த முப்பூ என்ற உப்பைச் சரியாக எடுத்து முடித்துக் கொண்டால், இந்த மனித தேகத்திற்கு மரணமே வராது என்று கூறுவார்கள். அந்த முப்பூ என்ற உப்பை சரியான முறையில் தயாரிக்கப்படும் பொழுது, தாமிரத்தில் உள்ள களிம்பை நீக்கி, அந்த தாமிர உலோகத்தைத் தங்கமாக மாற்றக் கூடிய சக்தி கொண்டதாக அந்த முப்பூ என்ற உப்பு உள்ளது என்பதை சித்தர்கள் கண்டனர். அதை சித்தர்கள் "**இரசவாதம்**" (Alchemy) என்று அழைத்தனர்.

இந்த முப்பூ என்ற "**குரு மருந்து**" செய்வதற்கான மூலப் பொருட்கள் பூமியில் ஒன்றும், கடலினுள் ஒன்றும், மின்னலில் ஒன்றும் என மூன்றும் உள்ளது. ஒரு சில இடங்களில், பூமியில் பூப்பது பூநாதம் எனும் பூநீர். ஒரு குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே இது பூமியிலிருந்து பூத்து வரும். அதை தண்ணீரில் கரைத்துக் காய்ச்சினால் உப்பாகிவிடும். அடுத்து, கடலில் பூப்பது கடல் நுரை. மின்னலில் பூப்பது காளான் என இவைகளை வைத்து சித்த வைத்தியர்கள் மருந்து செய்வார்கள். அந்த மருந்தைத்தான் குரு மருந்து என்றும்,

முப்பூ என்றும் அழைக்கின்றார்கள். இதை வைத்து சில முறைகளில் சித்தர்கள் சொல்லிய முறையில், செய்ததைச் சாப்பிட்டால் உடலிலிருந்து உயிர் பிரியாது. அதுதான் முப்பூ. இதைத்தான் "**அண்டக்கல்**" **(Philosopher's Stone)** என்பார்கள். நம் நாட்டில் சித்தர்கள் எல்லோரும் இதை அறிந்திருந்தனர். அவ்வாறே, இந்த முப்பூ என்ற இரசவாத கலையை மேல்நாட்டு அறிஞர்களும் அறிந்து வைத்திருந்தார்கள். அவர்களும் அந்த நாட்டின் சித்தர் பெருமக்களே.

முப்பூவை பற்றி பேசாத சித்தர்களே இல்லை எனலாம். எண்ணிக்கையில் அடங்காத செய்முறைகள் கொண்ட இந்த சித்த மருந்து, மனிதன் மரணத்தை வெல்லும் வழியைக் கூறுவதினால், அனைத்து சித்த வைத்தியர்களுக்குமே இதில் ஒரு அலாதி ஆர்வம் உள்ளது.

அனுபவத்தில் பார்க்கும் போது யோகியரும், சித்த மரபினரும், சித்த வைத்தியர்களும் பெரும்பாலும் தான் கையாளும் பொருளே அதாவது பிரணவப்பொருளே சரியானது என்று வாதாடியவர்கள்தான் அதிகம்.

உண்மையை அறிந்த அனுபூதிகள் வாய் திறப்பதில்லை தீக்ஷன்யமான பார்வையும், மவுனமும், ஒரு இளஞ்சிரிப்பையும் மட்டுமே அவர்களிடம் காணமுடியும்.

எப்பொருள் ஆனாலும், அப்பொருள் மெய்ப்பொருள் ஆகிய **நாதம்**, **விந்து** என்ற இரண்டும் சேர்ந்த பரையின்

கலப்பு இல்லாமல், பரவலான இந்த உலகில் எந்த பொருளையும் பார்க்க இயலாது.

முப்பூவுக்குண்டான் **அகர, உகர பொருள்** என்பது, அனைத்து பொருட்களில் மட்டுமில்லை அது இறைவனைப் போல் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

எந்தப்பொருளானாலும் அந்தப் பொருளில் **நாத, விந்து** பொருட்களை பிரித்துக் கூட்டும் நுட்பம் அறிந்தவன், அதை முப்பூவாக முடிக்கும் திறன் படைத்தவன் ஆகின்றான்.

அப்படிப்பட்டவர்கள் இன்னமும் நம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்கள் வாய் திறவா மவுனியாய் மட்டுமே வாழ்ந்து, பிறவாப் பெரு நிலையான இறை நிலையை அடைகிறார்கள்.

அதுதான் பிரணவப்பொருள். அந்த ஒன்றே நிஜம், அந்த ஒன்றே தீர்க்கம், அந்த ஒன்றே மார்க்கம், அந்த ஒன்றை யார் மூலம் அறிவது?

எழுத்து அறிவித்தவன் இறைவன் என்பர். அந்த எழுத்துக்களில் **அ, உ, ம** என்ற மூன்று எழுத்துக்களும் சேர்ந்த மாத்திரத்தில் உண்டாகின்ற முப்பூ “**பிரணவம்**” தான் என்பதை எடுத்துக் கூறக் கூடிய சத்குரு கிடைப்பது என்பது, சித்தமலம் அறுத்து சிவமாகிய சில அதிகாரிகளுக்கு மட்டுமே சாத்தியம் ஆகும். அவர்களால் மட்டுமே சத்குருவை சரணடைந்து

"**பராபக்தி**" செய்ததின் பலனாய், பரம(தன்)னை அறிந்த பரம இரகஷியம் தெரிந்தவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த முப்புவைப்பற்றி கூறும் பொழுது, இதில் அகம், புறம் என இரு பிரிவுகளாகக் கொள்ளலாம்.

இதில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அனைத்தும் சித்தர்களின் பாடல்களில் இருந்து எடுக்கப்பட்டதே.

இதுபற்றி நாம் சித்தர் நூல்களில் இருந்து பார்ப்பதற்கு முன் அன்றைய நாளில் சில பெரியவர்கள் அல்லது மருத்துவர்கள் முப்பு பற்றி கொண்டிருந்த கருத்துக்கள் என்ன?

இது படிப்பவர்களின் இன்றைய இளைய தலை முறையினருக்கும், சித்த மருத்துவர்களுக்கும், முப்பு பற்றிய ஆய்வாளர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும்.

சித்தர் தத்துவங்களை நாம் முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் பரிபாடல்களின் அர்த்தம் புரிந்தால்தான் உண்டு.

ஒரு முறை **யாகோபு ரசவாதம்** செய்முறையில் யோகிகளுக்கான தங்கம் செய்முறை ஒன்றை எளிமையாக கூறி இருந்தார்.

**"செம்பு உருகும்போது, பொட்டலைக் கையாந்த கரையை பிழிந்தால், பத்து மாற்று தங்கமாக மாறும் என்பது தான் அது!"**

ரசவாதம் உண்மைதானா? என்று அலைந்து திரிந்த சித்த மருத்துவர்கள் கையாந்தகரை என்றால் கரிசாலை என்றும், பொற்றளை கையாந்தகரை என்றால் பொன் தழை ஆகிய மஞ்சள் கரிசலாங்கண்ணி என்றும் அறிந்து, அந்தக் கீரையைக் கொண்டுவந்து, செம்பு உருகும் பொது சொட்டு சொட்டாக விட்டதும், அது “**புஸ்**” என்று புகையாய் மாறி, ஒன்றுமே கண்ணிற்குத் தெரியாமல் மறைந்தது மட்டுமே அவர்கள் நடைமுறையில் கண்ட உண்மையாக இருக்கும்.

இரசவாதம் செய்ய விரும்பி, பித்து பிடித்து மனம் நொந்து கெட்டவர்கள்தான் அதிகம். மொத்தத்தில் மூன்று எழுத்துக்களே அவர்களுக்கு பிடிபடவில்லை எனலாம்.

இங்கு கூறப்படுகின்ற சித்த வைத்திய செய்முறை விளக்கங்கள் அனைத்துமே, அடியேன் சித்த வைத்தியத்தை அதீத ஆர்வத்துடன், அன்பான குருநாதன் சந்நிதியில் பயின்று, அவர் போதித்த பல்வேறு மருந்துகளை அனுபவமாக அறிந்து, அதன் வாயிலாக சித்த வைத்தியத்தை சிறப்பாக பலருக்கும் பலனடையும் பொருட்டு, இலவசமாகச் செய்து, சிவ சித்தர்களின் சிறந்த பரிபாசை பாடல்களுக்கு தத்துவார்த்தமாக பொருள் உணர்ந்த உண்மை விளக்கத்தை மட்டுமே, இங்கு விரிவாக உங்களுடன் பகிந்துக் கொள்கின்றேன்.

மூன்றெழுத்தில் என் ‘**மூச்சு**’ இருக்கு என்பதற்கு ஏற்ப, அதே மூன்று எழுத்துக்களைக் கொண்ட “**மனம்**” என்ற ஒன்றை அறியாத மாக்கள் பலரும், அந்த மனம் போனபடி ஆசைகளினால் உந்தப்பட்டு, உயர் ஞானத்தை அடைவதற்கு

பதிலாக, உதவாத தங்கத்தைத் தேடி, தன் வாழ் நாட்களை இழந்தவர்கள் ஏராளம்.

ஆனால், அதே மனம் என்ற மகத்தான சக்தி என்ன என்பதை இந்த மூன்றெழுத்தில் அறிந்துக் கொண்ட அனேகரும் ஆசைகள் அற்று, இருமைகள் அற்று, அந்த ஏக இறைவனை நோக்கி, இனிதாய் திருப்பி, எந்தவிதமான எதிர்ப்பார்ப்பும் இல்லாத "**அன்பு**" என்ற மூன்று எழுத்தை நடைமுறையில் கொண்டு வந்து, அவர்கள் செய்த அந்த "**பக்தி**" என்ற இருமைகள் அற்ற, அநன்ய நிலையில் அனைத்தையும் அணுகிய "**பலன்**" என்ற மூன்று எழுத்தின் வாயிலாக அந்த பக்தனே, சித்தன் ஆகிவிட்டான் என்றால், இதைவிடச் சிறப்பு இந்த மனிதப் பிறவியில் வேறு என்னவாக இருக்க முடியும்? எனவே, இந்த சித்தர்கள் கூறிய மரணமற்ற பெருவாழ்வு வாழும் வழிமுறைகளை மனிதன் அறிந்து, மனிதப் பிறவியின் மகத்துவம் தெரிந்து, என்றும் இன்பத்துடன் இந்த இகபர சுகத்தை இனிதாய் வாழ்ந்திட வேண்டும் என்ற உயர் நோக்கத்தில் இந்த நூலை ஒரு ஆய்வு நூலாகத்தான் உங்களுக்கு அன்புடன் சமர்பிக்கின்றேன்.

"**மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்பவர்க்கு**

**தேங்காய்ப்பால் எதுக்கடி குதம்பாய்**!"

என்று குதம்பைச்சித்தர் பாடல் வரிகள் சொல்லுகின்ற மாங்காய்பாலும், அந்த மகத்தான **முப்பூ** என்ற அமுரியே ஆகும்.

இரசவாத செயலிலும் இந்த அமுரியை அப்படியே உருகும் தாமிரத்தில் ஊற்றினால், அது தங்கமாக மாறும் என்ற ஆசையில், அவ்வாறு ஊற்றி கண்கள் புகைந்து போன சித்த வைத்தியர்களும் உண்டு.

குருவடி தொழுது அறியவேண்டிய இந்த அமுரி செய் முறையை, சர்வ சாதாரணமாக அவ்வளவு எளிதாக அறிந்துக் கொள்ள முடியாது என்பதையும் அறிய வேண்டும்.

அத்துடன், தங்கம் செய்யும் பொருள் ஆசை நீங்கி, உண்மை மெய் பொருளை உணர வேண்டிய உன்னதத் தன்மை ஒருவனுக்கு உண்டானால்தான், அந்த சித்தர்களின் பரிபாசை பாடல்களின் பொருள் விளங்கும் என்பதையும் அறிய வேண்டும்!

**மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்**
**மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்**
**மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்**
**மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே. -** திருமந்திரம் 3046.

எளிமையான '**தமிழ்**' என்ற மூன்றெழுத்து கொண்ட முத்தமிழ் மொழியில் மொழிந்த, '**மூலன்**' என்ற மூன்றெழுத்து பெயரை உடைய முக்தன் கூறிய, மூன்றெழுத்து "**முக்தி**" நிலையை அடையும் அரிதான திறவுகோல் ஒன்று உண்டு என்றால், அது திருமந்திரம் என்பதுதான் தமிழர்களாகிய நமக்குப் பெருமை தரும் விஷயம்.

மூலன் உரை செய்த மூவாயிரம் பாடல்கள்?

எதற்கு அவர் உரை செய்தார்?

**முந்நூறு விதமான மந்திரங்கள்! -**
**முப்பது விதமான உபதேசங்கள்!**

என்றால், அது என்ன? என்று இங்குதான் நாம் சற்று நிதானித்து, அந்த திருமூலனின் திவ்யபாதம் தொட்டு, தீட்சைப் பெறவேண்டும்!

அது '**முப்பது**' அல்ல! "**முப்பு அது**" என்கின்ற உபதேசம்!!

அவ்வாறு அவர் சொன்ன மூன்றும், மூன்று பொருள்கள் அல்ல.

**ஒரே பொருள்! மெய்ப்பொருள்!! அதுவே பிரணவம்!!!**

இன்றும் கூட முப்பு என்பது மூன்று உப்புக்களால் ஆனது! என்றும், அப்படி ஒரு பொருள் இல்லவே இல்லை!! என்றும், இன்றைய நமது சித்த வைத்திய சிரோன்மணிகள் சிறந்த ஆய்வறிக்கை ஒன்றை சமர்ப்பித்து விட்டார்கள்!!

ஆனால், அந்தோ பரிதாபம், அவர்கள் அந்த **உப்பு** என்ற மூன்று எழுத்திலேயே, **முப்பு** செய்ய முடியும் என்ற மூன்று எழுத்துக்களில் சிக்கிக் கொண்டதினால் எடுத்த **முடிவு என்ற** மூன்றெழுத்து, அவர்களை இத்தகைய "**இல்லை**" என்ற

அதே மூன்று எழுத்துக்களில் "**பதில்**" கொடுத்திருப்பது என்பது, அவர்கள் "**அறிவு**" என்ற மூன்றெழுத்தை அறியாத, அறியாமை நிலையை வெட்ட வெளிச்சமாக்குகின்றது என்பதை எளிதாக அறிய முடிகின்றது.

ஈச(தன்)னை காட்டப் பாடிய நமது திருமந்திரம் பாடல்களின் வாயிலாக, உண்மையான அன்பை, பக்தியை இருமைகளற்று, ஏக இறை பூசனை செய்த புண்ணியர்களால் மட்டுமே, இந்த முப்பு என்ற உப்பு எளிதாய் முடிக்க முடியும்.

நன்றி!

**என்றும் அன்புடன்,**

**சுவாமி பிரபஞ்சநாதன்.**

**----------@@@@@---------**

# முப்பூ இரகசியம்

## (அகம்)

### 1. முப்பு - அகம்

நவீன விஞ்ஞானத்தின் கண்ணோட்டம் என்பது, பொருள் (Matter) என்பதை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால் அதனை ஆற்றலாக மட்டுமே மாற்ற முடியும் என்கின்றது.

அதற்கேற்றவாறு, பொருள் (Matter) வெளிப்படுத்தும் அதன் ஆற்றல் சக்தி (Energy) அனுபவமாக வேண்டுமானால், அறிய வேண்டிய அரிதான உண்மை என்னவெனில், அந்த ஒன்றேயான மெய்ப் பொருளை அறிந்தாக வேண்டும்.

மனிதனின் மனிதனாக வாழ, அவனிடம் உள்ள மகத்தான "உயிர்" என்ற மூன்றெழுத்து கொண்ட ஒரு

உன்னதமான **மெய்ப் பொருள்**, அவனது **மெய்** என்ற உடலுக்கு அதாரமாக இருப்பதை அறிந்து, அதனை ஆக்கவோ, அழிக்கவோ, முடியாது. ஆனால், அதனை ஆற்றலாக மாற்றி, அனேக காரியங்களை இந்த உடலின் வாயிலாகச் செய்யக் கூடிய **"சக்தி"** நம் உடலில் உண்டாவதை ஒவ்வொருவரும் அவசியம் உணர்ந்தாக வேண்டும்.

அத்தகைய இந்த சக்திப்பாதைகள் அரூபமானவை.

நம்முடைய உயிரும் அரூபமானது. ஆனாலும் கூட நாம் உருவ உடலில், உயிரோடுதான் வாழ்கின்றோம்.

அரூபமான உயிரையும், உருவமாய் அதற்கு வேறுபட்ட உடலையும் இணைப்பவை **"ஆற்றல் பாதைகள்"** என்பது இன்றைய நவீன விஞ்ஞானமும், நவீன மருத்துவமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

அரூபமான உயிர் என்றும் அழியாமல் இருக்கக் கூடியது. உடலோ தொடர்ந்து மாறுதலுக்கு உட்பட்டு அழிந்து வேறு ஒன்றாய் மாறக் கூடியது.

நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தில் மொத்த வடிவமாய் வெளிப்பட்ட அனைத்து ஸ்தூலப் பொருட்களுமே, இந்த வெட்டவெளியை வெளியேயும், உள்ளேயும் கொண்டே காணப்படுகின்றன.

இந்த வெட்டவெளி என்பது ஒன்றுமில்லாததாகத் தோன்றினாலும் தனக்குள்ளே அனைத்து உயிர் வகைகளுக்கும் உடல் அமைவதற்கு ஆதாரமாய் உள்ள அடிப்படைப் பொருளை அரூப நிலையில் கொண்டுள்ளது ஆகும்.

வெட்டவெளி என்பது அரூபமயமானது. உயிரும் அரூபமயமானது. இரண்டுக்கும் உரிய தொடர்பை உடல் தற்காலிகமாகப் பிரிக்கிறது. இப்படி உடல் வடிவில், எந்தப் பொருள் உயிருக்கும் - பிரபஞ்சவெளிக்கும் இடையில், உடலாய் வடிவம் எடுக்கிறது?

அப்படி வடிவம் எடுக்க அதற்கு எது உதவி செய்கின்றது?

இப்படி உயிருக்கும், உடலுக்கும் உரிய தொடர்பை ஆராய்ந்த சித்தர்கள், அதற்கு பஞ்சபூதங்களுக்கு ஆதாரமான ஒன்றே பயன்படுகிறது எனவும் அறிந்தனர்.

அப்படிப் பயன்படும் அந்த பஞ்ச பூதங்களைக் கையாளவும், அதிலே ஆகாயம் என்ற பூதத்தை அனுபவமாக அனுபவித்து அறிவதில் வெற்றியும் கண்டனர்.

அந்தப்பொருள் அனைத்திற்கும் உயிர் கொடுக்கும் பொருள். அதுவே வெட்டவெளி. அது எங்கும் பரவிக் கிடக்கிறது என்பதையும் சித்தர்கள் கண்டறிந்தனர்.

அந்த வெட்டவெளியே சித்தர்கள் கூறும் அணு.

அணுக்களின் சக்திகள், செயல்பாடுகள் அளவில் அடங்கா. இந்த உலகத்தில் அணுக்கள் ஏழுவிதமாக உள்ளன. ஏழு ஸ்வரங்களாகவும் உள்ளன. ஏழு அடிப்படை நிறங்களாகவும் உள்ளன. இந்த அடிப்படையான ஏழு அணுக்கள் ஒன்றோடு ஒன்று கலந்து பலவிதமான வண்ணங்களையும், பலவிதமான உருவங்களையும், பல விதமான பொருள்களையும் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன.

**வடலூர் வள்ளலார்:** பூத ஆகாயத்தில் உள்ள அணுக்கள் ஏழுவிதமாக, கண்ணுக்குத் தெரியாமல் இயங்கிக் கொண்டுள்ளன.

**ஏழு அணுக்கள்:** இந்த ஏழு அணுக்களை வள்ளலார் கண்டுபிடித்துக் கூறி உள்ளார். அவை வருமாறு,

1. வாலணு.
2. திரவ அணு
3. குரு அணு
4. லகு அணு
5. அணு
6. பரமாணு
7. விபு அணு

என ஏழு விதமான அணுக்கள் அனந்த வண்ண பேதமாய் உள்ளன என்று கூறி உள்ளார்கள். மேற்படி பிரைமா மெட்டீரியா என்ற பிரணவப் பொருளை கைபாகம் செய்பாகம்

செய்யும் போது நமக்கு ஏழு விதமான பொருள்கள் கிடைக்கின்றன.

அவைகள், மூன்று உப்புக்கள். மினரல் ஆப் சல்பர் அல்லது உகரம் எனப்படும். மூன்று திரவங்கள். டிசால்வுடு சால்ட் எனப்படும் பாதரசங்கள். இவை இரண்டும் முதல் பொருளில் தண்ணீராக இருக்கும்.

இறுதியில் ஏழாவதாக மகரம் எனப்படும் டிங்க்சர் மெழுகாகவும் இருக்கும். நீர்மமாகவும் இருக்கும்.

இந்த ஏழு அணுக்களால் ஆன உடலை (ஏழு சக்கரங்கள்) ஏழு அணுக்களால் உருவான பிரணவப் பொருளால் பக்குவப்படுத்துவதின் மூலம் காயசித்தியை பெற்று ஞான நிலையைப் பெற இயலும்.

பிராணாயாம பயிற்சியின் மூலமும் பிராணன் உயிரில் சேரும். மனம் கட்டுப்பட்டவர்களுக்கு பிராணாயாம பயிற்சி கூடத் தேவையில்லை. பிரணவப் பொருளில் உள்ள பிராண சக்தியே போதுமானது. அதன் மூலம் அணிமாதி அஷ்ட சித்திகளும் கைவரப்பெற்று, பேரின்பம் வாய்த்தலும் கைகூடும்.

இப்படி ஒரு வழி முறையை அறிந்த திருமூலர் அதன் உதவியால் மூவாயிரம் ஆண்டு வரை உடலோடு வாழ்ந்ததும் அதன் பின் அழியா நிலை பெற்றதும் வரலாறு.

இப்படிப் பல சித்தர்கள் இன்றளவும் நம்மோடு நாமறியாமல் வாழ்ந்தும் வருகின்றனர். சித்தர்களைப் பொறுத்த வரையிலும் உடலுடன் அமரத்துவம் பெற்று, இறவா நிலையை அடைந்தவர்கள்.

இன்றும் கூட சூட்சும நிலையில் அவர்கள் பலருக்கும் வழிகாட்டி உதவுவதும் நடைபெறுகிறது. சாகாக்கலை, மரணமிலாப் பெருவாழ்வு என்பதெல்லாம் நம்மால் புரிந்துக் கொள்ள முடியாதவையாக இருந்து வந்தது.

இப்போது விஞ்ஞானிகள் ஜீன்ஸ்கள் மீதான தமது ஆராய்ச்சியைத் திருப்பி, விஞ்ஞான பூர்வமாகவே ஆயிரத்து இருநூறு ஆண்டுகாலம் வரையிலும் மரணத்தை மனிதன் தள்ளிப் போட முடியும் என்கிற விபரங்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

ஜீன்ஸ்கள் எதிலும் கைவைக்காமல் '**வெளி**' என்கிற ஒரே ஒரு வான் பொருளைக் கொண்டு, நமது சித்தர்கள் '**சாகாக்கலையை**' சாத்தியமாக்கிக் காட்டியுள்ளனர்.

இதில், இறப்பு என்பதில் நமது உடலுக்கும், உயிருக்கும் என்ன நிகழ்கிறது?

உயிரையும், உடலையும் இணைக்க உதவும் அந்த மெய்ப் பொருள் கட்டு விலகிய பின்பே, உயிர் உடலில் இருந்து வெளியேறுவது நிகழ்கின்றது.

அரூபமான உயிரையும், ரூபமான நிலையில் இருக்கும் உடலையும், இணைக்கும் அந்தப் பொருள் இரண்டிலும் தொடர்பு கொள்ளக்கூடிய திறனையும், அதே சமயம் மாறுதலுக்கு உட்பட்டாலும், அழியாத தன்மையோடும் இருந்துக் கொண்டு இருக்கின்றது.

இப்படிப்பட்ட ஒரு பொருள் இந்தப் பிரபஞ்சத்தின் இருப்பாய், எல்லையற்றதாய், எங்கும் நிறைந்ததாய், அகண்டமாய், ஆதியும், அந்தமும் இல்லாத அந்த வெட்ட வெளியே, அரூப நிலையில் அனைத்திற்கும் அடிப்படைப் பொருளாய் இருந்து வருகிறது.

இதுவே, பஞ்ச பூதங்களுக்கும் ஆதாரமாய், அதன் பல்வேறு படித்தரங்களுக்கு ஏற்றவாறு ஸ்தூல, சூக்ஷும உடல்களை எடுக்கக் கூடிய, கண்ணிற்குப் புலனாகாத பஞ்ச பூதங்களின் இந்த தத்துவங்கள் கண்ணிற்குத் தெரிகின்ற பஞ்ச பூதங்களாக உருவான விதம் பற்றி வேதாந்த நூல்கள் பின்வருமாறு கூறுகின்றன.

நிலத்தை விட நீர் நுண்ணியது, நீரை விட நெருப்பும், நெருப்பை விட காற்றும், காற்றை விட ஆகாசமும் நுண்ணியன.

நுண்ணிய தத்துவங்களினின்றே, அவற்றினும் பருவான தத்துவங்கள் உருவாகின்றன.

(வெட்ட வெளியிலிருந்தே ஆகாசம் உண்டாயிற்று, ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாகின.)

அந்த நிலத்திலே, செடி, கொடி, மரம், என அனைத்து உயிர் வகைகளுக்கும் ஆதாரப் பொருளாய் நில உலகின் மண்ணோடு கலந்த, நீரும், நீரோடு கலந்த வெப்பமும், அந்த வெப்பத்துடன் கலந்த காற்றும், அந்த காற்றுக்கு காரணமான ஆகாயமும் என அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்து இந்த ஸ்தூல உடல் (பரு உடல்) உயிருடன் தொடர்பில் இருக்க வழி வகுக்கின்றது.

அதிலே ஆகாயம் ஒன்றே அனைத்து உயிர் வகைகளின் உற்பத்திக்கும், தோற்றத்திற்கும் ஆதியாய் அமைந்த பொருளாகும்.

அதனாலேயே இதற்கு இறைப்பொருள், மெய்ப்பொருள் என்று சித்தர்கள் பலவாறாகப் பெயரிட்டு இருக்கிறார்கள்.

எந்த ஒரு ஆறறிவு படைத்த பரு உடலும் அல்லது ஓரறிவு படைத்த தாவரமும், தனது அழிவுக்குப் பிறகு மக்கி மண்ணோடு மண்ணாகக் கலந்தாலும் அதிலிருக்கும் இந்த அறிவுப்பொருள் ஒரு போதும் அழிவதில்லை.

மாறாக பிற உயிர் பொருட்களுக்கு உதவும் பொருட்டு இயற்கைச் சுழற்சியில் மாறியமைகிறது.

இந்தப் பொருளை சித்தர்கள் எப்படித் தனித்துப் பிரித்து எடுத்தனர்?

எப்படிப்பட்ட வகையில் பயன்படுத்தி தமது உடல், உயிரை அமர நிலைக்கு உயர்த்தினார்கள் என்பதை இனிக் காணலாம்.

## 2. அண்டமும், பிண்டமும்

அண்டம் பிண்டம் என்பதும் சித்தர்களின் பரிபாசைகளில் ஒன்று. இதுவும் மறைமுகமாக எட்டு இரண்டு என்பதையே குறிக்கும். வடிவ நிலையில் உள்ளதை பிண்டம் எனவும், அரூப நிலையில் உள்ளதை அண்டம் எனவும் சித்தர்கள் குறிப்பிடுவார்கள்.

உயிருக்கு உதவுவதற்காக பஞ்சபூத ஆற்றல்கள் வடிவ நிலையில் உடலாய் நமக்கு அமைகிறது. அந்த நிலையில் அதற்கு பிண்டம் என்று பெயர். இப்படி உடல் உருவாக **நாதம், விந்து** என்ற மூல அணு என்ற விந்துப் பொருள் தேவை.

அதாவது விதை மூலமாக உருவாகும் நிலையில் உள்ள, அத்தனை வடிவப் பொருட்களுமே அதன் அரூப இயல்பை இழந்து, உருவத் தோற்றத்திற்கு வருவதால் பிண்டம் என்கிற பெயரைப் பெறுகின்றன.

அதாவது வடிவமாய் வெளிப்பட்ட வித்துள்ள மூலப் பொருட்களே பிண்டம் ஆகும். இதனையே சித்தர்கள் **நாதம் - சத்தி - மதி** என்றும் கூறுவார்கள்.

இது சித்தர்களின் மெய்ஞான அறிவியல் படி, அண்டம் என்பது வெட்டவெளி நிலையில் இருந்து உலகின் வடிவப் பொருட்கள் உருவாக முதற்காரணமாக அமையும் அணுப் பொருள் ஆகும்.

உடலாய் உருமாறிய பஞ்சபூத ஆற்றலுக்கு தொடர்ந்து உதவ அரூப நிலையில், அதன் இயல்பாய் இருந்துக் கொண்டு, வித்து எதுவும் இல்லாமல் நேரடியாகப் பிறக்கும் வடிவப் பொருள் ஒன்று இறைவனது கருணையால் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

இதனையே சித்தர்கள் "**அண்டம்**" என்பதாகக் குறிப்பிடுவார்கள். இது வித்தின்றி விளைவதால் செம்பொருள் என்றும் கூறுவர்.

இது நமது உடலின் வடிவக் கட்டமைப்பை திரும்பவும் அரூப நிலையின் பிராண ஆற்றலாய் மாற்றி உயர்த்தும் தன்மை உடையதாகும்.

இப்படி நமது உடலின் தன்மையானது திரும்பவும் அண்டம் என்கிற பொருளால் மாற்றப்பட்ட நிலையில் மட்டுமே உடல் பிராண ஆற்றலை நேரடியாகக் கிரகித்துப் பயன்படுத்தும் வசதியை அடையும்.

நமது உடலின் உள்ளாக இருக்கும் உயிருக்கு உதவும் பிராண ஆற்றலை முழுவதுமாகக் கட்டுப்படுத்தி முறையாக உடலில் நிலை பெறச் செய்வதும் இந்த அண்டம் என்கிற பொருளால் மட்டுமே சாத்தியமாகும்.

இப்படி நமது உடலின் இயல்பை முற்றிலும் வேறு விதமாக தலைகீழாய் மாற்றக் கூடியதால் இதனை ஜோதி எனவும் சித்தர்கள் கூறுவார்கள்.

அண்டம் என்கிற இந்தப் பொருளும் எட்டு இரண்டில் ஒன்றாகும். அண்டம் என்கிற இந்தப் பொருளை அறிந்து அதனைத் திருத்தி அதன் மூலமாகப் பிண்டத்தைத் திருத்தும் போது மட்டுமே நமக்கு உடல் அளவில் பிராணாயாமம் - யோகம் முதலியவைகள் சித்தியாகும்.

இவ்வாறு உடலை எட்டு இரண்டால் முறைப்படுத்தாமல் செய்யும் யோகமும், பிராணாயாமமும் உடலை அழிக்கவே செய்யும். அதன்றி உடலில் தீவிர நோய்கள் உருவாகவும் காரணமாகும்.

பிராணாயாமப் பயிற்சியில் விவரிக்கப்படும் நாடிசுத்தி என்கிற பயிற்சியானது பிராணன் செல்கிற பாதைகளைச் சுத்தம் செய்யும் ஒரு முறையாகும்.

உடல் பிராணனை நேரடியாகப் பயன்படுத்தும் வசதியை அடைந்த பிறகு நாடி சுத்தியால் திறக்கப்படும் பாதைகள் நம் உயிருடன் இணைப்புப் பெறும்.

அதன் மூலமாகப் பிராணாயாமப் பயிற்சி மூலம் உடலுள் சேரும் பிராண ஆற்றல் உயிரால் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுவிடும்.

இப்படி முறையான பிராணாயாமப் பயிற்சியில் அதைப் பழகும் சாதகருக்கு எவ்விதமான சிரமமும் இருக்காது. இவ்வாறு அல்லாமல் நேரடியாக நாடி சுத்தியின் மூலம் திறக்கப்படும் பிராணப் பாதைகள் உயிர் ஆற்றலில் இணைப்புப் பெறாத நிலையில் உடலில் அதிகமாகச் சேரும் பிராண ஆற்றல் சாதகருக்கு பலவிதமான சிரமங்களை உண்டு பண்ணும்.

பிராணாயாமம் அதிகமாகச் செய்யும் போது உடலின் உள்ளாக உயிராற்றலோடு இணைப்பு ஏற்படாமல் திறக்கப்பட்ட பிராணப்பாதைகளில் நிரம்பும் பிராண ஆற்றல், பயன்படும் முக்கிய பகுதியை அடைய முடியாமல் உடலின் ரத்த ஓட்டத்தில் நேரடியாகக் கலக்கத் தொடங்கும்.

இது ஆரம்பத்தில் நம்மில் அதிகமான புத்துணர்வை ஏற்படுத்தும். தொடரும் பிராணாயாமப் பயிற்சியால் இப்படி நமது ரத்த ஓட்டத்தில் அதிகமாக கலக்கும் பிராண ஆற்றல் வெளியேற முயலும். அதற்கு நம்மிடம் ஒரு வழி மட்டுமே வசதியாக இருக்கிறது.

நம்முடைய முழு வாழ்விலும் திறந்திருக்கும் மூலாதாரம் என்பதன் மூலமாக வெளியேற முயலும் பிராண ஆற்றலுக்கு

வழியாய் அமைவது நம்முடைய பிறப்பு உறுப்புக்கள் மட்டுமே.

இதன் காரணமாக நேரடிப் பிராணாயாமம் பயிலும் குருவும் சரி, சாதகரும் சரி, தமது தீவிர சாதனைகளுக்கு ஏற்ப அதிகமான காம உணர்வால் தினமும் சிரமப்படுவதும், அதன் மூலம் உடல் நலம் பாழாகுவதையும் பலரும் தமது அனுபவத்தில் இன்று வரையிலும் அறிவார்கள்.

இப்படி தியானம், யோகம், பிராணாயாமம் என்று எந்த முறையைப் பயின்றாலும் சரி, சற்று தீவிரம் காட்டும் நிலையில் உடனடியாக காம உணர்வு தலை தூக்குவதை அறிந்தும் அதனை எப்படி சரி செய்வது?

அதற்கான சரியான வழி எது? என்பதெல்லாம் அறிய முடியாமல் உள்ளுக்குள்ளேயே புழுங்குவார்கள்.

வெளிப்படையாக தமது குருவிடம் சொல்லவும் அச்சம்.

காரணம் குருநாதர் தம்மை ஆன்மீகப் பயிற்சிக்கு தகுதி இல்லாதவன் என்று கூறிவிடுவாரோ அல்லது பயிற்சியிலிருந்து விலக்கி விடுவாரோ என்கிற பயமே காரணமாகும்.

இது பற்றிய விஷயத்தில் சாதகரை விடவும் மிகுந்த வேதனை குருவுக்குத்தான் எனலாம். காரணம் பல வருட பயிற்சிக்குப் பிறகும் கூடத் தமக்கும் அதே காமத்திலும்,

கவலையிலும் தான் இருக்கும் தன் நிலையே குருவும் அறிவார்.

ஆனால் எப்படி எவரிடம் சென்று கேட்டு தெளிவு பெறுவது? இல்லறத்தில் இருக்கும் குருவுக்கும் கூட இதே நிலைதான்.

இதுவரையிலும் பலவருடத் தீவிர சாதனைக்குப் பிறகும் தமக்கே ஏன் இவ்வித நிலை தொடர்கிறது என்பதைப் பற்றி பல குருமார்கள் சரியாக எதுவும் அறிய மாட்டார்கள்.

அதற்கு அவர்களுக்கு நேரமே இருக்காது. வயதாகி உடலில் வலு இல்லாத நிலையிலும் கூடத் தம்மை இந்த உணர்வு பாடாய்ப் படுத்துவதை மிக நன்றாக ஒவ்வொரு குருவும் அறிவார்கள்.

அதுமட்டுமல்ல தம்முடைய முழுச் சாதனையும் இந்த ஒரு விசயத்தில் ஒன்றும் இல்லாமல் போவதையும் அதிலிருந்து தப்பிக்கவுமே நேரம் சரியாக இருக்கிறது என்பதையும் கூட மிக நன்றாக அறிவார்கள்.

வழி எதுவும் புலப்படாததால் தாமே எதுவும் செய்ய முடியாத இந்த நிலையில் இது பற்றி எந்த கேள்வி எழுந்தாலும் தவிர்த்துவிடவே முயலுவார்கள்.

எந்த அளவுக்கு அதிலிருந்து விடுபட வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த அளவை விட அவரது தொல்லைகள் அதிகம் ஆகும்.

இறையுணர்வு அனுபவம் பெற்ற எவருமே இந்த எட்டு இரண்டு என்பதைப் பயன்படுத்தாமல் அடைந்திருக்க முடியாது.

இதனை அறியாதவரை எவரும் எவ்விதமான ஆன்மீக முறையிலும் உண்மை வளர்ச்சி பெறுவதோ அல்லது ஞான நிலை அடைவதோ இயலாது.

இவ்விதம் உண்மை அனுபவம் பெற்ற எவருமே எட்டும், இரண்டும் என்பதைப் பற்றிச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

உடல் உருவாகும் நிலையில் தொடங்கி, உடலில் இருந்து உயிர் பிரியும் காலம் வரையிலும், அவற்றுக்கு உதவும் இந்தப் பொருட்கள் பஞ்சபூதப் பொருட்களே ஆகும்.

இவற்றில் ஒன்றை அப்பு எனவும் மற்றொன்றை உப்பு எனவும் சித்தர்கள் கூறுகின்றனர்.

இவற்றின் நிறமோ ஒன்று வெள்ளையாகவும், மற்றது சிகப்பாகவும் இருக்கும்.

சிவப்பான பொருளை வாலைப்பெண் என்றும் அவளே தேவி என்றும் சித்தர்கள் பூசிப்பார்கள்.

அழியும் நமது உடலை இந்த இரண்டும் சொரூபசித்தி அடையும் அளவுக்கும், காயசித்தி என்கிற அழியாத தன்மை கொண்டதாகவும் மாற்றக்கூடியதாகும்.

நம்முடைய உடலில் 'பிண்ட.' அணுக் கட்டமைப்பு இருக்கும் வரையிலும் அதனை நம்மால் புகைப்படம் எடுக்க முடியும். அதுவே அண்ட அணுக் கட்டமைப்பாய் மாறிய நிலையில் உடலில் பஞ்சபூத ஆற்றல்கள் தம்முடைய ஊடுருவும் அரூபத்தன்மையை அடையும்.

அப்படிப்பட்ட நிலையில் ஒளி ஊடுருவும் என்பதால் அப்போது எடுக்கப்படும் புகைப்படம் பதிவாகாது. வள்ளலாரின் உருவம் புகைப்படத்தில் பதிவாகாமல் விடுபட்டது இப்படிப்பட்ட சொரூப சித்தியை அவர் அடைந்ததால் ஏற்பட்டதாகும்.

சொரூப சித்தியை அடைய முயன்றவர்கள் பெரும்பாலும் தமது உடலுடனேயே அந்த நிலைக்கு மாறி விடுவார்கள்.

அப்படி அவர்கள் உடலோடு செல்லாமல் உடலை விட்டுச் செல்லும் நிலையில், அல்லது சொரூப சித்தி முழுமை அடையாத நிலையில் உடலில் இருந்து உயிர் பிரியுமானால் அப்படிப்பட்டவரின் உடல் அழியாமல் நிலைபெறும்.

வெட்ட வெளியிலேயே இருக்கும் இப்படிப்பட்ட உடல்கள் அழியாமல் இருப்பதற்குரிய காரணம் இதுவாகும்.

சித்தர்களால் பயன்படுத்தப்படும் இந்த அதி முக்கியமான இரண்டும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் மறைந்து இருப்பதாகும்.

இவற்றில் ஒன்றை நாம் குழந்தைகளின் விளையாட்டில் காண முடியும். மற்றது வெளியில் விளைவதாகும். இவை இரண்டும் இறைவன் திருவருளால் மட்டும் எளிதாக அறியக் கூடியதாகும். இந்த இரண்டில் ஒன்று குருவாகும்.

"**குருவில்லா வித்தை பாழ்**" என்பதும், தொட்டுக்காட்டாத வித்தை பலிக்காது என்கிற பழமொழிகளும், இந்த குறிப்பிட்ட முறையைப்பற்றி மட்டுமே விவரிக்க உருவானதாகும்.

இந்த இரண்டையும் முறை தவறிப் பயன்படுத்தும் நிலையில் தான் (விதை நிலையில்) இவை இரண்டின் மாறுபாட்டால் உடலில் **பிணி, மூப்பு, நரை, திரை** முதலானவைகள் உருவாகும் என்பது சித்தர்களது தெளிந்த அனுபவ ஆராய்ச்சி முடிவாகும்.

இந்த இரண்டில் ஒன்று நிலத்தோடு தொடர்பு உள்ளதாகவும், மற்றது நீரிலே அழியாததாகவும் இருப்பதாகும். இந்த இரண்டும் ஒன்றுபட்ட நிலையில், நெருப்பிலே பிறக்கும் ஒரு பொருள் காயசித்திக்கும், சித்த வைத்தியத்துக்கும் அதி முக்கியமாய் பயன்படுகின்ற முப்புக் குருவாகும்.

வித்திலே பிறப்பதை சிவத்தின் கூறான **சத்தி** எனவும், வித்தின்றிப் பிறப்பதை சத்தியின் கூறான **சிவம்** எனவும், முதலாவதைச் **சுப்ரமணி** எனவும், பிந்தியதை **கணபதி** எனவும் கூடச் சித்தர்கள் கூறுவார்கள்.

சிவ பூசை, சத்தி பூசை, வாம பூசை, சோம பூசை என்பதெல்லாம் சித்தர்களின் மறை பொருள் பரிபாசையாகும். நேரிடையான வெறும் பூசை முறைகளால் எவ்விதமான பலனும் ஏற்படாது. அந்த மறைபொருள் பற்றி, ஒரு எல்லை வரை தான் விவரிக்கவும் சித்தர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

விதியமைப்பும், குருவின் பூரண அருளும் இவற்றுக் கெல்லாம் மேலாக இறைவனின் பரிபூரண திருவருளும் துணைப் புரிந்தாலொழிய **எட்டும், இரண்டையும்** அறிவதும், அப்பியாசம் செய்து உண்மைத் தெளிவு பெறுவதும் என்பது இயலாததாகும்.

நமக்கெல்லாம் பூரண குருவருளும், இறைவன் திருவருளும் துணை புரிந்து உதவட்டும். சரியான தேடுதலும், ஆழமான ஆர்வனுன் உள்ள சாதகர்களும் சரியானத் தெளிவை அடையக் கருணைக் கொண்ட இறைவனை "**அன்பே சிவம்**" என்றறிந்து, அனைத்து உயிர்களிலும் அந்த இறையைக் கண்டு அன்பு செய்வது ஒன்றே அழியாத பேரின்பத்திற்கான பெருவழியாகும்.

## 3. <u>தசதீட்சை</u>

(இரசமணியின் உண்மை விளக்கம்.)

எட்டும் இரண்டும் தசதீட்சையாகும். அகார உகாரத்தில் மகாரம் பிறக்கும். சூரிய சந்திரனோடு **வெளி** சேர அகாரம் பிறக்கும். இடகலை - பிங்கலை இரண்டும் ஒடுங்க சுழுமுனை திறக்கும்.

மேற்கண்டவை யாவும் பரிபாசையில் சித்தர்களால் குறிப்பிடப்படும் ஒரு பொருளைக் குறிப்பதாகும்.

அது குரு மருந்து எனப்படும் **முப்பு குரு** ஆகும்.

இதனையே அண்டம், பிண்டம், நாதம், விந்து, அகரம், உகரம், ரவி, மதி, மீனம், மேசம், கோசம், பீசம், ஆண், பெண், சத்தி, சிவம், கணபதி, சுப்ரமணி, அப்பு, உப்பு, சிற்றண்டம், பேரண்டம், வாசி, சுழினை என்று பல்வேறு பெயர்களில் சித்தர்களால் விவரிக்கப்படும் பொருள்கள் எல்லாம் ஒன்றே.

அந்த ஒரே பொருளிலேயே இரண்டும் கலந்து கட்டுண்டு கிடக்கிறது. அப்படிப்பட்ட சிவப்பொருளே "**அகாரம்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

இதனை அறிவதற்கே பல வருடங்கள் ஆகும்.

அதுவும் குருவால் தொட்டுக் காட்டப்படாமல் தெளிவு பெறுவது என்பது மிகவும் அரிது ஆகும். இந்த உபதேசம் கூட விட்டகுறை, தொட்ட குறை உள்ளவர்களுக்கே வாய்க்கும் என்கிறார்கள் சித்தர்கள்.

இதனை உபதேசிக்கும் முன்பாக ஒரு சீடனை தக்க விதத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் சோதித்த பின்னரே ஒவ்வொன்றாக போதிக்க வேண்டும் என்றும் விதிமுறை செய்துள்ளனர் சித்தர்கள்.

சித்தர் பாடல்களில் அண்டம், கடுக்காய், முட்டையோடு, ஏகமூலி, வல்லாரை, திருநீற்றுப் பச்சிலை, குருவண்டு, தலைப்பிண்டம், அஸ்தி, கருங்குருவி என்றெல்லாம் விவரிக்கப்படும் பொருட்கள் வெறும் பரிபாசைகள் என்பதை வாத வைத்திய முறைகளில் அனுபவம் பெற முயன்றவர்கள் ஆரம்பத்திலேயே புரிந்துகொள்வார்கள்.

தமது செயல் முறைகள் பூர்த்தியாகாமல் போகும் நிலையில் இதை எளிதாக உணர்ந்து கொள்வார்கள். ஆகவே வாதமானாலும் சரி, வைத்தியமானாலும் சரி ஆதிப்பொருள் இதுவென அறியாத நிலையில் அது முழுமை பெறாது.

அகரத்திற்கு அண்டக்கல் முதலாய் 320 பெயர்கள் உண்டு. அதனை அகத்தியர் பரிபாசை 500 ல் கண்டு தெளிக.

அதனால்தான் இதனை எல்லோராலும் அறிவது முடியாது.

இப்படிப்பட்ட அகாரத்தை முறைப்படி வேதிக்கும் போது அதில் உள்ள ரசமும், கெந்தியும், வாயுவும் தனித்தனியே பிரிய இறுதியாக பருதி என்னும் மண்ணின் கூறாகிய சாம்பலும் மிஞ்சும்.

ஆக அகாரத்திலிருந்து நான்கு பொருட்கள் பெறப்படும். இவைகளை ஏன் பிரிக்க வேண்டும்.?

அகாரத்தில் கட்டுண்ட நிலையில் உள்ள பஞ்ச பூதங்களைப் பிரிப்பதால் செயல்படாது ஒடுங்கும் தன்மைக்கு உரிய அவைகளின் கட்டு அவிழ்க்கப்படுகிறது.

இதனால் அவைகள் திரும்பவும் செயல்படத் துவங்குகின்றன.

ஒடுங்கிய பஞ்சபூதங்களை செயல்படும் நிலைக்கு கொண்டு வரும் போது அவைகளின் செயல்திறன் மிக அற்புதமாக இருக்கும்.

நீராக உள்ளவற்றை கெட்டியாக்கும். கெட்டியாக உள்ளவற்றை சுண்ணமாக்கி நீராக மாற்றும். இப்படி அவைகளால் மாற்றப்படாத பொருட்களே இல்லை.

இப்படி பஞ்சபூதங்களைப் பிரித்து அவைகளை "**சிவயநம**" என்னும் முறையில் திரும்ப இணைக்கும் நிலையில் அதிலிருந்து இனிப்புச் சுவையுடையதும், தேன் போன்றதும், தெள்ளமுது என்று கூறத்தக்கதாகவும் உள்ள அமிர்தம் கிடைக்கிறது.

இதுவே பெருமருந்து. இதனை நீராக, மெழுகாக, குழம்பாக, சுண்ணமாகப் பெறுகின்ற பல முறைகள் சித்தர்களால் பலவிதமாக விளக்கப்படுகின்றன.

இந்தப் பொருளை உடலில் சேர்ப்பது அமுரி தாரணை, அமிர்த தாரணை, வாசி தாரணை என பலவாறாகக் கூறப்படும்.

"**வாசியே அமுதமென அறியாது கும்பித்து மாண்டோர் கோடி**" என்பார் புலஸ்தியர் என்னும் சித்தர். இவர் அகத்தியரின் சீடர்களில் ஒருவர் ஆவார்.

இந்த முறையில் அப்பியாசம் செய்யும் ஒருவருக்கு அவரது சுவாசமாகிய 21600 ம் மூல நாடியில் ஒடுங்கி குண்டலி ஆற்றலை உச்சிக்குக் கொண்டு வந்து உச்சிக் குழியைத் திறக்கும்.

இதன் பிறகு உடலில் உள்ள அண்ணாக்கும், உண்ணாக்கும் இணைய உடலில் உள்ள மண்டலம் திறந்து அமிர்தம் கசிந்து இறங்கும்.

இந்நிலையில் சாதகரது சுவாசங்கள் இடகலை, பிங்களை தானாகவே ஒடுங்கிச் சுழுமுனை திறக்கக் கும்பகம் ஏற்பட்டுச் சமாதி நிலை உருவாகும்.

சமாதி நிலை என்பது சொரூப சித்திக்குரிய துவக்க நிலை அனுபவம் ஆகும். அகாரத்தைப் பக்குவப்படுத்திப் பெறும் பொருட்களாகிய சிகாரம் முதல் உகாரம், மகாரம், நகாரம், யகாரம், வகாரம் ஆகியவற்றையும் அடைந்து முறைப்படி உடலில் சேர்ப்பதே “**தசதீட்சை**” எனப்படும்.

இதற்குரிய கால அளவுகள் பத்து முதல் இருபத்தி இரண்டு ஆண்டுகள் வரை ஆகும். முதல் பத்து ஆண்டுக் கால அப்பியாசமே சித்தர்களால் **தசதீட்சை** என்று விவரிக்கப் படுகிறது.

இப்படிப் பெறப்படும் முப்பு குருவால் பாதரசத்தைத் தூய்மைப்படுத்தி நெருப்புக்கு ஓடாத மணியாகக் கட்டலாம்.

இப்படி ரசத்தைக் கட்டி மணியாக்குவது முப்பு குரு சரியாக முழுமையாக உள்ளதா என்பதை அறிவதற்குரிய ஒரு சோதனையாகும்.

அடுத்து ஒரு முறையில் பாதரசத்தை முப்பு குருவால் கட்டுப்படுத்தும் போது அது உயர்ந்த உலோகமாக மாறுகிறது.

இது முப்பு குரு சரியாக சித்தியானதற்கு அடையாளமாகும்.

அகாரப் பொருளால் கட்டப்படும் பாதரச மணிக்குச் சிறப்பு குணங்கள் உண்டு. அதனை உள்ளங்கையில் வைத்து மூடிக்கொண்டால் நமது உடலின் மூலாதாரம் முழுமையாக இயங்கத் துவங்கும்.

இந்த நிலையில் மணியை வைத்திருப்பவரிடம் ஒரு பெரிய மாற்றம் ஏற்படும். அதாவது உடலின் சுழுமுனை மேலெழும்பத் துவங்கி உடல் முழுவதும் ஆற்றல் அதிர்வாய் பெருகுவதை உணர முடியும். மணியைக் கையிலிருந்து எடுத்த பிறகும் கூடச் சிறிது நேரம் வரை அந்த அதிர்வு நம் உடலில் இருக்கும்.

ககன மணி எனப்படும் ஒரு வகை மணியானது வாயில் இட்டால் உடலிலிருந்து உயிரைப் பிரித்து மேலே தூக்கும். கற்ப முறையில் பயிற்சி செய்து தசதீட்சை முடித்தவர்க்கு இதே மணி அவரது உடலையும் உயிரையும் சேர்த்தே தூக்கும்.

ஆம்! புவிஈர்ப்பு விசைக்கு எதிராக நமது உடல் மேலே எழும்பும் ஆற்றல் இந்த மணியால் ஏற்படும்.

சாதாரணமானவர்கள் இதுபோன்ற உண்மை மணியை வாயில் போட்டால் அவர்களது உடலைக் கீழே தள்ளி உயிரை மட்டும் பிரித்துத் தூக்கும்.

இது பாதரச மணியின் இயல்பாகும். ஆனால் இப்போது பலரால் விற்கப்படும் மணிகள் யாவும் ஒன்றுக்கும் உதவாதவையாகும். அவைகளைச் சிறிது நாட்கள் காற்றுப்

படுமாறு வைத்து விட்டால் அவைகளின் பாதரச மேற் பூச்சு கழன்று வந்து விடும். இதைத் தவிர்க்க பாதரச மணிக்கு நீரால், பாலால், சந்தனத்தால் அபிசேகம் செய்ய வேண்டும் என்று கூறிவிடுவார்கள்.

இப்போது வேறு பல முறைகள் மூலமும் மணிகள் கட்டப்படுகின்றன. எவ்வகையில் மணி கட்டப்பட்டாலும் அதனால் எந்த பலனும் ஏற்படாது. முப்பு குருவால் அல்லது அமுரியால் கட்டப்படும் மணியே அதற்கு சக்தி தரும்.

பாதரசம் என்பது உடல் மட்டுமே ஆகும்.

உடல் தனித்து இயங்க சக்தி அற்றது. அகரமே அதற்கு உயிராகும். உடலும் உயிரும் இணைந்தால் தான் இயக்கம் ஏற்படும்.

பாதரசத்தின் மூலம் எளிய முறையிலும் மணி செய்ய முடியும். ஆனால் அதன் மூலமாக எவ்விதமான சக்தியையும் பெற முடியாது.

துறவிகள் பொருள் சேர்ப்பதற்காக இப்போது பாதரச மணிகள் செய்து பிழைப்பு நடத்துகிறார்கள். ஆனால் இம்முறையில் செய்யப்பட்ட மணிகளை அணிந்தால் உடலில் மணிப்படும் இடங்களில் பாதரசத்தின் விசத்தன்மையும் குளிர்ச்சியும் சேர்ந்து, உடலில் கறுப்பு நிற அடையாளத்தை ஏற்படுத்தும்.

அவ்வித அடையாளம் ஏற்பட்டால் அந்த மணி அணியத்தக்கதல்ல என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இது ரசவாதத்தில் பாதரசத்தைக் கட்டும் வித்தையில் ஒன்றாகும்.

சுத்தம் செய்யாத பாதரசத்தால் செய்யப்படும் இவ்வித மணிகளை அணிவது வேறு வகையில் பயன்படுத்துவது உடல் நலத்திற்கு பலவிதமான கெடுதல்களை உருவாக்கும்.

எனவே இவ்விதம் ரசமணிகளைப் பயனபடுத்துவோர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



சரி இந்த இரசமணி செய்வதற்கான முப்பு குரு மருந்து எங்கே கிடைக்கும்?

கடைகளில் கிடைக்கக்கூடியதா? அல்லது,

பூமியில் எங்காவது விளைகின்றதா?

அல்லது, சித்த மருத்துவர்கள் வைத்திருப்பார்களா?

அவ்வாறு சித்த வைத்தியர்கள் முப்பு முடித்து, மருந்து உட்கொண்டிருந்தார்கள் எனில் அவர்கள் மரணத்தினை வென்று இன்று நம்மிடையே உயிருடன், உடலுடன் நடமாடிக் கொண்டிருக்க வேண்டுமில்லையா?

ஏன் அவர்களை காணவில்லை?

தேகத்தினை விட்டு விட்டு சமாதியென்ற பெயரில் மண்ணுக்குள் மறைத்துக்கொண்டு, அவர்கள் அங்கு என்ன செய்கின்றார்கள்?

அதனால் யாருக்கு என்ன இலாபம்?

தானே தன் தேகத்தினை மறைத்துக் கொண்டு, மண்ணில் ஒழிந்துக் கொண்டு, மற்றவர்களின் தேகத்தினை எப்படி காப்பாற்ற போகின்றார்கள்?

உண்மையிலேயே முப்பு எதற்கு? முப்பு உள்ளதா?

அதனை உண்டால் மரணத்தினை வெல்ல முடியுமா?

இந்த முப்பு அண்டத்தில் (வெளியில்) உள்ளதா? இல்லை பிண்டத்தில் (நம் உள்ளே) உள்ளதா? இதைப்பற்றிய ஆராய்ச்சிகளே இனி நாம் காண இருக்கின்ற இந்த முப்பூ இரகசியம்.

## 4. அண்ட, பிண்ட இரகசியம்.

**அகாரம் - உகாரம்** என்பது இரண்டு பொருட்களாக விவரிக்கப்பட்டிருந்தாலும் இரண்டும் ஒரே பொருளில் இருந்து வெளிப்படும் தனிப்பொருளே ஆகும்.

**அகாரம்** என்பது ஆதிப்பொருள். அதிலிருந்து பெறப்படும் பொருளே **உகாரம்.** ஆக அகாரத்தின் உள்ளாகவே உகாரம் என்பது இருக்கிறது.

இதைப்பிரித்து திரும்பவும் இணைக்கும் நிலையில் பெறப்படுவதே **மகாரம்** எனப்படும் பொருளாகும்.

இதனை **அ-உ-ம** சேர்ந்த நிலையில் ஓங்காரப் பொருள் என்பார்கள். இப்படிப் பெறப்படும் பொருள் இரவில் ஒளி வீசும் தன்மை உள்ள ஜோதிப் பொருளாய் இருக்கும்.

**அகாரம்** என்பதை அகத்தியர் வான் பொருள் ஆகிய **விண்** என்றும், **வெளி** என்றும், அது பஞ்சபூதத்தில் ஒன்று என்றும் விவரிக்கிறார்.

**"மகத்தான சித்தர்களும் சொல்லார் பாரே**
**சொல்லாத வான்பொருள் தான் வெளியாய் காணும்"**

- அகத்தியர் பூசா விதி.

இதை வள்ளுவர் கூறும் போது, **"ஒன்றாகி எப்போதும் அழியா அண்டம் ஓகோகோ சித்தர் உண்ணும் அண்டம் தானே"** வள்ளுவர் முப்பு சூத்திரம்.

அண்டம் என்பதை சுட்டிக் காட்ட, சித்தர்கள் கையாண்ட பற்பல பரிபாஷைகள் அல்லது இடுகுறிகள் இங்கு கீழே கொடுக்கப்படுகின்றன.

(க) பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், என்றும்
(உ) மண், நீர், நெருப்பு, காற்று, வெளி, என்றும்
(ங) பிரமா, விஷ்ணு, ருத்திரன், மயேஸ்வரன், சதாசிவன், என்றும்
(ச) சிருஷ்டி, திதி, சம்ஹ்காரம், திரோபவம், அனுக்கிரகம், என்றும்
(ரு) அ, இ, உ, எ, ஒ, என்றும்
(சா) ந, ம, சி, வ, ய, என்றும்
(எ) ஐயும், கிலியும், சவ்வும், மவ்வும் ஶ்ரீயும், என்றும்
(அ) கோட்டை, மதில், மலை, வச்சிரம், அண்டம் என்றும்
(கூ) கம்பியுப்பு, பாரையுப்பு, கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு என்றும்

மேற்கண்ட ஐந்து வகைப் பிரிவுகளில் இரண்டு அக்ஷரங்களைக் கொண்டு, அதற்கு உதாரணமாக மேற்கண்ட வகைகளில் அஷ்ரபாஷை அல்லது பஞ்சாசாரம், அல்லது மூலமந்திரம் என்னும் வகையை எடுத்து விவரிப்போம்.

மேற்கண்ட வகையில் பழுதில்லாத இரண்டெழுத்தாவன '**ந**'காரமும், 'சி'காரமுமாம். அதாவது "**நசி**"யாம் இவற்றின் முறையே '**அ**'காரமெனவும், 'உ'காரமெனவும் கூறுவார்கள்.

அவைகள் முறையே,

**அகாரம்** சிவமாம், **உகாரம்** சத்தியாம்.

இன்னும் **அகாரம்** நாதமாம், **உகாரம்** விந்துவாம்.
இவ்விதமே **அகாரம்** அண்டமாம், **உகாரம்** பிண்டமாம்.

இப்படியே **அகாரம்** உயிராம். **உகாரம்** உடலாம்.

இங்கணமே **அகாரம்** வானமாம், **உகாரம்** பூமியாம்.

இக்காரணங்களாலேயே **உடலை** சத்தி என்றும், **உயிரை** சிவம் என்றும் கூறுகிறார்கள்.

***அ, உ,*** என்னும் இரண்டையும் வானமென்றும் கூறுகிறார்கள்.

எப்படியெனில் நாதமும், விந்துவும் சேர்ந்தால் எவ்விதம் உருத்தரிக்கிறதோ அவ்விதமே தமிழில் எட்டு என்னும் எண் இலக்கக் குறிப்பாகிய "**அ**" வுடன், இரண்டு என்னும் குறியீடாகிய "**உ**" வைச் சேர்த்தால் **(10)** பத்தென்னும் எண் குறிப்பாகிய "**ய**" வருகின்றது.

இந்த **"ய"** என்னும் எண்னே, யகார உயிர், மெய் எழுத்தாகின்றது.

இந்தவகையில் யகராமானது **ந, ம, சி, வ, ய,** என்னும் வகையில், ஆகாய அம்சமாயிருப்பதே காரணமாகும்.

(எனது கருத்து **"அ"** என்னும் குறியீடு, தமிழில் எட்டு **(8)** என்னும் எண் எழுத்தை குறிக்கும் சொல்லாகும். அதுப்போன்றே, **"உ"** என்னும் குறியீடு, தமிழில் இரண்டு **(2)** என்னும் எண் எழுத்தை குறிக்கும் சொல்லாகும்.

அந்த வகையிலே, எட்டு **(8)** என்பது எண்சாண் உடல் என்று, நம் பரு உடலைக் குறிப்பதாகும்.

**"உ"** என்பது தமிழில் இரண்டைக் குறிக்கும் சொல்லாகும் இந்த இரண்டு என்னும் எழுத்து தமிழில் உயிர் எழுத்து வரிசையில் வரும் எழுத்தாகும்.

இது நம் உடலின் இயக்கத்திற்கு காரணமான உயிரைக் குறிப்பதாகும்.

**உயிரும் + உடல் இணைப்பே இயக்கமாகும்.**

இதைத்தான் சித்தர்கள் குறியீடாகக் காட்டியுள்ளார்கள்.

அகாரத்திலிருந்து பக்குவப்படுத்தப்பட்ட அண்டப் பொருள் சித்தர்களால் உடலோடு சேர்க்கும் விதத்தில் உண்ணக்கூடிய ஒரு பொருளாகவும் இருந்து வருகிறது.

அகாரம் பஞ்சபூதங்களில் ஆகாயக்கூறைச் சேர்ந்தது.

விண்ணில் விளைந்து மண்ணுக்குள் வளர்வதால், நீரிலே பிறப்பதால் இதனை **அப்புப் பொருள்** என்றும், **பரிதி** என்றும், **விண்** என்றும், **வெளி** என்றும், இதனுள் தீயும் இருப்பதால் **வள்ளி** என்றும் சித்தர்கள் அழைப்பார்கள்.

மேலும், பஞ்சபூதமாகிய **பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்** என்னும் ஐந்தையும் அதாவது, **நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்** என்னும் இவற்றினை **பெண், ஆண்** என இருவகையாகவும் அடக்கிச் சொல்வார்கள்.

அதன் விபரம் **ஆகாயம், காற்று, நெருப்பு** மூன்றும் **ஆண்.**

**நிலம், நீர்** இரண்டும் **பெண்.**

ஆகையால் ஆண், பெண் என்னும் **அ, உ** சேர்ந்து **‘ஓ’** என்னும் “**பிண்டம்**” உண்டானதாம்.

இவ்விதம் **அ, உ, ஓ,** என்னும் மூன்றும் "ஓ" என்பதில் ஒன்றாய் ஒடுக்கமாயிருப்பதையே "**பிரணவம்**" என்றும் கூறுவதுமுண்டு.

ஆகையால் தான் ஐந்தில் இரண்டு பழுதில்லை என்றும் கூறுவார்கள் பெரியோர்கள். அதாவது, **பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்** என்னும் இந்த ஐந்து பூதங்களும் முறையே, **பிரிதிவி** மற்றும் **ஆகாயம்** என்னும், இந்த இரண்டு பூதங்களில் அடங்கி நிற்பதைத்தான் ஐந்தில் இரண்டு பழுதில்லை என்பதாகும்.

இதையே **ஆண், பெண்** என்றும், **ஆகாசம், பூமி** என்றும், **அண்டம், பிண்டம்** என்றும், **அ,** உ என்றும் கூறுகின்றார்கள்.

இதன் விபரத்தை அகத்தியர் ஞானகாவியத்தில் காண்க.

இத்துடன், பூமியானது தான் ஒன்றும், வயிற்றில் ஒன்றும் என இரண்டும், ஆகாயமாகிய ஒன்றும், என இந்த மூன்றும் கூடியதை, ஐந்தில் மூன்று பழுதில்லை என்றும் சொல்வார்கள்.

இன்னும் ஐந்து பூதங்களும் ஒவ்வொன்றிலும் ஐந்து உட பூதங்கள் தனித்தனியாக அமைந்து இருக்கின்றன.

ஆகையால், ஆகாயத்தில் பிரிதிவி, ஆகாயத்தில் அப்பு, ஆகாயத்தில் தேயு, ஆகாயத்தில் வாயு, ஆகாயத்தில் ஆகாயமாம்.

இவற்றுள் ஆகாயத்தினுள் அடக்கமாயிருகின்ற மேற்கண்ட ஐந்து பூதங்களுடன் **சூரியன், அக்கினி, சந்திரன்** என்னும் மூன்றும் அதிகமாய் அடங்கியிருப்பதால் **(5+3) = 8** எனக் கூறி, இந்த எட்டையும் **அஷ்ட சரக்கென்றும், அஷ்ட லவணம் என்றும், அஷ்ட அஷரம் (எட்டு எழுத்து)** என்றும் கூறுவார்கள். இது "**அ**" எனப்படும்.

இதன் விபரம் **ந** - என்பது கோட்டையாம், **ம** - என்பது மதிலாம், **சி** - என்பது மலையாம், **வ** - என்பது வச்சிரமாம், **ய** - என்பது நாதமாம், இதைப் பற்றி விஷேசமாய் இன்னும் அறிந்துக் கொள்ள ஆரவம் உள்ளவர்கள் **இராமதேவர் - 300** ல் பார்வையிடவும்.

**அகரத் தெழுந்து உகரத் துழன்று**
**மகரத் தடங்கு முயிர்.**

__விளக்கம்__

படைப்பிலுள்ள எல்லா உயிர்களும் அகரத்தில் தொடங்கி, உகரத்தில் உழன்று, மகரத்தில் அடங்கும் தன்மை உடையவை.

பிழைப்பு சார்ந்த சமூக வாழ்வில் சிக்கியுள்ள உயிர்கள், அன்னையின் கர்ப்பத்தில் (*அகரம்*) தொடங்கி, உலக வாழ்க்கையில் (*உகரம்*) உழன்று, மரணத்தின் பின் மண்ணுள் (*மகரம்*) அடங்கும். படைப்பிலுள்ள உயிரானது உயிர்மெய்

(*ஞானோதயம்*) அறிந்து, வீடுபேறு என்ற முக்தி நிலையை அடையும் வரை, இத்தகைய பிறப்பு-இறப்பு சுழற்சி தொடரும்.

ஆன்மீகப் பாதையில் செல்லும் சாதகர்கள், அ(கரம்) + உ(கரம்) + ம(கரம்) என்பது படைத்தலின் ஆதாரமானது ஓங்காரம் என்ற பிரணவ ஒலி என்பதை அருளால் அறிந்து, படைத்தவனின் ஒலி வடிவமாகிய (*நாதப்பிரம்மம்*) அதனுடன் படைப்பாகிய நமது அதிர்வுகள் (*vibration*) ஒத்திசைவு (*resonance*) அடைவதற்கான பயிற்சிகளின் மூலம், படைப்பு வேறு, படைத்தவன் வேறு என்ற அறியாமையால் விளையும் இருமை நிலையைக் கடந்து, ஓங்காரத்துடன் ஒன்றி, பிறப்பு - இறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை பெறுவதையே மனிதராகப் பிறவியெடுத்தலின் பயன் என்பதை உணர்ந்து, அதற்கான முயற்சிகளைத் துவக்க வேண்டும்.

**ஓம் என்ற பிரனவேமே ஆதி வஸ்து**
**உலகமெல்லந் தானிரைந்த யோம சக்தி**
**தான் என்ற சக்தியடா எவரும் தானாய்**
**சதா கோடி மந்திரத்திற்கு உயிராய் நின்று**
**ஆம் என்று ஆடினதும ஓங்காரம் தான்**
**அடிமுடியாய் நின்றதுவும் ஓம்காரந்தான்**
**நாமென்ற ஓங்காரம் தன்னிலேதான்**
**நாடிநின்ற எழுவகை பிறப்புமசே.**

(அகத்தியர் அந்தரங்க திட்சவிதி பாடல் 30)

<u>**பொருள்**</u>

**ஓம்** என்பது இப்பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பு இருந்த ஆதி வஸ்து. அதை நாம் இறைவன் என்று சொல்லுகிறோம். அதன் உருவமோ, வடிவமோ தெரியாது என்பதினால் அதை **ஆதி வஸ்து** என்றார்.

இந்த உலகம் எல்லாம் நிறைந்து நின்ற இயங்கு சக்தி. நூறு கோடி மந்திரங்களுக்கும் உயிர். '**ஆம்**' என்றும் இதை சொல்லுவார்கள். ஓ என்பது ஓங்காரம். அடி என்ற எல்லாவற்றிற்கும் ஆதாரமாக, விரிவு ஆக இருப்பது. இதுவே ஒடுக்கம் என்ற முடிவாக இருப்பது.

'ந'காரம் என்ற ஓங்காரமதில் ஏழுவகையான உயிர்கள் தோன்றின. இனி, எப்படி ஓங்காரம் என்ற இறைவன் எப்படி விரிவு அடைந்தான் என்பதை பார்போம்.

**அச்சப்ப ஆதி பராபரந்தான் மைந்தா**
**அனு கிரகத்தால் உதித்த கணபதி வல்லபை**
**மூச்சப்ப நிறைந்த சக்தி சிவமுமாகி**
**மூவுலகும் தானாகி முதலுமாகி**
**பேசப்ப நிறைந்த தொரு பஞ்ச பூதம்**
**பாச்சப்ப பஞ்சகர்தல் அஞ்சு பேரும்**
**பக்தி கொண்டு ஆதியிலே ஓம் என்றரே.**
(அகத்தியர் அந்தரங்க திட்சவிதி பாடல் 29)

## பொருள்

ஆதியில் ஓ என்ற ஓங்காரம் என்ற இறைவன் **அகர,** உகர மாக இரண்டாகவும், அவைகள் இணைந்த **மகர** மாகவும் இருக்கிறார்.

**அ + உ = ம** அதன் பின் பஞ்ச கர்த்தாகள் என்ற **அகர, உகர, மகர, நாதா, விந்து** என்ற அடிப்படை வித்துகளாக ஐந்தாகவும் உள்ளார்.

இந்த அடிப்படை வித்துவில் இருந்து பஞ்ச பூதம் உருவானது. பஞ்ச பூதத்தில் இருந்து பிரபஞ்சம் உருவானது.

பஞ்ச வித்தாக நேர்மறை, எதிர்மறை சக்தியாக மூல தரத்தில் கணபதியாக வல்லபையாக. இருப்பது ஒடுக்கமான ஓ என்ற ஓங்காரம்.

**ஓங்காரம். = ஓ = இறைவன்**

இறைவன் வடித்து சிதறி அகர உகர என்ற எதிர் மறை சக்தி, நேர் மறை சக்தியாக இரண்டு ஆனான்.

அவைகள் இணைந்து **அ + உ = ம.**

இதை **8 + 2 = 10** என்பார்கள்.
இதை **5 + 3 = 8 >>>**

**ந, ம, சி, வ, ய = 5,** = சிவன் (மந்திரம்)
**ஐயும், கிலியும், சவ்வும், = 3**. சக்தி (மந்திரம்)
**சிவனும், சக்தியும்** சேர்ந்து மொத்தம் **= 8.**

அவ்வாறே **நாதம் + விந்து = 2.**

ஆக இந்த **8 + 2 + 10.**

பத்து என்பது தனித் தமிழ் எழுத்தில் '**ய**' எனப்படும்.

எனவே, இது ஆகாய தத்துவத்தைக் காட்டுகின்றது.

ஆக அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக இந்த ஆகாய தத்துவம் இருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டுகின்றது.

**அ + உ+ நாதா+ விந்து + ம** = உயிர்கள்.
இது "**ஓம்**" என்ற ஓங்காரம்.

இன்று இது பிரபஞ்ச விரி கொள்கை (theory of expansion of universe) **அ - உ - நாத - விந்து - ம** குறுகினால் மீண்டும் ஒங்கராமாகும்.

"**கருவான எட்டிரண்டும் நாதம் விந்து**
**பேணப்பா நாதவிந்து சக்திசிவ மாச்சு**
**பெருகிநின்ற சத்திசிவம் தான்தான் என்று**
**பூணப்பா அறிவதனால் மனமே பூண்டு**"

என்பவற்றால், **சக்தி** என்பதும் **சிவம்** என்பதும் எட்டு, இரண்டு எனக் குறிப்பிடப்படுவது **நாதம், விந்து** ஆகிய இரண்டையேயாகும். அது வெளியில் உள்ளதல்ல.

**"நான்தான் அது"** என்று, அறிவினைக் கொண்டு மனதினால் அறிய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**அகரம்** என்னும் ஒரு பொருள் மூன்று பஞ்ச பூதங்களை தன்னுள் கட்டுண்ட நிலையில் வைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் அது ஒரு கல்லாக இருக்கிறது. இதிலே கட்டுண்டு கிடக்கும் பொருட்கள் நீராகிய இரசம், தேயுவாகிய கெந்தி, வாசியாகிய காற்று.

இதே பொருட்கள் நம் உடலிலும் இருக்கின்றன. ஆனால் கட்டுப்படாது, தனித்தனி நிலையில் செயல்பட்டுக் கொண்டுள்ளன. அவை தான் **வாத, பித்த, கபம்** எனப்படும் முப்பொருட்களாகும். உடலிலே கட்டுப்படாத நிலையிலும், அகாரத்தில் கட்டுப்பட்டும் இருக்கின்றன.

இது தான் **அண்ட பிண்ட ரகசியமாகும்**.



## 5. வாலைப் பூசை

**(அமிர்தம் எனும் அமுரி)**

சித்தர்கள் என்கிற பெயர் யாருக்கு உரியது?

அமுரி எனும் அமிர்தம் உட்கொண்டு, தமது உடலை காய சித்தியால், ஒளியுடலாய் மாற்றி, சொரூப சித்தி அடைந்தவர்களுக்கே உரியது ஆகும்.

பிறந்தவர் இறப்பதும் - இறந்தவர் பிறப்பதும் பொது விதி ஆகும். இதிலே பிறப்புக்கு பின் வரும் இறப்பை வென்று சொரூப சித்தி பெறுவது மூலமாக மரணத்தை வென்று விடுகின்றனர் சித்தர்கள்.

அதற்குப் பிறகும் அவர்கள் விரும்பிய காலம் வரையிலும் உடலுடன், அல்லது உடலைப் பிறர் கண்களுக்கு புலப்படாது மறைத்தும், வாழும் திறன் உடையவர்கள் சித்தர்கள்.

இப்படிச் சித்தர்களது வழி முறையில் மிகப்பெரிய அற்புதமாக இருந்து வருவது '**சாகாக் கல்வி**' என்பது தான்.

இதிலே நேரடி அனுபவம் பெற்ற சித்தர்கள் தாம் பெற்ற அனுபவத்தைக் கருணை வயப்பட்டு, பிறர் அறியும்

படி, தமிழ்ப் பாடல்களில் பாடியும், எழுதியும் வைத்துவிட்டு சென்றுள்ளனர்.

சித்தர்களது பாடல்கள் மூலமாக, நாம் பல துறைகள் பற்றிய விவரங்களையும் பெறமுடியும். அதாவது, வைத்தியம், வானவியல், ஆன்மீகம், பக்தி, யோகம், ஞானம் என பலவற்றிலே மிகவும் முக்கியமானது, உடலுடன் கூடிய முக்தியைப் பெறும் வழி முறையாகிய **“சாகாக் கல்வி”** பற்றியது ஆகும்.

நமக்கு சித்தர்கள் வழிமுறையை ஆராயவும், பொறுமையாய் அவற்றின் உண்மைகளைக் காணவும் வாய்ப்புகள் போதுமான அளவில் ஏற்படுவதில்லை.

இதனாலேயே நம்முடனேயே உடலோடு வாழ்ந்து வரும் பல சித்தர்களைப் பற்றிய உண்மைகளை நாம் சரியாகப் புரிந்துக் கொள்ள முடிவதில்லை.

சித்தர்களைப் பற்றிய விவரங்களைக் கூறும் போது அகத்தியர் உட்பட பலரும், சித்தர்களது சுவாசம் மாறுபட்டு இருப்பதைப் பற்றி மிகவும் முக்கியமாகக் குறிப்பிடுகிறார்கள்.

காயசித்தி பெற்றவரது சுவாசம் சுழுமுனையால் தான் நடக்கும் உடலில் சுவாசம் நிகழாது என்பதாக ஒரு அற்புதமான விபரத்தைத் தெரிவிக்கின்றனர்.

“**நாசி வழி சுவாசிப்பவனை நம்பாதே**!” - இதைப் பற்றி கிற்ஸ்துவ வேதாகம பைபிள் கூட அறிவுறுத்துகின்றது.

“நம் மனம் ஏன் மாறிக்கொண்டே இருக்குது”?

ஏனெனில் நம் சுவாசம் இரு நாசி வழியே நடக்குது அதனால், ஒரு செயலை செய்ய எத்தனிட்டு, செய்யப் போவதுக்குள் மனம் உடனே மாறிவிடுகின்றது.

அதாவது, ஒரு கையிலிருந்து மறு கைக்கு பொருள் மாறுவதுக்குள் மனம் மாறி, தானம் செய்வதை தடுத்துவிடும் அளவிற்கு மனம் மிகவும் அலைப்பாயும் தன்மை கொண்டது.

அந்த மனமாற்றத்திற்குக் காரணம் நாசியில் செய்யும் சுவாசம்தான் என்கின்றது சித்தர் சாஸ்திரம்.

அதனால் கர்ணன் ஒரு முறை எடுத்த பொருளை இடது கையில் இருந்தே அப்படியே கொடுத்தான் மனம் மாறிவிடும் என அஞ்சினான்.

“**காற்றைக் கையாளத் தெரிந்தவன் கூற்றை வெல்வான்**”

- அகத்தியர்.

ஆகவே, இதே சுவாசம் நடு நாடி சுழுமுனையில் நடந்தால், மனம் ஒரே நிலையில் நிற்கும், சமத்தில் நிற்கும்.

சுழுமுனை சுவாசம் = மனம் மாறாது.

அதுமட்டுமல்ல பசி, தாகம், உறக்கம் ஆகியனவும் மாறிப்போகும் எனவும் கூறுகின்றனர்.

இப்படி எல்லாம் சித்தர்களது உடலில் ஏற்படும் மாற்றம் எப்படி ஏற்படுகிறது?

எதன் மூலமாக அந்த மாறுதல்களை அவர்களால் அடைய முடிந்தது.

சித்தர்களது காயசித்தி எனும் முறை 'அமுரி' என்னும் கற்பம் பயன்படுத்துவதை பற்றி விவரிக்கிறது.

இந்த அமுரி என்பது பஞ்சபூதப் பொருட்களில் முழுமை அடைந்த பொருளாகிய அண்டக்கல்லில் இருந்து பெறப்படுவதாகும்.

இந்த அண்டக்கல் என்பதற்கு 'விஷக்கல்' என்பதாக ஒரு பெயரும் உண்டு.

பெயருக்கு ஏற்றபடி இந்தக்கல் தன்னுடன் அமிர்தத்தையும், விஷத்தையும் ஒன்றாக உடையதாகவே உள்ளது.

அண்டக்கல்லில் இருந்தே அமிர்தம் என்னும் அமுரியை பிரிக்க வேண்டும். அப்படி அமுரியை அடைய "**வாலையெனும் தேவி பூசை**" தெரிந்திருக்க வேண்டும்.

வாலைப் பூசை என்பது அமுரியை அண்டக்கல்லில் இருந்து பிரித்தெடுக்கும் வழி முறையாகும்.

அண்டக்கல்லை நன்கு இடித்து மாவாக்கி உகாரம் என்னும் பிண்ட நீரில் கரைத்துப் பின்பு அந்தத் தெளிவிலிருந்து வாலையெனும் கண்ணாடிக் குடுவையில் நிரப்பி காற்றுப் போகாமல் மூடி நெருப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும்.

இப்படிக் காய்ச்சும் போது அமுரியானது சொட்டுச் சொட்டாக குடுவையில் சேகரமாகும்.

அண்டக்கல்லுக்கு தீட்சை செய்து, பக்குவப்படுத்திய நிலையில் அது அமிர்தத்தைத் தரும். அந்த அமிர்தமே அமுரி ஆகும்.

இந்த அமுரியானது எண்ணெய் வடிவம் கொண்டதாகவும், வெண்மை நிறமுடையதாகவும், பாகு போன்றும், தேன் போன்றும், இனிப்புச் சுவையுடையதாகவும், முகர்வதற்கு இனிமையான வாசனையுடையதாகவும், காற்றில் திறந்து வைக்க எளிதில் ஆவியாகக் கூடியதாகவும், வறண்ட நீர்மம் என்பதால் கையில் தொட்டால் ஒட்டாத தன்மை உடையதாகவும், ஈரமாகாததாகவும், ஐஸ் போன்ற ஜில் என்ற குளிர்ச்சித் தன்மை உடையதாகவும் காணப்படுகிறது.

சித்தர்களால் '**வாம பூசை**', '**தேவி பூசை**', '**கன்னி பூசை**', என்றெல்லாம் கூறப்படும் பூசை யாவும் இப்படி அமுரியைப் பெறக்கூடிய வழிமுறையைப் பற்றியதே ஆகும்.

அமுரியைப் பெற்ற பிறகு அதைக் கற்பமாக தொடர்ந்து உடலில் ஓராண்டு சேர்க்க வேண்டும். அதாவது காலை, மாலையில் கற்பமாக அமுரியை அருந்த வேண்டும்.

இதுவே, சித்த வைத்தியத்தில் "**அமுரி தாரணை**" என்பது.

இதனால் உடலில் காயசித்தித் தன்மை ஏற்படும். அமுரியை உடலில் சேர்க்கும் போது பத்தியம் உண்டு. அது ஒரு வேளை பால் சோறு மட்டும் உண்டு வருவதாகும். வேறு எதுவும் காயசித்திக்கு உதவாது.

கற்பத்தை முறித்து விடும். இப்படி ஓராண்டு முதலாய், படிப்படியாய் அமுரி சேர்ந்த பல்வேறு கற்ப முறைகளை ஒருவர் முறையாக, தொடர்ந்து உட்கொண்டால், பத்தாண்டு களுக்குப் பிறகு அவர் **சொரூப சித்தி** அடைய முடியும் என்பது சித்தர்களின் அனுபவ முடிவு.

அமுரி பற்றி மேலும் சில விவரங்கள். அமுரி என்பது சிறுநீரல்ல அமுரிக்கு பல பெயர்கள் உண்டு.

சிவநீர், சுத்தகங்கை, ஊசிநீர், தேசிநீர், உதகநீர், உமிழ் நீர், கடல் நீர், காடிநீர், சாகரநீர், சந்திர புஷ்கரணி, ரோமநீர்,

மதனப் பால் என்று ஏராளமான பெயர்கள் இந்த அமுரிக்கு உள்ளன.

"**நலம் பெற்ற அமுர்தத்தை காய்ச்சினாக்கால் உண்டான உப்புக்கு இந்நாமங்கள்**" அகத்தியர் அந்தரங்க தீட்சா விதி.

இடத்திற்கு தக்கவாறு பெயர்களை வைத்துச் சித்தர்கள் நம்மை குழப்பி விட்டிருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து இந்த அமுரியில் ஏழு விதமான நிறங்கள் தோன்றும், கையில் தொட்டாலும் ஒட்டாது. சிறுநீர் கையில் தொட்டால் ஒட்டாமல் இருக்குமா? என்பதை முட்டாள்தனமாக சிறுநீரை ஆராய்கின்ற சித்தவைத்திய ஆய்வாளர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இந்த இடத்தில் அமிர்தம் என்பது ஆதிப் பொருள். இதில் உப்பு கிடைக்கும். நாம் தயாரித்த அமுரியை காய்ச்சினால் உப்பு கிடைக்குமா என்பது ஆய்வுக்குரியது.

"**விள்ளுகிறேன் ஆதியந்த அமிர்தத்துக்கு வெளியான மதனப்பால் என்றும், பேரு வீரமுள்ள அலகை என்றும் பேரு**" ஆதிப் பொருளுக்கும், அமுரிக்கும் ஒரே பெயர் உள்ளது காண்க.

"**என்றுமே அமுரியுண்டால் அனேக நோய்கள் என் மகனே புலத்தியனே வீரிட்டோடும்**"

**"கிடைத்தாலே மனதுதான் ஒருமை பண்ணி கிருபையுடன் ஓராண்டு அமுரியுண்டு உடலதுவும் புலத்தியனே வேறு கூறானால் உண்மையுடன் தசதீட்சை முடியும் பாரு சடமது சித்தியாம் யோகவானாம்"**

ஒரு வருடம் சிறுநீரைக் குடித்தால் உடல் வேறு கூறாகுமா? என்பதை சற்று சிந்திக்க வேண்டும் சித்த வைத்தியர்களே!.

சித்தர்களின் கலைகளை அறிந்து கொள்ள நமக்கு அறிவும் போதாது, இந்தப் பிறவியும் போதாது.

இப்படி அமுரி தாரணை செய்யும் போது இரணடு அல்லது மூன்று ஆண்டுக்குள் உடலின் கர்ம வினைகள் யாவும் வெளிப்படத் துவங்கும்.

அது மிகவும் கொடுமையானதாகவே இருக்கும். அப்படிப்பட்ட துன்பங்களைக் கடந்த பிறகு, அவரது உடலில் முடி கொட்டி, நகம் விழுந்து, உடலின் தோல் கழன்று விழும்.

அதன் பிறகு உடலின் நிறமே மாறிப் போகும். இதற்குப் பிறகு புதிய முடியும், நகமும் முளைக்கும். இப்படி புதிய உடலைப் பெற்றவர்கள் தொடர்ந்து அமுரியை உட்கொள்ளும் போது, பத்தாண்டுகளில் சொரூப சித்தி அடைவார்கள் என்கின்றது சித்தர் சாஸ்திரம்.

அப்படி சொரூப சித்தி அடைந்தவரது உடலில் இருந்து நிழல் கீழே விழாது. இதுவே சொரூப சித்திக்கு அடையாளம் ஆகும் என்கின்றது சித்தர் நூல்கள்.

சாதாரணமாக நம்முடைய ஸ்தூல உடலில் ஒளி பட்டு திரும்ப பிரதி பலிக்கும். அதனால் ஒளியின் போக்கில் தடை ஏற்பட, மறுபுறம் நமது நிழல் விழும்.

நம்முடைய ஸ்தூல உடல் கற்ப சாதனையால் ஒளியுடலாய் மாறிய பிறகு, ஒளியானது சூக்கும மாறுதல் பெற்ற உடலில் ஊடுருவி வெளியே வந்து விடும்.

இதனால் மறுபுறம் நிழல் விழாது. இதுவே, உண்மையாக சித்தர்கள் நிலையை அடைந்தவர்களது சொரூப இலக்கணம் ஆகும்.

இப்படி சொரூப சித்தியை தரக்கூடிய அமுரியைப் பற்றி, பல சித்தர்களும் பரிபாசையில் சுமார் முன்றூற்று ஐம்பது பெயர்களுக்கும் மேலாக குறிப்பிட்டுள்ளனர்.

எனவே அமுரியை அடையும் செய்முறையை, ஒரு குருவின் கூட இருந்து தெரிந்து கொண்டலன்றி, அவர் அதைத் தொட்டுக் காட்டினாலன்றி நாமாகவே தெளிவாய் உண்மையை அறிவது மிகவும் சிரமமாகும்.

அமுரிக்கு உலோகங்களின் குற்றத்தை (களிம்பு) நீக்கும் தன்மை உண்டு.

அதுப்போன்றே, உடலின் குறைகளையும் நீக்கி சுத்தமாக்குகிறது. அமுரியை கற்பமாக உட்கொள்ளும்போது, உடலை அமரத்தன்மைக்கு மாற்றுவதற்காக, முதலில் உடலிலுள்ள குறைகளைப் போக்கி, உடலின் தோலையே நீக்கி புதிய தோலை உருவாக்கும்.

அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட கால அளவில், நமது உடலில் உள்ள இரத்தம் முழுவதும் வெளியேறி, உடல் சுத்தியாகி புதிய இரத்தமும் உருவாகும்.

கற்பம் உட்கொள்ளும் பொழுது ஏற்படும் வேதனைகள் அதிகம் என்பதால், பெரும்பாலானோர் அதைப் பற்றி அறிந்த பிறகும் கூட, அதைக் கொண்டு கற்பசாதனை செய்யத் தயங்குவர்.

அமுரி தாரணை உயிர் அனுபவித்துத் தீர்க்க வேண்டிய முழு அனுபவங்களையும் உடனடியாகச் செயலுக்குக் கொண்டு வருவதால், இவ்வித வேதனை கற்பம் உட்கொள்ளும் போது உடல் அளவில் ஏற்படவே செய்யும்.

இப்படிப்பட்ட வேதனைகளை இது தமது பிறவிக்குரிய கர்மவினை என்பதை ஏற்று, அனுபவித்துத் தீர்க்கும் மனவலிமை இருந்தால் மட்டுமே கற்ப சாதனையில் ஒருவர் வெற்றி பெற முடியும்.

இதனாலேயே கற்ப சாதனைக்கு "**குருவருளும், இறைவன் திருவருளும்**" மிகமிக அவசியமாகிறது.

அப்போது தான் **சொரூப சித்தி** என்கிற நிலையை அடைந்து சித்தராக முடியும். சித்தர்கள் என்பவர்கள் இறந்து போனவர்கள் அல்லர். இன்றும் கூட நம்மோடு கலந்தே உடலோடு வாழ்ந்து வருபவர்கள் ஆகும்.

"அமுரி எனப்படும் மருந்து தன் மூன்றாவது தயாரிப்பில் ஆவியாகக் கூடிய மிகவும் லேசான பொருளாகவும், எண்ணெய் வடிவம் கொண்டதாகவும், தன்னகத்தே இருந்த குறைபாடுகள் ஓரளவிற்கு நீங்கப் பெற்றதாகவும், இந்த தயாரிப்பு நிலையில் அது தன் செயல் பாட்டில் அநேக அற்புதங்களை நிகழ்த்தப் போவதாகவும் அமைகிறது.

மனித உடலுக்கு அது அழகையும், வலிமையையும் தருகிறது. உணவுடன் மிகச் சிறிய அளவு அதை சேர்த்து அருந்தினால் கல்லீரலில் ஏற்படும் ரத்த உறைவு நோயை குணமாக்குகிறது.

பித்தப்பையின் உஷ்ணத்தை குறைக்கிறது. உடலில் உள்ள ரத்தத்தின் அளவையும், இரத்த செல்களின் அளவையும் உயர்த்துகிறது.

எனவே உடலில் இருந்து இரத்தத்தில் உள்ள வேண்டாத, தேவைக்கு அதிகமான ரத்தத்தை வெளியேற்ற வேண்டியது அவசியமாகிறது.

இம்மருந்து இரத்த நாளங்களை விரிவடையச் செய்து செயல் இழந்து போன மூட்டுக்களைக் குணமாக்குகிறது.

பார்வைக் குறைபாட்டை நீக்கி, கண்ணுக்கு மீண்டும் வலிமையைத் தருகிறது. வளர்ந்து வரும் குழந்தைகளின் உடலில் உள்ள அவசியமற்றவைகளை நீக்குகிறது.

## 6. மெய்பொருள் விளக்கம்

**முப்பு என்றால் என்ன?**

முப்பு என்பது உடலில் உண்டாகும், முக்குற்றமான வாதம், பித்தம் மற்றும் சிலேத்துமம் என்பனவற்றை ஒழுங்கு படுத்தி இம்மை எனும் நிகழ்கால வாழ்க்கையை செம்மைப்படுத்தி, ஆரிருள் எனும் காமம், கோபம், குரோதம், லோபம், மத மற்றும் மாச்சர்யம் என்பனவற்றை அகற்றி, மும்மலங்களான ஆனவம், கன்மம் மற்றும் மாயை என்பனவற்றை போக்கி, மறுமையான ஆதி, அந்தமில்லா அந்தர்யாமியான பரம்பொருளை அடையக் கூடிய அரிய இறைவடிவமாகும்.

முப்பு என்பதும் இறைவனே! அதில் சந்தேகம் வேண்டாம்.

இந்த இரகசியத்தை நமது தென்னாட்டில் வாழ்ந்த சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்றும் மகான்கள்

அறிந்து அவரவர் வழிகளில் நமக்கு விட்டுவைத்து சென்றிருக்கிறார்கள்.

உதரணமாக, மணிவாசக பெருமான் கீழ்கண்டவாறு முப்பின் ரகசியத்தை சொல்கிறார்.

**சிவன் அவன் என் சிந்தையுள்**
**நின்ற அதனால் அவன் அருளாலே**
**அவன் தாள் வணங்கி!**

அடுத்து,

திருவள்ளுவப்பெருமான் தனது முதல் குறளிலேய அகார **("அ")**, உகார **("உ")** இரகசியத்தை நமக்கு கூறுகிறார்.

“**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**”

அகார **("அ")**, உகார **("உ")** மற்றும் மகாரம் **("ம")** என்பதே அகர முதலான எழுத்தாகும். இம்மூன்றும் சேர்ந்ததே முப்புவாகும். இம்முப்பே அதி மெய்ப்பொருளான இறைவனும் ஆகும்.

ஆக அது எது? என்பது தங்களுக்கு புரியும் என நினைக்கின்றேன்.

இந்த மெய்பொருள் இரகசிய விளக்கம் சித்தர்களில் ஒருவரான நமது திருவள்ளுவரும் கூறியிருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இந்த இறை இரகசியம் இறைவன் அருள் இல்லாமல் யாருக்கும் புரியாது.

வெட்டவெளியின் ஒரு சிறுபுள்ளியில் திடீரென நிகழும், இந்த அசைவால் உண்டாகும் சத்தமும் (நாதம்), வெளிச்சமும் (ரூபம்) பேரண்டத்திற்கான தோற்றப்புள்ளிகள்.

அதாவது, ஒரு பேரணுவில், நடந்த வெடிப்பில், பல்வேறு அணுக்களாக இந்த பேரண்டம் வெளிப்பட்டது.

அந்த வெடிப்பில் (அசைவில்) முதலில் '**ஒலி**' தோன்றி, அதன்பிறகே '**ஒளி**' தோன்றியதை அறியலாம்.

'**நாதம்**', '**விந்து**' என இரண்டு சொற்களை சமயத்தில் தோற்றக் குறியீடுகளாகக் குறிப்பிடுவர்.

'**நாதம்**' என்பது "**ஒலி**".
'**விந்து**' என்பது "**ஒளி**".

"**நாத விந்து கலாதி நமோநம**" எனும் அருணகிரிநாதரின் '**திருப்புகழ்**' ஒரு சான்று. '**நாதம்** (**ஒலி**)' முதலிலும், '**விந்து** (**ஒளி**')' பிற்பாடும் என்பதாகவே அப்பாடலும் கூறுகின்றது.

நம்முடைய மக்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மதங்கள் அவ்வொலியை '**ஓம்**' என்றும், '**ஆமென்**', '**ஆமீன்**', என்றும் கூறுகின்றார்கள்.

சைவ சமயத்தில் இறைவனை '**நாதன்**' என்றே குறிப்பிடுகிறார்கள். '**சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி, சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி**' என்றும், '**நாதன் நாமம் நமச்சிவாயவே**' எனக்கூறுவதையும் இங்கு நினைவில் கொள்ளவும்.

ஆக பிரபஞ்சத் தோற்றத்திற்கு அடிப்படையான நாதத்திற்கு (ஒலிக்கு) மூலமான பொருளைச் சுட்டும் குறியீடு நாதன்.

அடுத்து, வெளிச்சத்தை '**சோதி**' எனக் குறிக்கலாம்.

இங்கு ஒன்றைத் தெளிவுப்படுத்துவது அவசியமாக இருக்கின்றது. '**வெளிச்சம்**' என்பது வேறு, "**ஒளி**" என்பது வேறு. அதுப்போன்றே, "**பேரொளி**" என்பது வேறு, "**சுயம்சோதி**" என்பது வேறு.

முதலில் வெட்டவெளி மட்டுமே இருந்தது, அந்த வெட்டவெளியில் உண்டான அசைவில், அதாவது, அந்த பெரு வெடிப்பின் போது, எழுந்த ஓசையை '**ஓம்**' என்றும், அதன் பிறகு வெளிப்பட்ட வெளிச்சத்தை '**சோதி**' என்றும் அறியலாம்.

அடுத்து, வெட்டவெளிக்குள் நிகழ்ந்த பெருவெடிப்பின் இயக்கத்தின் துவக்கத்தில் வெளிப்பட்ட (சப்தத்தை) '**ஓம்**' என்ற '**ஒலி**' யைச் சுட்டி நிற்பவர் '**விநாயகர்**' ஆவார்.

அவருக்கு வடிவைக்கப்பட்ட வடிவமும் ‘**ஓம்**’ என்ற அக்ஷரம் போன்றே காணப்படும். விநாயகரின் திருவுருவை வலது காது முதல் தொடங்கி தலையை சுற்றி வளைத்து இடது காது வரை கொண்டு வந்து தொங்கும் தும்பிக்கை வரை கொண்டு வந்து சுழித்தால் ‘**ஓம்**’ என்ற பிரணவ வடிவம் புலப்படும்.

அதனால் அவர் நாத முதல்வர் எனப்படுகின்றார். மேலும்,

அடுத்து, ஒலியைத் தொடர்ந்து உதிக்கும், ஒளியைச் சுட்டி நிற்பவர் ‘**முருகன்**’ ஆவார். முருகனின் பிறப்பும் சிவனின் நெற்றிக் கண்களில் இருந்து வந்த ஒளியின் மூலமாகவே நிகழ்ந்தது என புராணக் கதைகளில் படித்திருக்கின்றோம்.

ஆகவே, வெட்டவெளியில் இருந்து வெளிப்பட்ட ‘**ஒலி**’ - யை ‘**விநாயகர்**’ எனவும், ‘**ஒளி**’ - யை ‘**முருகன்**’ எனவும் கொண்டு சமயம் வழிபடுகின்றது.

ஔவை பிராட்டியும் கூட ‘**முப்பு**’ பற்றி பாடாமல் இல்லை, அவர் பாடிய மூதுரையின் கடவுள் வாழ்த்தே முப்பின் இரகசியமாகும்.

அதுவும் அருள்பெற்றோருக்கு மட்டுமே புரியும்.

**"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கை யான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு."**

ஆனால் அவை எந்த மூன்று உப்புக்களின் கலவை என்பதில்தான் கருத்து வேறுபாடுகள் மற்றும் குழப்பங்கள்.

கறியுப்பு, வெடியுப்பு, இந்துப்பு என்கிற மூன்றின் கலவை தான் முப்பூ என்கின்றனர் ஒரு சாரார்.

இல்லவே இல்லை! பூநீர், இந்துப்பு, வெடியுப்பு இவற்றின் கலவையே **முப்பு** என்கின்றனர் இன்னொரு பிரிவினர்.

நீர், நெருப்பு, காற்று இந்த மூன்று பூதங்களின் கூட்டே முப்பூ என்று இன்னும் சிலர் வாதிடுகின்றனர்.

ஆக, முப்புவில் சேர்க்கப்பட்டிருக்கும் மூன்று பொருட்கள் இன்னதென அறுதியிட்டு கூறுவதில் நிறையவே மக்களிடையே குழப்பங்கள் இருக்கின்றது.

இவைகள் பெரும்பாலும் மறைமொழியில், பரிபாசையில் சொல்லப்பட்டிருப்பதால் ஆய்வாளர்கள் ஆளுக்கொரு கருத்தினை முன் வைக்க நேரிடுகிறது.

முப்பூவின் உண்மையான மூலப் பொருள் இதுமட்டும்தான் என்பதை வெளிப்படையாக சித்தர் நூல்களில் கூறப்பட்டிருந்தாலும், குருவருள் சித்திக்கப் பெற்றவர்களுக்கு மட்டுமே இவற்றை அறியும் ஞானம் கிடைக்கும் என்கின்றனர்.

## 7. சாகாக்கலை

உயிர் எப்படிப்பட்டது?

இறப்பிற்குப் பிறகு உயிர் என்னவாகிறது?

அது எங்கே செல்கிறது?

இறப்பிற்குப் பிறகு உயிர் இருக்கிறதா? இல்லை அழிந்து விடுகிறதா? இப்படிப் பல கேள்விகள் எப்போதும் இருந்து வருகின்றன.

நமக்கு ஏற்படும் பிறப்பு மூலமாக உயிர் இருக்கிறது என்பதை உறுதி செய்து கொள்ள முடிகிறது. அது போன்று இறப்பிற்குப் பிறகு உயிர் இருக்கிறதா இல்லையா? என்பதை உறுதி செய்வது அவ்வளவு எளிதல்ல!.

இறப்பிற்குப் பிறகு உயிர் என்னவாகிறது? இந்தக் கேள்விதான் பலரையும், உயிரைப் பற்றிய ஆய்வில் இறங்கத் தூண்டுகிறது.

அப்படி உயிரைப் பற்றிய தேடலில் இறங்கியவர்கள் பலர். அவர்களது அனுபவங்கள் பலவிதமான முடிவுகளை வெளிப்படுத்தி இருக்கிறது.

இதிலே ஞானிகளும், சித்தர்களும் அடைந்த தெளிவு மிகவும் அற்புதமானது.

உயிர் இறப்பிற்குப் பின்னும் இருப்பதை ஞானியர் தங்களது சமாதி அனுபவத்தால் உறுதி செய்தனர். சித்தர்கள் உயிர் திரும்பவும் இந்த பரிமாணத்தில் பிறக்காமல், வேறு வித உயர் நிலையை அடையும் முறையைக் கண்டறிந்தனர்.

அவர்கள் கண்டறிந்த வழி முறையே '**சாகாக் கலை**' என்பது.

உடலுடன் கூடிய முக்தி அடைவதைப் பற்றிய அனுபவம் பெற்றவர்கள் சித்தர்கள். உடலைத் தவிர்த்த பிறகு முக்தி அடைவது பற்றிய தத்துவங்களை நமது வேதாந்த சாஸ்திரம் எடுத்துரைக்கின்றது.

ஆக அந்த மெய்ப்பொருளை அனுபவமாக அறியாத அஞ்ஞானிகள் மீண்டும், மீண்டும் பிறந்து, இறக்கின்றார்கள்.

சித்தர்கள் இப்படிப்பட்ட முடிவுக்கு வர ஒரு விபரம் விளக்கப்படுகிறது. பிறந்தவர் எப்படி இறப்பது உறுதியோ, அது போலவே இறந்தவரும் பிறப்பது உறுதி என்பது அவர்களது தெளிவாகும்.

உடலுடன் வழக்கமான மரணம் அடையாமல், அதாவது விதேக முக்தியை அடையாமல், உடலோடு சேர்ந்து அப்படியே ஒளியில் கலந்து முக்தி பெறுவது என்பது சித்தர்களது வழிமுறையாகும்.

ஆன்மீகத்தில் இப்படிப்பட்ட ஒளியுடன் இணைந்து உடலோடு கூடிய முக்தி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட முக்தியையே சித்தர்கள் உண்மை முக்தி என்பதாய் ஏற்கிறார்கள். பிறவற்றை அவர்கள் முக்தியாய் ஏற்பது இல்லை. அதுமட்டும் அல்ல. அப்படி முக்தி பெற்ற தங்களைத் தொடர்பு கொள்ளவும் முடியும் என்று கூறி அதற்குரிய வழி முறைகளையும் அவர்கள் விவரிக்கிறார்கள்.

இதிலே ஒவ்வொரு சித்தரும் வெவ்வேறு விதமான தனிப்பட்ட வழிமுறைகளையே கூறுகின்றனர். இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் சித்தர்களோடு பெறமுடியும் தொடர்புகள் அவர்கள் இருப்பதை, அதாவது உடலுடன் முக்தி பெற்றது உண்மையே என்பதை உறுதி செய்வதாக அமைகிறது.

இப்படிப்பட்ட முக்தியை ஒருவர் அடையவே கற்ப சாதனையை ஒரு வழி முறையாக சித்தர்கள் வெளிப் படுத்தியுள்ளனர்.

இப்போதும் கூட அந்த முறை நடைமுறையில் பயன் படுத்தப்பட்டு வருகிறது. 'அகரம்' என்பது பற்றிய தீட்சையை ஒரு குரு நேர்முகமாக சீடருக்குத் தொட்டுக் காட்டித் தர அவர்கள் பயன் படுத்தும் காலம் சித்திராப் பௌர்ணமி தினம் ஆகும்.

பெரும்பாலும் அகரம் காட்டித் தரப்பட்ட பிறகே, பிற வழி முறைகள் பற்றி ஒவ்வொன்றாக கூறுவார்கள். இதில்

அகரத்தில் இருந்து பெறும் அமிர்தமான அமுரியை வைத்தே எல்லாவித சாதனைகளும் சாத்தியமாகும்.

அமுரியை அறியவில்லை என்றால், சித்தர்கள் விவரிக்கும் மருந்துகளைச் சரியாக முடிக்க முடியாது.

முக்கியமாக அவர்கள் விவரிக்கும் முக்தி நிலையைப் பெறுவதோ முடியவே முடியாது.

"**கற்பம்**" உடலுக்கு வலிமையை மட்டும் தருவதல்ல. உடலையே முழுவதுமாக மாற்றி விடுவது. இப்படிப்பட்ட அற்புதமான அமுரியை போன்ற ஒன்றை உயிர் தனது உடலை உருவாக்கும் சமயத்தில், உருவாக்கிப் பயன்படுத்துகிறது.

கருவறையில் உருவாகும் நீர், உயிரால் உருவாக்கப்படும் உடலை, எவ்விதக் கேடும் ஏற்படாதபடி, மிக அருமையாகப் பாதுகாத்து உதவுகிறது.

அதற்குள்ளே மிதக்கும் கரு அந்த நீரால் ஒருபோதும் பாதிப்படைவதில்லை. மாறாக அதிலே அது மிதந்தபடியே தனது உடலின் முழு வளர்ச்சியையும் பெறுகிறது.

இப்படிக் கருவுரும் சமயத்தில் உருவாகிப் பயன்படும் நீரைக் கூடச் சிலர் கற் முறைக்குப் பயன்படுத்த முயற்சி செய்து மாறுபாடான பலனை அடைகின்றனர்.

## 8. <u>அண்டக்கல்</u>

இது போன்றே அண்டக்கல் என்ற அந்த ஆதிப் பொருளில் பலநூறு வகைகள் இருப்பதாகவும், பதினெட்டு வகைகள் இருப்பதாகவும், பல்வேறு தவறான எண்ணங்களால், பலரும், பலவாக, பெரும் பொருள் செலவு செய்து அவற்றை தேடி அலைந்துக் கொண்டு இருக்கின்றனர். இது மிகவும் வருந்தத் தக்க செயலாக உள்ளது.

உண்மையில் **அண்டக்கல்** என்னும் சொல் எந்த ஒரு கல் வகையையும் குறிப்பதல்ல. மாறாக அது, முப்பு - வை மட்டுமே குறிக்க சித்தர்களால் பரிபாசையாக கூறப்படும் வார்த்தையே ஆகும்.

இந்த **அண்டக்கல்** எனப்படும் மெய்ப்பொருளானது உலகில் பல வகையாக உள்ளது என்று பலராலும் எண்ணப்பட்டாலும், அதை தவறான கருத்து என கூறுவது மிகையல்ல.

மெய்ப்பொருள் என்பது ஒன்றே. ஒன்று மட்டுமே. அந்தப் பொருளைப் பற்றிய அறிவு இல்லாத மூடர்கள் அது இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைந்து திரிகின்றனர்.

இதுத்தெரியாமல், சித்த வைத்தியர்கள் மேற்படி கர்பப்பை கருக்குட நீரைப் பயன் படுத்துபவர்கள் ஓர் உண்மையை அறியவில்லை.

கருவிலே உருவாகும் நீர், உடல் உருவாகப் பயன்படுமே அன்றி, உயிரோடு உடலை அழியாத நிலையில் வைத்திருப்பதற்குப் பயன்படுவது அல்ல!

அமுரியை ஒருவர் பட்டுப்போன செடிக்கு ஊற்றினால் அது திரும்பவும் உயிர் பெற்று வளருவதை கண்கூடாகக் கண்டு அறிய முடியும்.

நமது சிறுநீரை ஊற்றினால் நன்கு வளர்ச்சி அடைந்திருக்கும் தாவரமும் காய்ந்து போய்விடும் என்பது அனைவரும் அறிந்ததே.

சித்தர்கள் கூறும் இந்த அமுரியை மனித மூத்திரம் தான் என்பவர்கள் இதனை சிந்தித்து உண்மையை உணர வேண்டும்.

'**அகரம்**' என்பதில் '**அஃருப நிலைக்கு உரிய**' பொருளும், வடிவ உலகுக்கு உரிய பொருளாகிய நீரும் சேர்ந்து, நெருப்பால் இணைக்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பிரிக்க முயலும் முயற்சியில் முதலில் வெளிவருவது சுத்தகங்கை எனப்படும் அமுரியாகும். அதன் பிறகு இந்த அமுரியைக் கொண்டு அகரம் சுத்தி செய்யப்படும். பிற வழி முறைகளுக்கும் அமுரியே பயன்படும்.

அமுரியைப் பெறுவது, அது எதுவென்று அறிந்தவர் களுக்கே எளிதானது ஆகும். அப்படி அல்லாமல் அதற்குப்

பதிலாக வேறு பலவற்றைப் பயன்படுத்துவது என்பது அவர்களால் அமுரியைப் பற்றிய தீட்சையை சித்தர்களிட மிருந்தோ, அல்லது அதையறிந்த குருமார்களிடமிருந்தோ, நூல்களின் வாயிலாகவோ பெற இயலவில்லை என்பதையே காட்டிக் கொடுக்கிறது.

அமுரியால் முடிக்கப்படும் மருந்துகளில் உயிர்ப் பொருள் அழியாமல் காக்கப்படும் என்பதால் அவற்றை நோய்களுக்கு மிகக் குறைந்த அளவே சித்தர்கள் பிரயோகம் செய்வர்.

அந்த பிரயோகமும் நேரடியாக இல்லாமல் அமுரி உப்பை அமுரி விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்திப் புடமிட்டு சுண்ணம் செய்து அதனை மருந்தில் கலந்தே சித்தர்கள் உபயோகிப்பர்.

இந்த சுண்ணத்தை மீண்டும் அமுரி விட்டு அரைத்து உலர்த்தி பஞ்ச சுண்ண குகையிலிட்டு புடமிட்டு எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஐந்து புடமிட கடுங்கார சுண்ணமாகும். இந்த சுண்ணத்தை கையில் தொட்டாலோ, வாயிலிட்டு சுவைத்தாலோ எரிச்சல் வராது. புண்ணாகாது. மாறாக குளிர்ச்சியாக ஜில் என்று குளுக்கோஸ் போன்று தான் இருக்கும்.

கடுங்காரம் என்பது வெளிப்பட்டுத் தோன்றாமல் மறைந்தே இருக்கும். இதுவே முப்பு சுண்ணத்தின் சிறப்பும், அடையாளமும் ஆகும்.

இதனால் தான் சித்தர்களும் "**சவுக்கார வைப்பும் சார நீர் வைப்பும் சிவக்காது மஞ்சளில் சென்றாலுமய்யா**" என கூறி உள்ளனர். மேலும் அகத்தியர் கூறும் போது "**மஞ்சளுக்கு சிவக்கின்ற மார்க்கமில்லை**" என்றும் கூறி அருளி உள்ளார்.

முப்பு சுண்ணம் முடித்து விட்டேன். வேதை செய்து விட்டேன் என்று கூறிக்கொள்ளும் ஆய்வாளர்கள் இந்த உண்மையை கவனத்தில் வைத்தல் நலம்.

முப்பு சுண்ணம் என்றும், அண்டக்கல் சுண்ணம் என்றும், வழலைச் சுண்ணம் என்றும், சத்தி முப்புச் சுண்ணம், சிவமுப்புச் சுண்ணம் என்றும் சித்தர்களால் கூறப்படும் பல்வேறு பெயர்களில் கூறப்படும் சுண்ணங்கள் அனைத்தும் அமுரி எனப்படும் ரச நீராலோ, அல்லது கந்தக நீராலோ அரைக்கப்பட்டு சுண்ணமாக்கப்படுபவை தான்.

இவைகளுக்கு அடிப்படையான பொருள் ஒரே ஒரு பொருள் மட்டும் தான். அதுவே, “**ஓம்**” என்றும், “**அல்லாகூ அக்பர்**” என்றும், “**பிதா சுதன் பரிசுத்த ஆவி**” என்றும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

பெயர்கள் வேறு, வேறு ஆனாலும் அவை குறிக்கும் பொருள் ஒன்று தான். மொழிகள்தான் வேறு, வேறு உள்ளது. ஆனால், அர்த்தம் ஒன்று மட்டுமே ஆகும்.

இந்த உண்மை உணர்ந்தால் மத துவேசம் நீங்கி விடும். இருமைகள் அகன்றுவிடும். அனைத்து மதங்களும் பிரணவம் என்ற ஓங்காரத்தையே அடிப்படையாகக் கொண்டு உள்ளது என்பதும் புரிந்துவிடும்.

ஓங்கார பொருளை பயன்படுத்தி பெருநிலை அடைந்த சித்தர் பெரு மக்கள் தம் மக்கள் அனைவரும் தாம் அடைந்த நிலையை பெற வேண்டும் என்ற பெருங்கருணையால் அந்தந்த நாட்டில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப சில விவரங்களை இலைமறை காயாக மக்களுக்கு கூறி வந்தனர்.

இந்த விவரங்களே பிற்காலத்தில் நடைமுறைப் பழக்கமாகவும், தனி ஒரு வழிமுறையாகவும் சமுதாயத்தில் இடம் பிடித்தது. இதனையே பிறகு மதம் என்றும், மார்க்கம் என்றும் கூறத்தொடங்கினர்.

இனி நாம் அகத்தில் அதாவது நமது உடம்பின் உள்ளே உள்ள முப்பு பற்றி சித்தர்கள் மார்க்கத்தில் அறியலாம்.

## 9. அட்டாங்க யோகம்

திருவள்ளுவ நாயனாரின் பஞ்சரத்தினம் - 500, என்னும் நூலின் 58 - ம் பக்கம் 316 - ம் பாடலில் இருந்து இதை தொடங்கலாம்.

**அட்டாங்கயோகம் அதுபலித்திட அருளும்முத்தி**
**தொட்டங்கு நின்றுதுணையாய் இயம நியம ஆசனம்**
**பட்டாங்கில் உள்ளபடி யறிந்து பாலிக்காதார்க்கு**
**முட்டாங்கு முப்பு முடியாது மொழிந்தேனிது சத்தியமே.**

இந்த ஒரு பாடலில் மூலமாகவே முப்பு முடிக்க வேண்டும் என்றால், அட்டாங்க யோகம் கட்டாயம் பயின்றாக வேண்டும் என்பது சித்தர்கள் முடிவு.

அதன் மூலம் நமது அருள்நிலை வைராக்கியம் கொண்டு அதற்கு துணையாய் அட்டாங்க யோகத்தின் மிகப் பெரிய அடிப்படை செயல்களான **இயம, நியம, ஆசனம்** அவசியமாகின்றது.

இது வலுப்படமல், இதன் உள் கருத்தை அறிந்து கொள்ளாமல், எவரும் **முப்பு** முடிக்க முடியாது என்று கூறுகிறார்.

**அட்டாங்க யோகம் என்றால் என்ன?**

**இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி** போன்ற எட்டுவிதமான பயிற்சி முறைகளைப் பற்றியதாகும்.

இதிலும், **இயம, நியம, ஆசனம்** என்ற மூன்றும் கொண்ட ஒழுக்க நெறியினைக் கடைப்பிடிக்காத, வைராக்கிய சிந்தனை இல்லாதவர்களுக்கு முப்பு முடியாது என்பது பற்றி ஆணித்தரமாகவே கூறிவிட்டார்.

இனி அகத்தியர் வல்லாதி - 600 என்னும் நூலில் - 105 பக்கம் - 671 - பாடலைப் பார்ப்போம்.

**ஒப்பேது உண்ணைவிட்டால் வேறொன்றில்லை**
**உத்தமனே ஊர்தொரும் அலைய வேண்டாம்**
**அப்பேது சாரநீர் அப்பேயாகும் அதைச்சித்தர**
**சொன்னாக் கால்குருவாகாது தப்பேது காலை**
**விட்டாற் தப்பிப்போகும் ஒப்பேது உனக்குள்**
**மூன்றுமுப்புக் கூட்டினாற் சகலசித்துங் கூடுந்தானே**

உன்னுடைய உடம்பினுள்ளே உள்ளதை பார்க்காமல் ஊர் முழுவதும் முப்புக்காக அலைந்து திரிய வேண்டாம். இதில் சாரநீர் என்பது தான் அப்பாகும்.

காலை, அதாவது காலை என்றால் காற்றை விட்டால், உயிரற்ற சடலமாகும், நம் சட உடலுக்குள் மூன்று உப்புக் கூட்டினால், சகல சித்தும் ஆடலாம். என்று தெளிவாக சொல்கிறார்.

இனி, அதே அகத்திய மஹரிஷி அடுத்த 675 - எண் பாடலில் கூறுவதைக் காண்போம்.

**வசனமென்ன என்குருவே தஞ்சமென்று**
**மலரடியைத்தான் பிடித்து வணங்க்கினான்பார்**
**வசனமென்ன என்சானுடம்புக்கு கெல்லாம்**
**மைந்தனே சிரசல்லோ பிரதான மென்பார்**
**வசனமென்ன நீயுண்ட அன்னசாரம்**
**ஆகியது அளவாக வான்மேற்சென்று**
**வசனமென்ன புகையூறல் உப்புமாச்சு**
**மகத்தான ரவிமதியால் பூநீராச்சு**

இந்த பாடலில், நமது எட்டுஜான் உடலுக்கு எது முதன்மையானது தலைதான், அதில் உள்ள மூளைதான் சகல முடிவுகளையும் எடுத்து, இந்த உடலை வழி நடத்திச் செல்கிறது.

அதனால் தான் சாதரணமாக மக்கள் சொல்லும் இந்த சொல்லாடலை சொல்லி இவ்வாறு கூறுகிறார்.

தலை இல்லாவிட்டால் அது முண்டம் செத்தபிணம் என்ற இயக்கமற்றதாகி விடும். ஆகவேதான் தலையைப் பற்றி அவர் கூறும் போது, அது தலையாயது (முதன்மையானது) என்று கூறுகிறார்.

அடுத்து நாம் உண்ட உணவின் சத்தானது அளவாக வான் மேற் சென்று **புகையூரல்** உப்பாச்சு என்று சொல்கிறார்.

இந்த இடத்தில் அவர் **வான்** என்று சொல்வது நம் **தலையைக்** குறிப்பிடுகிறார்.

நம் உடலில் நாம் உண்ட உணவானது இந்திய மருத்துவக் கருத்துப்படி உடலில் 7 விதத் தாதுக்களாக மாறுகிறது. அதாவது, சப்த தாதுக்கள் ஆகின்றது.

இதில் முக்கியமானது **உதிரம்** எனப்படும் **இரத்தம்.**

இது <u>வானமாகிய மூளைக்கு</u> செல்கிறது.

இதை **புகையூரல் உப்பு** என்று கூறுகிறார்.

இதுதான் பொதுவாக நெருப்பில் இருந்து விடுபடும் புகையானது எங்கு செல்கிறது மேல் நோக்கி விண்வெளியை அடைகிறது.

அதனால் இரத்தம் மூளைக்கு செல்வதை வான் மேற் சென்று **புகை யூரல் உப்பாச்சு** என உவமானமாக கூறுகிறார்.

மற்றும் மகத்தான **இரவி மதியால் பூநீராச்சு** என்று கூறுகிறார்.

**இரவி** என்றால் கதிரவனை சூரியனைக் குறிப்பிடும்.

இதை நம் உடலில் சுவாசமானது, வலது மூக்கில் சென்று வரும் போது **சூரிய கலை** என்பர். மதி என்றால்

சந்திரன், நிலா என்பர் இது இடது மூக்கில் காற்றானது சென்று வரும் போது சந்திர கலை என்பர். இந்த மூச்சுக்காற்று பயிற்சியின் போது, இதை '**பூநீர்**' என்று கூறப்படுகிறது.

இனி மேற்படி நூல் - 106 - ம் பக்கம், 676 - வது பாடலில் பார்ப்போம்.

**ஆச்சப்பா சமாதியினாற் கல்லுப்பாச்சு**
**ஆதி யென்றவுப்பச்சு இந்துப்பச்சு**
**நீச்சப்பா பாழிடத்திற் பிறந்தமுப்பு**
**நீஅறிந்தால் காயசித்தும் வாதமாச்சு**
**போச்சப்ப கலியுடனே நமனோவெல்லாம்**
**பொல்லாத சண்டாளர் நிகழ்தம்பேசி**
**ஏச்சப்பா பணம்பறித் தோடிப்போவார்**
**என்மகனே தெளிவாக இயம்பினேனே**

இப்பாடலில் மிகத் தெளிவாகக் கூறிவிட்டேன் என்கின்றார்.

ஆனால், இதை அறியாத வீணர்கள் தினசரி அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும், என்று கருதி, களர் நிலத்தில் பூநீர் எடுக்கவேண்டும், அது, இது சேர்க்க வேண்டும் என்று பலவாராக சொல்லி பணம் பறித்தோடி போவார்கள் என்கின்றார்.

நீ யோக நிலையில் **இயம, நியம** நெறி தவறாது இருந்து வந்தாயானால் சமாதி நிலையில் இருக்கும் போது கல்லுப்பு என்று பெயராச்சு.

அதே உப்பு, **இந்துப்பு** என்றும் பேராச்சு.

பாழ் இடத்தில் பிறந்த முப்புவைப் பற்றிய இந்த உண்மையை நீ அறிந்தால் **உடல் சக்தியும், வாத சக்தியும்** உண்டாகும் என்கின்றார்.

இந்தப் பாடலில் இருந்தும், முன் கூறிய பாடல்களில் இருந்தும் **முப்பு** என்பது வெளியில் கிடைப்பது அல்ல என்று அறிந்துக் கொள்வது நலம்.

இன்னும் சிலகருத்துக்களை **ஞானவெட்டியான் - 1500** ல் இருந்து பார்க்கலாம்.

**முப்பு முப்பென்று முன்னமே செப்பிய**
**வைப்பு இப்புவிமீ தறிவார்களோ**
**அப்பு முப்புவும் ஒன்றென் றுணர்வரேல்**
**கைப்பு முப்புக் கசடற முப்புவே** (பாடல் - 57)

முன் அகத்தியர் பாடலில் **சாரா நீர்** என்பது அப்பாகும் என்று சொன்னார் திருவள்ளுவர்.

இப்பாடலில் முப்பு என்று முன் சொன்னது எல்லாம் **அப்பு தான், அதுவே முப்பு** என்கின்றார்.

இதை இந்த சித்த வைத்தியர்கள் தெரிந்து, உணர்ந்துக் கொண்டார்களானால் தெளிவாக **முப்பு** முடிந்துவிடும்.

**வாசியென்றும் வழலையென்றும்**
**கெங்கையென்றும் வன்னியென்றும்**
**ஊசியென்றும் உதகமென்றும்**
**உவரென்றும் பூநீரென்றும்**
**தேசியென்றும் காரமென்றும்**
**செயநீரும் சாரமென்றும்**
**பேசிப்பேசிப் செத்தாருலகோர்**
**பேதிக்க வகையறியதாண்டே** (பாடல் - 73)

இந்தப்பாடலில் உலகோர் உண்மை தெரியாமல் **வாசி, வழலை, கெங்கை, வன்னியென்றும், ஊசியென்றும், உதகம், உவர், தேசி, பூநீர், காரம், செயநீர், சாராம்** என்று பலவிதமான பெயர்களையும் பேசிப் பேசியே காலத்தை வீணாக்கினர்.

உண்மையான செயலில் ஈடுபடத் தெரியாமல் என்று சொல்கிறார். இதைத்தான் நாமும் சிந்திக்க வேண்டும். உடனடியாக செயல்பட வேண்டும்.

**அப்பதனை விட்டால் அட்டமா சித்தியேது**
**உப்பு என்று கடல் உவறினாற் கைகூடுமோ**
**முப்புவானது அப்புவென்று மொழிவார் உண்மையாய்ச்**
**செப்பினாலுமே சித்தராவாரோ ஜெகதலப் புரட்டாண்டையே**

(ஞானவெட்டியான்)

இதில் கவனியுங்கள், அப்பை விட்டால் அட்டமா சித்தியேது, அப்படியானால் **அணிமாதி சித்திகளை** அடைய **அப்பு** அவசியம் என்று தெரிகின்றதல்லவா!.

அதனால் அப்பா உப்பு என்று கருதிக் கொண்டு கடல் உப்பை எடுத்துக் கொண்டால், அதிகப்படியான இரத்தக் கொதிப்புதான் உண்டாகுமே ஒழிய, நமக்கு அணிமாதி சித்தி உண்டாகுமா?

**முப்பு என்பது அப்பு** என்று உண்மையை சொன்னாலும் சித்தராவாரோ என்றால் முடியாது.

இது எல்லாம் பித்தலாட்டம் என்று அறிக.

**இதில் இருந்து அப்பு என்பது கடைச் சரக்குகள் அல்ல, வெளியேயும் கிடையாது என்பதையும் அறியலாம்.**

இனி ஞானக்கும்மி பாடல் - 123 ல் இவர் சொல்வதைப் பார்ப்போம்.

**முப்பு வென்று திரிவார்கள் அந்த**
**முப்பு வந்த வகை காணார்**
**அப்பூ வென்று மறந்தாக்கால்சித்தி**
**யாமென்று கும்மியடியுங்கடி** (பாடல் - 123).

**காரத்தைக் கட்ட அறியார்கள் நருஞ்**
**சாரத்தை நீற்றினஞ் செய்யாமல்**

**வீரத்தைப் பூரத்தைச் சேர்த்ததனாலடி**
**வீனல்லவோ சொல்லு ஞானப்பெண்ணே** (பாடல் - 124)

இவர் கூறுகிறார் முப்பு என்று அலைவார்கள், அந்த முப்பு வந்த வகை தெரியமாட்டர்கள், **அப்பு** என்பதை **நீர்** என்று கருதாமல் இருந்தால் சித்தியாகும்.

காரத்தைக் கட்டறியாமல் (கார, சாரம்) சாரத்தை நீற்றினஞ் செய்யாமல் கடைகளில் விற்கும் வீரத்தையும், பூரத்தையும் சேர்த்து செய்ததினால், அது வீண் செயல் என்று சொல் என்று கூறுகிறார்.

இதிலிருந்து அகத்தியர் வல்லதகி பாடலைக் கவனித்தால் கொண்டு கார, சாரம் சாரநீர் என்றது அப்பு என்பது எல்லாம் வெளியில் இருந்து கிடைக்கக் கூடியது அல்ல, கடையில் வாங்கக் கூடியதும் அல்ல என்பது நன்கு விளங்கும்.

**காடிவிட்டு கடைச் சரக்குகளை**
**நாடி விட்டுப் புடமிட நன்மையாம்**
**கூடிக்கெட்டுக் குடிகெடும் வாதிகள்**
**வாடி நட்டமிட்டு நலிவார்கள்**

(பஞ்சரத்தினம் - 500 46 வது என்ற பாடல்.)

கடையில் விற்கப்படும் சரக்குகளை வாங்கி வந்து, புளித்த காடியை விட்டு அறைத்து புடமிட நன்மையாகும்

எனவும், நாங்கள் வாதிகள் என்று (இரசவாதம் தெரிந்தவர்கள்) பலர் சேர்ந்து இவ்வாறு எல்லாம் செய்து தாங்களும் கெட்டு, இவர்களுடன் சேர்ந்தாரையும் கெடுத்து நலிவார்கள். அதாவது வீணாக மரணத்தினை அடைவார்கள்.

இனி இந்த முப்புவில் **அண்டம், பிண்டம்** என்று முப்புவுக்கான பெயர்களில் பேசப்படுவதை பார்ப்போம்.

**அண்டமென்றும் அவனியிலே பலர்**
**அங்கும்மிங்கு மலைந்து தயங்கினார்**
**பிண்டமென்று முயிர்தனைக் கொன்றுதாம்**
**பேதையாகி நரகத்தி லாந்தினார்**
**துண்டமிட்டுத் துளைக்குந் தரும்பொருள்**
**சொல்லரிய பேரண்டமு மாகுமோ**
**கண்ட கண்டபடி வெளிகாண்கிலார்**
**கருத்தறிந்து கலப்பர்கள் ஞானியே -** (பஞ்சரத்தினம் - 22)

**ஆதியான என்னன்னையின் அண்டத்தில்**
**ஆனவைம்பத் தோரஷரத் தோடுசேர்**
**சோதியான சுருதி முடியாது**
**சொல்ல வொண்ணாத சுத்தச்சுடரொளி**
**சாதிமதமொடு சமயத்திற் சண்டைசெய்**
**தன்மையர்கட்கது தானது கிட்டுமோ**
**ஓதிநூல்களின் நுட்பந் தானறிவரோ**
**உண்மையிலண்ட முனக்குள்ளு மாகுமே - (**பஞ்சரத்தினம் - 23)

இந்த இருபாடலிலும் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

அண்டம் என்பதை முட்டை என்று எண்ணி, ஏமாந்து பலரும், பலவிதமாக அலைகின்றனர்.

பிண்டம் என்பது உடலைக் குறிப்பதால் பலவித உயிர்களையும் கொன்று, குவித்து, பல்வேறு துன்பத்துக்கு உள்ளாகின்றனர் இந்த வீணர்கள் என்கின்றார்.

சொல்லவே அரியதான அண்டமானது வெட்டிக் கூறு போடும் உயிர்கள் பேரண்டமாகுமோ?

கண்டபடி முப்பு எது என்று தெரியாமல் கருத்துக்களை சொல்கின்றனர் இந்த மூடர்கள். ஆனால், உண்மையை அறிந்த ஞானிகள் கருத்தறிந்து கூறுவார்கள் என்கின்றார்.

ஆதியான எல்லாவற்றுக்கும் முதன்மையான என் அன்னையின் அண்டத்தினாலான ஐம்பத்தோர் அட்சரத்தோடு இணைக.

*__ஐம்பத்தோர் அட்சரம்__ என்பது மூலாதாரம் - சுவாதிட்டானம் - மணிபூரகம் - அனாகதம் - விசுத்தி - ஆக்ஞா - என்னும் ஆதாரங்களின் கூட்டுத்தொகையாகும்.

(ஆதாரம் ஞானவெட்டியான் 1500)

அந்த பேரோளியானது மனத்தில் சாதி பேதங்களையும், உயர்வு, தாழ்வு, பொன்னாசை, பொருளாசை, பெண்ணாசை, வெறுப்பு, விருப்பு, போன்ற குண பேதங்களில் இருந்துக்

கொண்டும், **இயம, நியம** விதிகளை முறையாக அறிந்து அதன்படி நடக்காதவர்களுக்கும், நல்ல நூல்களைப் படித்து அதன் உண்மையான கருத்தை அறிந்து, அதன்படி நடவாதவர்களுக்கும் கிடைக்குமோ? என்று கேட்கின்றார்.

பொதுவாக சித்தர்கள் இயம, நியமத்தினை சரியாகக் கடைப் பிடிப்பவர்களுக்கே வழிகாட்டுவார்கள்.

சரி! **இயமம், நியமம்** என்றால் என்ன?

இது அட்டாங்க யோகத்திற்கு நுழைவு வாயில்.

இதனை கடைபிடிக்காமல் யாரும் இந்த முப்பு செய்வதில் கடைத்தேற முடியாது. மனித சட்டங்களை நாம் எப்படி நமக்குள் வகுத்துக்கொண்டு கடைப்பிடிகின்றோமோ அவ்வாறே, சித்தர் சட்டங்களையும் நாம் நடைமுறையில் கொண்டு வருவது மட்டுமே, இதுப் போன்ற சித்தர் இரகஷியம் வெளிப்படும் எனலாம்.

ஆகவே, அவர்கள் கூறும் சட்ட, திட்டங்களை நாம் நம் நடைமுறை வாழ்வில் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

அதனை விடுத்து, நான் தியானம் கற்றுக்கொண்டேன், ஆசனம் கற்றுக்கொண்டேன், அனால், ஒரு நாளைக்கு ஒரு சிகரெட் பாக்கெட் மட்டும்தான் குடிப்பேன், தினமும் மதுவினை தொடுவதில்லை, ஆனால் ஞாயிற்றுக்கிழமை

வந்தால் மட்டும் ஒரு பெக் போடுவேன், சிக்கன் மட்டுமே சாப்பிடுவேன், மற்றபடி பிழைப்பு நடத்துவதற்காக அவ்வப் பொழுது பல பொய்களைப் பேசுவேன், வியாபாரம் என்று வந்துவிட்டால் என்னுடைய சரக்குதான் சிறந்தது என ஏமாற்றுவேன், அதிக இலாபத்திற்கு ஆசைப்படுவேன், அனைத்து கோவில்களுக்கும் என்னுடைய பெயர் அனைவருக்கும் தெரியும்படி உபயம் என எழுதி அதனை கோவில் வாசலில் மாட்டி வைப்பேன். நான் ஒரு மிகப்பெரிய ஆன்மீகவாதி, யோகி என்று கூறிக்கொள்பவர்களுக்கு இந்த முப்பு என்றுமே கைகூடாது.

## 10. சித்தர்களின் இயமம், நியமம்

இந்த யோகத்திற்கு அடிப்படையாக இருப்பது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டுவிதமான செயல் நெறிகளாகும்.

இந்த செயல் நெறிகள் யாவும் மனத்தையும், உடலையும் பக்குவப்படுத்தவும் செய்யப்படும் பயிற்சியாகும்.

இதில் முதல் மூன்று பயிற்சியே இதன் அடித்தளம் இயமம், நியமம், ஆசனம் இது மூன்றும் நிலைப்படாவிடில் சித்தர்களின் உயரிய நிலையை அடைய முடியாது.

நாம் ஒரு தொழிலுக்கு எவ்வாறு பயிற்சி பெறுகிறோமோ அதுபோல் பயிற்சி பெற வேண்டும்.

முதலில் மனதை பக்குவப் படுத்தும் பயிற்சி இதை இயமம் என்று அழைக்கின்றனர்.

பின் அதை நிலை நிறுத்துதல், பின் நீண்டநேரம் உடலை ஒரே நிலையில் இருக்கச் செய்யும் அமரும்படி செய்தல்.

இந்த நிலை குறித்து ஞானவெட்டியான் - 1500 ல் கூறியுள்ளதைக் காணலாம்.

**"அட்டாங்கயோகம் அதுபலித்திட அருளும்முத்தி**
**தொட்டங்கு நின்றுதுணையாய் இயம நியம ஆசனம்**
**பட்டாங்கில் உள்ளபடி யறிந்து பாலிக்காதார்க்கு**
**முட்டாங்கு முப்பு முடியாது மொழிந்தேனிது சத்தியமே. "**

இது உண்மையையே உறுதி படசொல்கிறார். இதில் இருந்து அட்டாங்க யோக பயிற்சி அவசியம் என்பது புரியலாம்.

இந்த கட்டமைப்பை புரிந்து கொள்ளாதவர்களும் இக்கருத்தை உறுதியாக நிலை கொள்ளாதவர்களும் முத்தி நிலையடையவே முடியாது.

இனி, **இயமம்** பற்றிப் பார்ப்போம்.

**அஹிம்ஸ சத்யாஸ்தேய பிரம்மசர்யாபரிக்ரஹா யம: ||30||**

(பதஞ்சலி யோக சூத்திரம் - 30)

அகிம்சை = உயிர்களைத் துன்புறுத்தாமை.
சத்யம் = உண்மை
ஆஸ்த்ரேய = திருடாமை
ப்ரம்மச்சாரியம் = புலனடக்கம்
அபரிக்ரஹ = தன்னடக்கம்

இவைகள் அனைத்தும் சேர்ந்ததே **இயமம்** என்ற வழி அல்லது நெறி.

கொல்லாமை, உண்மை பேசுதல், திருடாமை, பெண் உறவு கொள்ளாமை, பிறரிடம் பொருள் வேண்டாமை பிறர் பொருள் மீது ஆசை கொள்ளாமை என்று நெறிகளை உறுதி பட செயல் படுத்த வேண்டும்.

இது, புத்த, சமண மதங்களின் வாழ்வியல் நெறியாகும்.

இவ்வாறே திருமூலர் கூறுதைப் பார்க்கலாம்.

**கொல்லன், பொய்கூறான், களவு இலான், எக்குணத்தும்**
**நல்லான், அடக்கம் உடையான், நடச்செய்ய**
**வல்லான், பகுத்துஉண்பான், மாசுஇலான், கள்காமம்**
**இல்லான் இயமத்து - இடையில் நின்றானே.** (திருமந்திரம் - 547)

இவர் சொல்லும் போது நல்லவன் அது மட்டும் அல்ல வல்லவன் பிற உயிர்க்கும் ஈந்து பகுத்து உண்பான், அடக்கம் உடையான் என்னும் இத்தகைய குணங்களுடன் கூடியவன் என்றும். இது இயம நெறியாக சொல்கிறார்.

## நியமம்

**சௌச சம்தோச தப: ஸ்வாத்யாஈஸ்வரபிரணிதநாநி நியமா: ||32||**

(பதஞ்சலி யோக சூத்திரம் - 32)

(சுத்தம், திருப்தி, தவம், சுயதேடல், சரணாகதியே நியமம்)

**விதர்கபாதநே பிரதிப்ரக்ஷபாவநம் ||33||**

(பதஞ்சலி யோக சூத்திரம் - 33)

(தீய உணர்வை நீக்க எதிரானதை மேற்கொள்ளலாம்)

**செயல்படும்போது சந்தேகம் வந்தால், அதற்கு எதிர்பதத்தை பாவிக்க வேண்டும்.**

இங்கு கூறப்படுகின்ற கருத்து, உடலுக்கு நோய் வருவது போல மனதுக்கும் நோய் வரும்.

அவைகள், **கோபம், தாபம், தயக்கம், பட படப்பு, பயம், மன அழுத்தம், பொறாமை,** என்று எவ்வளவோ மனம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் வரும்.

அவற்றை எவ்வாறு சரி செய்வது?

உடலுக்கு ஒரு சிக்கல் என்றால், அதை சரி செய்து கொள்ள உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டு.

உடம்பு அந்த சிக்கலை தானே சரி செய்து கொள்ளும். முடியாத நேரங்களில் நாம் சில மருந்துகளை தந்து அதை குணப்படுத்தலாம்.

உதாரணமாக, நாள் பட்ட உணவை உண்டால், வாந்தி பேதி என்று வந்து உடம்பு அந்த கெட்ட உணவை வெளியே தள்ளி விடும்.

காயம் பட்டு, இரத்தம் கசிந்தால், தானே இரத்தம் உறைந்து மேலும் இரத்தம் வெளியேறுவதை தடுக்கும்.

மனதுக்கு அப்படி ஒரு வழி இல்லை. சிக்கல் வந்தால், அதை தானே சரி செய்து கொள்ளத் தெரியாது.

நாம் தான் ஏதாவது செய்ய வேண்டும்.

என்ன செய்ய வேண்டும் என்று பதஞ்சலி கூறுகிறார்.

உங்களுக்கு எந்த விதமான மன சிக்கல் இருக்கிறதோ அதற்கு எதிரான மன நிலையை பாவித்துக் கொள்ளுங்கள்.

உதாரணமாக,

ஒருவர் மேல் உங்களுக்கு அளவு கடந்த கோபம். ஏனோ தெரியவில்லை, அவரைப் பார்த்தாலே பத்திக் கொண்டு வருகிறது. அனால், அவர் உங்கள் வாழ்வில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறார். அவரை தவிர்க்கவும் முடியாது.

என்ன செய்யலாம்?

கோபத்திற்கு எதிர் நிலை, அன்பு, கருணை. அவர் மேல் அன்பு செலுத்துங்கள் என்று சொல்லவில்லை.

மனதில் அன்பை வரவழைத்துக் கொள்ளுங்கள். கோபம் போய் விடும். அன்பு என்ற பாவனை கொள்ளுங்கள். மனம் ஒரே நேரத்தில் இரண்டு எதிர் நிலையில் இருக்க முடியாது.

**அன்பு இருந்தால், கோபம் இருக்காது. கோபம் இருந்தால் அன்பு இருக்காது.**

மனம் சோர்வாக இருக்கிறதா?

மிக மிக உற்சாகமாக இருப்பதாக கற்பனை பண்ணிக் கொள்ளுங்கள். சுறு சுறுப்பாக இருப்பதாக கற்பனை செய்யுங்கள். உடனே நீங்கள் எழுந்து ஓட வேண்டாம்.

சுறு சுறுப்பாக இருந்தால் மனம் எப்படி பர பரப்பாக இருக்குமோ அப்படி நினைத்துக் கொள்ளுங்கள்.

சோர்வு பறந்து விடும்.

பயமாக இருக்கிறதா?

மிக மிக தைரியமாக இருப்பதாக பாவித்துக் கொள்ளுங்கள். தைரியம் வருகிறதோ இல்லையோ, பயம் நிச்சயம் போய் விடும்.

தயக்கம் இருக்கிறதா?

உறுதியாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மனம் எப்படி இருக்கிறதோ, அதையே எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு இருந்தால், அந்த மன நிலையே மேலும் உறுதிப்படும்.

வாழ்வில் எதைப் பார்த்தாலும் பயமாக இருந்தால், எல்லோரிடமும் அதையே சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள்.

மாறாக, "**பயமா, எனக்கா, எனக்கு எதை கண்டும் பயம் இல்லை**" என்று சொல்லுங்கள். நாளடைவில் பயம் உங்களை விட்டு விட்டுப் போய் விடும்.

பல மாணவர்களுக்கு கணக்கை கண்டால் காலனை கண்டதைப் போல பயம். எனக்கு கணக்கு வராது, கணக்கு டீச்சர் சரி இல்லை, கணக்கு புத்தகம் சரி இல்லை என்று சொல்லிக் கொண்டு திரிவார்கள். அப்படி சொல்லிக் கொண்டிருந்தால் கட்டாயம் கணக்கு வராது.

மாறாக, 'கணக்கு எனக்கு ரொம்ப பிடிக்கும். கடினம் என்றாலும் அதில் ஒரு த்ரில் இருக்கு. எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, நான் கணக்கு போட்டு பார்ப்பேன்" என்று கூற வேண்டும்.

எனக்கு வயதாகி விட்டது. நின்னா உக்கார முடியல, உக்காந்தா நிக்க முடியலை என்று ஒரு நோயாளி போல சொல்லிக் கொண்டு திரியக் கூடாது.

வயதான காலத்திலும் நான் ஆரோக்கியமாக இருக்கிறேன், சுறுசுறுப்பாக இருக்கிறேன் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

அது தான், எதிர் வினை.

மனம் போல மாங்கல்யம் என்று சொல்லுவார்கள்.

நாம் என்ன நினைக்கிறோமோ அதுவே நடக்கும். உலகுக்கு அல்ல, நமக்கு.

எனவே, எப்போதும் நல்ல சிந்தனைகளை மட்டும் மனதில் வையுங்கள்.

எப்போது பார்த்தாலும் ஏதாவது பிரச்சனை என்று சொல்லிக் கொண்டு இருப்பவர்களை விட்டு தூர விலகி நில்லுங்கள்.

நல்லவர்களோடு சேர்ந்து இருங்கள். அவர்கள் சொல்வதை கேளுங்கள். மனதை உயர்ந்த சிந்தனைகளால் நிறையுங்கள். வாழ்வு சிறப்பாக இருக்கும். இருக்கட்டும்.

**விதர்கா ஹிம்சாதய: க்ருதகாரிதாநுமோதிதா லோப க்ரோத மோஹாஅபூர்வகா ம்ருதுமத்ய அதிமாத்ர**

**துக்ககாஜ்ஞானானந்தபளா இதி ப்ரதிப்ரக்ஷ பாவனம் ||34||**

(எதிரானதை மேற்கொள்வதால் வன்முறை, பொறாமை, கோபம், மோகம், துக்கம், அறியாமை போன்றவற்றை நீக்கலாம்)

வன்முறையான எண்ணங்கள் முடிவில்லா துன்பத்தை மற்றும் அறிவீனத்தையும் தரும்.

நீங்கள் செய்பவரா அல்லது செய்யத் தூண்டுபவரா என்பது முக்கியம் அல்ல.

அல்லது அந்த வன்மையான எண்ணங்கள் பேராசை, மயக்கம், குழப்பம் போன்றவற்றால் தோன்றியதா அல்லது வேறு எதில் இருந்தும் தோன்றியதா என்பது முக்கியம் அல்ல.

அது போல, அந்த எண்ணங்கள் வலிமை குறைந்ததா, வலிமையானதா, அல்லது இரண்டுக்கும் இடைப்பட்டதா என்பதும் முக்கியம் அல்ல.

எது எவ்வாறாயினும், நல்லது அல்லாத எண்ணங் களுக்கு மருந்து அதற்கு எதிரான நல்ல எண்ணங்களை மேற்கொள்வது மட்டும்தான்.

இது ஒரு மிக மிக முக்கியமான சூத்திரம்.

கவனமாக படியுங்கள். ஒன்றுக்கு பல முறை படிக்க வேண்டும்.

முந்தைய சூத்திரத்தில், ஒரு தவறான அல்லது நெகடிவ் எண்ணங்கள் வந்தால் அதை நல்ல அல்லது பாசிட்டிவ் எண்ணங்கள் மூலம் சரி செய்யலாம் என்று பார்த்தோம்.

இங்கே அதை மேலும் விளக்குகிறார்.

எண்ணங்கள் செயலில் முடிகின்றன.

இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் எந்த எண்ணங்களை கொண்டிருக்கிறோமோ, அந்த எண்ணங்கள் அதற்கு உண்டான செயலை, விளைவை உண்டாக்கும்.

கட்டாயமாக. நான் முட்டாள், நான் முட்டாள் என்று எந்நேரமும் நினைத்துக் கொண்டே இருந்தால், நாளடைவில் முட்டாளாகவே ஆகி விடுவோம்.

சர்வ நிச்சயமாக. இதில் பதஞ்சலி மிக முக்கியமான ஒன்றை சொல்கிறார்.

அந்த எண்ணங்களை நீங்களே உருவாக்கிக் கொண்டாலும் சரி அல்லது மற்றவர்கள் உங்களுக்குள் ஏற்றி விட்டாலும் சரி, விளைவு ஒன்றுதான்.

கெட்ட எண்ணங்கள், தீய எண்ணங்கள், தவறான எண்ணங்கள், நன்மை தராத எண்ணங்கள் என அவைகள்

கொஞ்சமாக, நடுத்தரமாக அல்லது அதிகமாக என்று எப்படியிருந்தாலும் அதற்கேற்ப தீமை நிச்சயம் விளையும்.

எனவே, அவற்றை அடியோடு உடனே அழித்து ஒழிக்க வேண்டும்.

இதற்கு முந்தைய சூத்திரத்தில் கூறிய எதிர் மனோ பாவம் உதவும். எனவே, எப்போதும் உங்கள் மனதில் என்ன ஓடுகிறது என்று கவனியுங்கள்.

பொறாமை, **பயம், கோபம், வெறுப்பு,** எரிச்சல், **துவேஷம், சலிப்பு, சோம்பல், நம்பிக்கை இன்மை, தன்னம்பிக்கை இன்மை, சந்தேகம்** என்று இது போன்ற தவறான எண்ணங்கள் இருந்தால் உடனே அதற்கு எதிர் மறையான எண்ணங்களை கொண்டு வாருங்கள்.

உங்களை சுற்றி உள்ளவர்களை எடை போடுங்கள். அவர்கள் உங்களுக்குள் விதைக்கும் எண்ணங்களை பற்றி சிந்தியுங்கள்.

இதில் சிக்கல் என்ன என்றால் உங்களுக்கு மிக மிக அருகில் உள்ளவர்கள் உங்களுக்குள் விதைக்கும் எண்ணங்கள் உங்களுக்கு சட்டென்று விளங்காது.

பெற்றோர், கணவன், மனைவி, சகோதர சகோதரிகள் இவர்கள் உங்களை பற்றி உங்களிடம் சொல்லும் எண்ணங்கள் மிக இயல்பாக உங்களுக்குள் சென்று படிந்து விடும்.

கவனமாக இருங்கள். **"உங்களுக்கு ஒண்ணும் தெரியாது"** என்று மனைவி கணவனைப் பார்த்து அடிக்கடி சொல்லுவது வேண்டுமானால் மிக இயல்பாக இருக்கலாம்.

ஆனால், அந்த நஞ்சு நாளடைவில் அவன் பல தவறுகள் செய்ய இடம் கொடுத்து விடும்.

ஒன்றும் தெரியாததால் தவறு செய்து விடுவான்.

அலுவலகத்தில் பதவி உயர்வு கிடைக்காது.

நன்றாகத்தானே உழைக்கிறேன் எனக்கு ஏன் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று கணவன் மண்டையை உடைத்துக் கொண்டிருப்பான்.

காரணம் அவனுக்குள் விதைக்கப்பட்ட நஞ்சு **"உங்களுக்கு ஒரு மண்ணும் தெரியாது"** என்று அடிக்கடி சொல்லப்பட்டது.

உங்கள் நண்பர்கள், அலுவலக அதிகாரிகள், உறவினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாமனார், நாத்தனார், அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்று பட்டியல் போட்டுக் கொள்ளுங்கள்.

இதில் யார் யார் உங்களுக்குள் நல்ல எண்ணங்களை விதைக்கிறார்கள், யார் யார் நல்லது அல்லாத எண்ணங்களை விதைக்கிறார்கள் என்று பாருங்கள்.

அடுத்தது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் மற்றவர்களுக்கு.

நீங்கள் மற்றவர்களுக்குள் தீய எண்ணங்களை விதைத்தால் அது உங்களுக்குள்ளும் இருக்கும்.

**"உங்களுக்கு ஒண்ணும் தெரியாது"** என்று சொல்லும் மனைவி தனக்குள்ளும் அந்த எண்ணங்களை விதைத்துக் கொள்ளுகிறாள்.

தன்னிடம் ஒன்றும் இல்லை என்பதை மறைக்க மற்றவர்களிடம் ஒன்றும் இல்லை. நான் அவர்களை விட மோசம் இல்லை என்று தனக்குத் தானே உறுதி செய்து கொள்ளும் உத்தி.

நீங்கள் உங்கள் பிள்ளைகளிடம், கணவன்/ மனைவியிடம், நண்பர்களிடம், உறவினர்களிடம் என்ன மாதிரி எண்ணங்களை விதைக்கிறீர்கள் என்று கவனியுங்கள்.

நீங்கள் விதைத்தாலும், உங்களுக்குள் விதைக்கப் பட்டாலும் விளைவு ஒன்று தான்.

அடுத்தது, நீங்கள் வாழும் இடம் மற்றும் அதன் சூழ்நிலை. நன்றாக உங்கள் மனதை கவனித்துப் பாருங்கள். ஒரு கோவிலுக்குப் போகிறீர்கள்.

உள்ளே நுழைந்தவுடன் உங்கள் மனதில் ஒரு மெல்லிய மாற்றம் நிகழ்வதை கவனித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் உள்ளுணர்வை கூர்மை படுத்திக் கொண்டால் அந்த மெல்லிய மன மாற்றங்களை உங்களால் அறிய முடியும்.

**"அந்த கோவிலுக்கு போய் விட்டு வந்தால், ஏதோ ஒரு மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது"** என்று சொல்ல கேட்டு இருக்கிறீர்களா?

ஏன் அப்படி?

கோவிலுக்கு ஏராளமான மக்கள் வருகிறார்கள்.

அவர்களின் எண்ணங்கள் உங்களை பாதிக்கும். ஒரு எதிர்பார்ப்போடு, ஒரு நம்பிக்கையோடு பலர் அங்கே வருவதால், அவர்களின் நம்பிக்கை எண்ணங்கள் உங்களையும் பாதிக்கும், உங்களுக்குள்ளும் ஒரு நம்பிக்கையை உண்டாக்கும்.

மாறாக ஒரு மருத்துவ மனைக்கு சென்று பாருங்கள். உங்கள் மன நிலை வேறு மாதிரி மாறும்.

நீங்கள் வாழும் இடம், பணி புரியும் இடம், நீங்கள் செல்லும் இடங்கள் உங்கள் மனதை பாதிக்கும். சினிமா கொட்டகை, உணவு விடுதி இங்கெல்லாம் மக்கள் தங்கள் எண்ணங்களை விட்டுச் செல்கிறார்கள்.

உங்களை அறியாமலேயே அவை உங்களுக்குள் செல்லும்.

எனவே தான், நாம் வாழும் இடம், நம்மை சுற்றி உள்ளவர்கள், நாம் அடிக்கடி போகும் இடம் இவற்றை பற்றி நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

தேவை என்றால் மாற்றவும் வேண்டும்.

உங்கள் கணவரோ மனைவியோ உங்களுக்குள் தீய எண்ணங்களை விதைத்துக் கொண்டிருந்தால், அவர்களிடம் சொல்லித் திருத்துங்கள்.

முடியவில்லையா, அவர்கள் சொல்வதற்கு எதிர் மனோ பாவத்தை கொண்டு வாருங்கள்.

உலகை நம்மால் திருத்த முடியாது. எனவே நாம் எப்படி நம்மை சரி செய்து கொள்ளலாம் என்று பதஞ்சலி சொல்லித் தருகிறார்.

எண்ணங்களை கவனியுங்கள்.

அவை வாழ்க்கையை உண்டாக்குபவை.

தூக்கத்தில் இருந்து விழித்துக் கொள்ளுங்கள். என்ன நடக்கிறது என்று கவனியுங்கள்.

நலமே அடைய வாழ்த்துக்கள்.

இதைப்பற்றி திருமூலர் சொல்லுவதைக் காணலாம்.

**ஆதியை வேதத்தின் அப்பொருளாளனை**
**சோதியை, அங்கே சுடுகின்ற அங்கியைப்**
**பாதியுள் மன்னு பராசக்தியோடு உடன்**
**நீதி யுணர்ந்து நியமத்தனாமே -** (திருமந்திரம் - 548)

முதல் பொருளும், அனாதி பொருளுமானவனும் வேதமும் சொல்லும் பொருளாய் உள்ளவனும், சோதி உருவமாய் உள்ளவனும், ஆகிய சிவனுடன் நம் மூலக்கனல் என்னும் தீ, சக்தியை தலை உச்சியில் உள்ள ஆயிரம் இதழ் தாமாரையாகிய சஹஸ்ராரத் ஸ்தலத்தில் இணைப்பதற்கு நடுநிலை தவறாது, உண்மையோடு செயலில் இருப்பதே நியமாம் என்பது திருமூலர் கருத்து.

மனித சிருஷ்டியானது, மனிதன் தன்னுள் இருக்கும் சக்தியை சரியாக பயன் படுத்தி, அந்த மகா சக்தியுடன் இரண்டற கலப்பதே நோக்கம் ஆகும்.

## 11. விந்து - நாதம்

**உண்மையில் அண்டம் என்பது உனக்குள்தான் உள்ளது.**

இவ்வாறே, இன்னும் சிலர் சித்தர்களின் பாடல்களைத் தவறாக புரிந்து கொண்டு பெண்களின் மாதவிடாய் நீரை

எடுத்து, அதனைக் கொண்டு **முப்பு** என்பதற்குப் பயன் படுத்துகிறார்கள்.

அது பற்றிய நாயனாரின் கருத்துப் பார்ப்போம்.

**சுக்கிலம் சுரோணிதம் மென்று சுருதிகளரைந்திடும்**
**கக்கிடும் எண்ணை கழுட்டறியாப்பதற்க ளொன்றுகூடி**
**மக்கிடும் மங்கையர் ஊண்தேடி மதியழிந்து போனார்**
**எக்கலிட்ட நதிபோல் இவர்வாழ்வு இற்றதினாலான்டே**

(பஞ்ச பாடல் - 66)

இனி இது போல் ஆண்களின் விந்துவும், பெண்களின் நாதமாகிய கருமுட்டையும் பற்றி எல்லாம் சித்தர்கள் சொன்னதாக நம்பி, முப்பு என எதனையோ செய்து. எதை எதையோ உண்பதற்காக, மங்கையர்களை தேடி மாதவிடாய் நீரை பெற்ற அறிவிலிகளை என்னவென்று சொல்வது?

அந்த நாதம் ஒலியினை உணர்ந்தால், அதுவும் விந்து என்பதுவும் வேறு, வேறு அல்ல என்பது புரியும். அந்த மறைப்பானது தெரியும்.

**விந்துநாத மென்றுசொன்ன மேதினிபுறட்டெல்லாம்**
**வந்தவிதமேது இரண்டு வாரதாக வாய்க்குமே**
**அந்தநாதமே அறிந்தால் விந்து வேறுயில்லையே**
**இந்தவாதேமே மறைத்த பூட்டறியு மாண்டையே** (பஞ்ச பாடல் - 99)

**விந்துவோடு நாதம்கூடி விளைந்துமே யிருக்கையில்**
**நொந்துமேவி வேறதாக நோக்கினால் கிடைக்குமோ**
**சந்திரன் கலையினால் சனித்த நாதம் விதுவாம்**
**அந்தகன் போல்சுற்றினால் அகப்படுவ தில்லையே**

(பஞ்ச பாடல் - 100)

இந்த இரு பாடலையும் நோக்கினால் **விந்து, நாதம்,** என்பது என்ன? என்பதும் புரியும்.

மற்றும் சித்தர் நூல்களில் அங்காங்கே பாடல்களை கூர்ந்து கவனித்தோமானால், அந்த பாடல்களில் நீங்கள் முப்பு புறத்தில் கூறப்பட்ட நாமங்கள் (பெயர்கள்) பற்றியதற்கான விளக்கங்களும் குறிப்புகளும் சொல்லியுள்ளனர் ஆனால் மாற்றி மாற்றி கூறி வருவதை அறியலாம்.

**விந்துவும் + நாதம்** இரண்டும் சேர்ந்ததால் பிறந்தது.

[இதை விட்டு வேறாக எண்ணி கொண்டால் கிடைக்குமோ. இது சுவாசப் பயிற்சியின் போது **சந்திரகலை** (இடது மூக்கு சுவாசம்) உற்பத்தியான நாதமானாது விந்துவாகும்.]

இதை விடுத்து, கண் இழந்த குருடன் போல் சுற்றினால் அகப்படுமா? யோசியுங்கள்!

**விந்துவுடன் நாதமது மேவியேநற் கெங்கையொடு**
**சுந்தர காசசமாதியில் தோன்றிவரும் - அந்தவுப்பு**
**முப்புவென்றே யறிவார் மூதலத்திலே தெளிந்தோர்**
**அப்பு முப்பு மொன்றானதால்**

(பஞ்ச பாடல் - 118)

இந்த மேற்கண்ட பாடலை நோக்குவோம் **விந்துவும் + நாதம் + கெங்கை** இது மூன்றும் கலந்து அழகான சமாதி **நிலையில்** தோன்றும் அந்த உப்பு **முப்பு** என்று அறிவுள்ளோர்கள் அறிவார்கள்.

அப்பும் முப்பும் ஒன்றானதால்.

இதே கருத்தை இத்தொகுதியின் முன் அதத்தியர் வல்லாதி நூலில் பாடல் 676 லில் கூறியுள்ள கருத்தையும் ஒப்பிட்டு நோக்குங்கள்.

**ஆதியென்ற நாதமது அண்டத்திற் றானேது**
**சோதியென்று தொல்லுலகி லாரறிவார்- வாதிகள்தாம்**
**கடைச்சரக்கைக் தான்சுட்டுக் காய்ந்தார்க்க ளல்லால்**
**கடைச் சரக்கால் ஆவதுதான் இன்று**

(பஞ்ச பாடல் - 158)

ஆதி என்றும் மூலம் ஆரம்பமாகியதுக்கு காரணமாகிய நாதம் முட்டையில் ஏது?

அது சோதியாகிய ஒளி என்பதை அறிபவர்கள் யார்?

ஆனால் இராசவாதிகள் கடைச்சரக்குகளை சுட்டு (புடம்) போட்டு வெந்து, நொந்து போவார்கள். கடைச் சரக்கினால் ஆவது முப்பு இல்லை.

**சொன்ன ஞானவெட்டிச் சுருதி கண்டும்**
**பொன்னை மேவுவரோ பெரியோர் பொய்பேசார்**
**இன்னுமிவ் வுலகில் எத்தனைபேர் ஞானியானார்**
**அன்னை குண்டலி அடிமலர் அவாவினாலே**

(பஞ்ச பாடல் - 191)

அன்னையாகிய குண்டலியின் அடிமலர் காண விரும்பும் பெரியவர்கள் என்றுமே பொய் பேசமாட்டார்கள். இத்தகையவர்கள் தங்கம் செய்யவோ அல்லது தங்கத்தை விரும்பவும் மாட்டார்கள்.

இது ஞானவெட்டியான் நூலில் கூறிய முடிவு கண்டும் இவ்வுலகில் எத்தனை பேர் ஞானியானர்கள் என்பதை அறியும் பொழுது, அவர்கள் தங்கம் செய்தார்கள் என்று கூறுவது மிகவும் தவறு.

சித்தவைத்தியம் பார்க்கின்ற சித்த வைத்தியர்கள் மருத்துவத்திற்காக, இதுப்போன்ற சித்தர் நூல்களை படிக்கும் பொழுது, சித்தர்களின் வேதியியல் விஷயங்கள் இவர்களை கவர்ந்து சித்தர்களின் இரசவாதம் (சாதாரண உலோகத்தினை

தங்கமாக மாற்றுதல்) என்னும் கலையை படித்து தாங்களும் தங்கம் செய்து பிழைப்பு நடத்திக் கொள்ளலாம் என அபரிமிதமான ஆசையால் உந்தப்பட்டு, சித்தர்களின் பரிபாசை பாடல்களின் பொருள் புரியாமல், தானும் கெட்டு, தன்னை சார்ந்து வந்த சிஷ்யர்களையும் கெடுத்து, மிகுந்த பொருள் ஆசையினால், உலோகத்தினை தங்கமாக்கும் அதே மருந்து மனிதனை மரணத்திலிருந்து மீட்கும் எனக் கருதி, நிறைய பணத்தினை சூதாட்டத்தில் விட்டதுபோல, இங்கு வாது செய்ய பணத்தை விட்டு பரதேசியாக வறுமை நிலைக்கு வந்தவர்கள் அனேகர்.

ஞானிகள் தாங்கள் கண்டுணர்ந்த இந்த முப்புவை பரிபாசையில் பாடியதற்கு காரணம் இருக்கின்றது. ஏனெனில். இதுப்போன்ற பிரம்ம இரகஷியங்கள் எளிதில் மற்றவர்களால் அடைய முடியுமானால், அதன் மகத்துவம் அறியாத துர்மதி படைத்த மடையர்கள், மற்றவர்களை மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கி, அவர்களை அடிமையாக்கி, இந்த உலகத்திற்கே அழிவு உண்டாகி விடுவார்கள் என்பதினால்தான் சித்தர்கள் இந்த மறைப் பொருளை மறைத்து வைத்தனர்.

ஆகையால், உண்மையாகவும் ஆழமான தேடுதலும் உள்ள நல்லவர்களுக்கு மட்டுமே, இதுப் போன்ற சித்தர் இரக்ஷியங்கள் சென்றடைய வேண்டும் என்றும், சரியான சத்குருவை சரணடைந்து பக்தி செய்கின்ற உண்மை சிஷ்யனுக்கு மட்டுமே இதைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நல் நோக்கத்தில், இந்த சித்தர்கள் அவர்களின் இயம,

நியம நிலைகளை உணர்ந்து, அதன் பிறகு அவர்களுக்கு இந்த இரகஷியத்தை போதித்தனர்.

இன்னும் சிலர் இதுப்போன்ற புத்தகங்களைப் படித்து பலன் அடையலாம் என்று கருதிக் கொண்டு இருக்கின்றனர். ஆனால், அது சித்த சுத்தி உண்டாகாத சாதகனுக்கு சற்றும் புரியாது என்பதையும் அறிக. ஆகவே, சரியான தகுதியை அடைந்த அதிகாரிகளுக்கு மட்டுமே இறைவன் தரும் பரிசு இந்த முப்பு எனலாம்.

## 12. <u>இரசவாதம்</u>

அதனைவிடுத்து தங்கம் செய்ய ஆசை கொண்டவர் களுக்கு கீழே உள்ள பஞ்சரத்தினம் பாடல் 200 - ல் பார்க்கவும்.

**சத்தந் தன்னொடு புலனைந்தும்**
**சடலமிசை ஒடுங்கிச் சதானந்தமாயிருந்து**
**நத்தும் துறையரிய நாடோறும்**
**சற்சங்கமோடு ஞானநூறு கேள்வி வேண்டும்**
**பித்தம்கொ ண்டுதலை கிறுகிறுத்துச்**
**சரக்குளைப் பேதிக்கத் திரியுமூடர்க்குச்**
**சித்தப் பிரமைதவிர வேறில்லை**
**சித்தர் சொன்ன மறைப்பு தாண்டையே**

(பஞ்ச பாடல் - 200)

ஒலி என்னும் **ஓசை, நாற்றம், சுவை, உணர்வு, பார்வை** ஆகிய ஐம்பொறிகளின் வாயிலாகப் பெறப்படும் செயல்களை ஒடுக்கி (எண்ணத்தை அவைகளின் வழியாகச் செல்லவிடாமல்) மனதினை நிறுத்தி எந்த நேரமும் நல்ல ஒழுக்க நெறியினைத் தழுவும் பெரியோர்களின் உறவும், நல்ல நூல்கள் படிப்பும் கொண்டு தான் செல்லும் வழிக்கு அறிய உதவியாக இருப்பவர்கள் பழக்கம் கொண்டு தன் எண்ணத்தை சதா பேரின்ப நிலையில் இருக்கச் செய்ய வேண்டும்.

இது விடுத்து தங்கம் செய்கிறேன் என்று திரியும் முட்டாள்களுக்கு பித்தம் அதிகரித்து தலை கிறுகிறுத்து திரியும் சித்த பிரமை பிடித்த பைத்தியமே தவிர வேறில்லை.

இது சித்தர் சொன்ன மறைப்பாகும்.

இது பேரின்ப நிலைக்கு தகுதியுள்ளவனுக்கும், வைராக்கியம் உடையவனுக்கும் கூறி வைத்த கருத்தாகும்.

சித்தர்களின் கட்டமைப்பே **இயம, நியம** ஒழுக்க நெறியில் நின்று உண்மையினை தேடிச் செல்பவர்களாக இருக்க வேண்டும் என்ற விதியின் (Law) கீழ் இந்த யோகம் பயில வேண்டும் என்பதே.

இவ்வாறு ஒழுக்க கட்டுப்பாடுகளை கடைபிடித்து வாழ்பவர்களுக்கே **முப்பு** என்றால் என்ன என்று தெரியும்.

தங்கம் செய்கிறேன் என்று கண்டதை புடம் போட்டு கரியாக்காமல், மனம் வசப்பட வழி அறிந்து கொள்ளவும், சூரியன் போல் தினம், தினம் உதிப்பது என்று இல்லாமல், அதாவது, நாம் மீண்டும் மீண்டும் பிறக்காமல் இருக்க சரியான வழியினை தேர்ந்து எடுத்து எட்டு விதமான தன்மைகளைக் கொண்ட அட்டாங்க யோகத்தினை ஒழுக்க நெறிபடி செயல் படவேண்டும்.

இதனை கடைப் பிடிக்காதவர்களுக்கு முப்பு முடியாது.

## 13. வழலை என்ற உப்பு

**கனகமென் றதனைக் கரியாக்காது**
**மனமது வசப்பட வழியறியவுமே**
**தினகரன்போல் செனிக்காம லிருக்கும்**
**இனமறிந்திடு மார்க்க மெடுத்திடே** (பஞ்ச பாடல் - 250)

**ஏகவஸ்த்து என்றுமே நாம் இனியும் ஞானவெட்டியில்**
**பாகமாகச் செப்பிய பனுவலை மறந்துமே**
**நாகம்போலச் சீறியே நானிலத்தில் சுற்றினால்**
**ஆகுமோ நன் முப்புமுறை ஆண்டேமுடியாதே** (பஞ்ச பாடல் - 101)

ஒரே பொருள் என்று ஞானவெட்டியில் பக்குவமாக சொல்லியதை மறந்து விட்டு, நாகம் போல் சீறிக்கொண்டு பலவிதமாக அர்த்தம் கொண்டு பல இடங்கள் சுற்றி வந்தால் நல்ல முப்பு ஆகுமோ, ஆகாதே என்கின்றார்.

**அண்டத்தில் முப்புவாய் முடித்து அறிவுடனே**
**பிண்டத்திற் கொண்டால் பலிக்குமே வாசியது**
**மண்டலத்தி லிதன்மாட்சி யறிந்த மானிடர்க்கு**
**எண்டிசையும் கிடுகிடுஎன்று நடுங்கு மென்னாண்டே** (பஞ்ச பாடல் 97)

அண்டத்தில் முப்புவாய் முடித்து (ஆயிரம் இதழ்களைக் கொண்ட சகஸ்ராரத் தாமரை ஆகிய பேரண்டத்தில்) முப்புவாய் செய்து கொண்டு அறிவுடன் அதை பிண்டத்தில் உட்கொண்டால் வாசியாகியது கைக்கூடும்.

ஒரு மண்டலத்தில் இந்த மகிமை மானிடர்கள் உணர்வார்கள் எட்டுத்திசையும் நடுங்கும் அதன் வல்லாண்மை என்கிறார்.

**அப்புவுடன் வன்னியும் ஆனதோர் காற்றுமே**
**இப்புவியில் ஏகமாய் இருந்திட - ஒப்பியதோர்**
**ஆதிவழலை ஆகுமே லிதறியும்**
**சேதி இந்த நூலினாற் செய்**

(பஞ்ச பாடல் - 89)

அப்புவுடன் + வன்னியும் ஆனதோர் காற்றுமே என்பது என்ன?

**அப்பு** என்பது நீர், **வன்னி** என்பது நெருப்பு.

இது இரண்டும் கலந்த காற்று என்பது பிராணவாயு.

(ஆக்சிஜன் = ஹைட்ரஜன்) நீர் வாயு இரண்டும் கலந்த காற்றானது இந்த வளி மண்டலத்தில் உள்ளதைக் குறிப்பிடுகிறார்.

இந்த காற்றானது எல்லா இடங்களிலும் உள்ளது.

இதுவே ஆதி வழலை யாகுமே இது பற்றிய செய்தி இந்த நூலில் நிறைய உள்ளது என்று சொல்கிறார்.

**ஊற்றுநீர் போற்பெருகும் உதகமென்னும் சுத்தசலம்**
**மாற்றும் வகையறிந்திந்த மாநிலத்தில் நாதவிந்தைப்**
**போற்றிந் தசதீஷைபத்தும் புனிதர்கள் முடிப்பர்வாசிக்**
**காற்றைப் பிடிக்கும் வழிகண்டவர்கள் யோகிதாமே.**

இப்பொழுது இந்தப் பாடலைக் கவனியுங்கள்

ஆறுகளில் ஊற்று தோண்டும்போது எப்படி நீரானது ஊறிக்கொண்டே இருக்குமோ, அது போல் நம் உடலில் உதகம் என்னும் இரத்தமானது வந்து கொண்டே இருக்கும். இந்த சுத்தசலம் என்பதை மாற்றும் வகை மாற்றும் திறன் கொண்டவர்கள் நாதவிந்தை புகழ்ந்து பத்து வித தீட்சையை வாசியாகிய காற்றைக் கொண்டு முடிப்பார்கள். இவர்கள் இந்த வழிகண்ட யோகியர் ஆவர்.

இப்பாடலில் சுத்த கெங்கை என்னும் சுத்த சலம் (நீர்) என்பது பற்றிக் சொல்லியுள்ளார். முதல் பாடலில் காற்று பற்றிக்

கூறினார் இன்னும் ஒன்று உள்ளது அதையும் என்ன என்று பார்ப்போம்.

**வாசிபோலவும் உன்னுள்ளே இடை பிங்கலையென**
**ஊசிநீரது ஒடுமேயினி உய்த்துணர்ந்திட்டு வீட்டிலே**
**கூசிடாமலே தினம்தினம் கொண்டு உண்டிடக்காயமே**
**நாசமாயழியாது நாதநீர் நாவிலுறும் சுத்தகெங்கையே**

(பஞ்ச பாடல் - 41)

வாசிபோலவும் என்றால் காற்றானது எப்படி நம் உடலில் **இடை, பிங்கலை** என்று சென்றுவருகிறதோ, அதுப் போன்று இரத்தமானது நம்முடலில் சென்று வருகிறது.

இதை உணர்ந்திடு (வீட்டில் - உடலில்) இதை நாம் உண்ண, உடலானது அழியாது இந்த நாதமாகிய நீர் நாவில் ஊரும் போது சுத்த கங்கையாகும்.

(உடலில் இயக்கத்திற்கும், அனைத்திற்கு அடிப்படை பொருளாக உள்ளது இரத்தமே).

உடலில் விந்து வாகவும், எச்சில் சுரப்பு நீராகவும், ஏழு வித தாதுக்களாகவும் மாறக் காரணமாக உள்ளது.

இந்த இரத்தத்தை நாம் பெறுவதற்கு உணவு பிரதானமானது.

இதுவே **அன்னசாரம்** எனப்படும். உணவினால் உண்டாகும் தாதுவாகும்.

இதை தைத்திரிய உபநிஷத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சில சித்தவைத்தியர்கள் முப்பு முடிக்கிறேன் அதற்கு உப்பு வேண்டும் என்று கடல், ஆறு, குளம் என தேடி அலைந்ததை கீழே உள்ள பாடல்கள் விளக்குகின்றன.

**கங்குல்விடியாமே கதிபெறவும் காத்திருந்து**
**போங்கியதைத் தனேடுப்பார் பூதலத்தில் - தங்குமது**
**மாசியிலும் சித்திரையும் மண்ணு பங்குனிதனிலும்**
**மாசறு பூ நீரை மதித்து** (பஞ்ச பாடல் - 48)

**உவற்சாரம் என்றே ஓதிவரும் பூநீரை**
**எவர்க்காயும் தோற்றாது இவ்வுலகில் - சவர்க்காரம்**
**கண்டாரே கண்டார் கலிவிலக வண்ணாரே**
**அண்டாருக்கு ஆகாதது**

இந்த இரு பாடல்களிலும் கூறியுள்ளதைக் கவனிப்போம்.

விடியாத (சூரிய உதயம்) நேரத்தில் எழுந்து சென்று பூநீர் பூப்பதுக்கு காத்திருந்து பூநீர் பொங்கி வருவதை எடுத்து வருவார்கள்.

இது மாசியிலும், பங்குனி, சித்திரையிலும் மிகப் பெருமையுடன் எடுத்து வருவார்கள்.

ஆனால் இது உவர்மண்ணில் இருந்து வரும் சாரம் இது வண்ணார்கள் துணி வெளுப்பதர்க்கு பயன்படுத்தும் சோப்பு (சவுக்காரம்) என்று யாரும் உணர்வது இல்லை, அதை எடுத்து பனி நீரால் சிலரும், மழை நீரால் சிலரும், குழந்தைகளின் மூத்திரத்தினால் சிலரும் கரைத்து வடித்து, உலர்த்தி தசதீட்சை செய்து கொண்டு இதுதான் முப்பு என்று காட்டுகிறார்கள்.

இது அவர்களின் வேலை வாய்ப்புக்கு உதவுமே ஒழிய யோகியருக்கு ஆகாதது.

இன்னும் ஒரு கொடுமை என்னவென்றால் சிலர் பவுர்ணமியன்று கோவானூருக்கு சென்று, இரவு முழுவதும் கண்விழித்து, விடியற்காலையில் அங்கு பூக்கும் மண்ணை வாறி எடுத்து, கண்ணாடி ஜாடியில் கொண்டுவந்து இதுதான் பூ நீர் என்றும் முப்பு என்றும் கூறுகின்றனர்.

இதற்கு கீழே உள்ள பாடல்தான் காரணம்.

**“கோவானூறு பொட்டலிலே**
**குண்டு மேனியம்மன் சன்னதியில்**
**சாகாமூலி முளைத்திருக்குது அதைச்**
**சார்ந்து பாரடி ஞானப்பெண்ணே”**

ஆக மேலே கூறப்பட்டுள்ள பாடல்களை ஊன்றி கவனித்தால், பூநீர் என்பது, பொட்டலில் உள்ளதன்று. அது குண்டு மேனியம்மன் சன்னதியில் உள்ளது என்பது தெளிவாகும். அதாவது மேனி என்பது இந்த உடலில் உள்ளே என்பதை அறியாத மூடர்கள் பொட்டலில் போய் பூக்கும் மண்ணை எடுப்பது மடமையாகும்.

அடுத்து அகத்தியர் தீட்சாவிதி என்ற கீழ்கண்ட பாடலை கவனியுங்கள்.

**"புத்தியில்லா பாவிகள் மண்பூ நீர்வாரி**
**பனிதண்ணீரால் கலக்கி வெளியில்வைத்து**
**சித்தமதுதான் கலங்கி மூப்புவென்றும்**
**சிரந்த சரக்கத்தனையும் சுட்டுப்பார்த்து**
**பித்தமது தான்பிடித்து நோயால்மாய்ந்து**
**பிணமாகி சுடுகாடு போனார்தானே"**

- அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி.

மேற்கண்ட பாடல் பூநீர் உவர் நிலத்தில் கிடைக்கும் மண்ணல்ல என்பது தெளிவாகின்றது.

இனி உண்மையில் வாதத்திற்கான கருவை பிரமமுனி கருக்கிடை சூத்திரம் 380 - பக்கம் 4. பாடல் - 6 ல்.

**தோனப்பா தத்துவ நூலாயிந்துபாரு**
**சொல்லும் உடம்பி எழுபத்தீராயிரம் நரம்பு**
**ஊணப்பா நரம்பெல்லாம் நாடியோடும்**
**உத்தமனே உயிர்நிலையை ஊன்றிப்பாரு**
**தேனென்ற வால்மீகர் நாடி சூத்திரம்**
**தெளிவாக எழுபத்திரண்டும் பாரே!**

இப்பாடலின் மூலம் நம் உடலில் 72 ஆயிரம் நாடி நரம்புகளில் ஊண் நீராகிய இரத்தம் ஓடுகிறது என்பதையும், இதனால் உயிர் நிலைப்படுவதையும் ஊன்றிக் கவனி. இந்த வீரத்தினை வால்மீகர் எழுதிய நூலினைப் பார்த்து அறிந்து கொள்.

**செய்வதற்கு வாதத்தின் கருவைக்கேளு**
**செப்பாதே துரிசியத்தில் விந்துநாதம்**
**செய்வதென்ன பூமியுட நாதமொன்று**
**சிறப்பான பிரமகற்பம் கல்லுச்சுண்ணம்**
**பைவதென்ன பாறையாங் கல்லுப்பொன்று**
**பாங்கான அண்டமொன்று பிண்டமொன்று**
**தைவதென்ன பஞ்சபூத மஞ்சுமாச்சு**
**தனக்குள் பயன் அறிந்தால் குருவுமாச்சு**
**உய்வதென்ன பயனென்ன காராசாரம்**
**உரையாமல் சித்தரெல்லாம் ஒழித்திட்டரே**

மேற்கண்ட பிரமமுனியின் பாடலைக் கவனிப்போம் வாதத்திற்கான கருவைச் சொல்கிறேன். துரிசியத்தில் விந்து நாதம் இதில் துரிசு என்பது துரியவெளியைக் குறிக்கிறது.

அட்டாங்க யோகத்தில் துரியம் துரியாதீதம் எனப்படுவதில் துரியனிலையாகும்.

பூமியுட நாதம் ஒன்று, பிரமகற்பக் கல்லுச்சுன்னம் ஒன்று, பாறையாம் கல்லுப்பு ஒன்று, **அண்டம்** ஒன்று, **பிண்டம்** ஒன்று, ஆக இது ஐந்தும் சேர்ந்தால் பஞ்சபூதம் ஐந்தும் சேர்ந்த இந்த உடலாகும்.

இந்த நம் உடலுக்குள் இந்த பஞ்சபூதம் ஐந்தின் தொழில் என்ன என்பதை அறிந்தால் அது குருவாகும்.

இதன் பயன் காரசாரம் ஆனால் இந்த காரசாரம் பற்றி சித்தர் ஒழித்து விட்டனர்.

**ஒழித்திட்டே பலபலவாய்ச் சொன்னாரே**
**உட்பொருளை அறியாமல் அலைந்தார்வாதி**
**அருந்திட்டு அண்ட பிண்டம் ஆதியந்தம்**
**ஆகாசம் அடிமுடியும் துரியாதீதம்**
**அழித்திட்டுச்சாகாது வேகாதெல்லாம்**
**அடங்கிநின்ற பொருளென்ன விந்து நாதம்**
**தெளிந்திட்ட மனோன்மனித்தாய் பூரணமேயாகும்**
**சிவசிவா துரியவெளி அட்சரமுமாமே**

சித்தர்கள் காரசாரம் பற்றி பலபல விதமாகச் சொன்னார்கள்.

இதனால் வாதிகள் இதன் உட்பொருளை அறியாமால் அலைந்தனர். **அண்ட, பிண்டம், ஆதியந்தம், ஆகாசம் அடிமுடியும்** என்பது எல்லாம் துரியாதீதத்தினை குறிப்பதாகும்.

சாகாது, வேகாது என்ற உபமான பெயர்களின் பொருள் **விந்து, நாதம்** என்பதாகும்.

இதில், பூரணம் என்று கூறப்படுவதும் மனோன் மணித்தாய் என்பதுவும் ஒன்றுதான்.

அட்சரம் என்பது துரிய வெளியைக் குறிப்பதாகும்.

**அட்சரத்தை அறிந்தார்கள் சித்தரெல்லாம்**
**அறியாமல் உலகத்தோர் அலைந்துகெட்டார்**
**நிட்சயமாய் இந்நூலை நிலைக்கச்சொன்னேன்**
**நிலைதரும் பூரணத்தை நிலைத்துப்பாரு**
**அட்சரமாம் நிலைதங்கி அறிவிற்கூடி**
**அடங்கிநின்ற பொருளெல்லாம் மவுனமாச்சு**
**அட்சரமாம் சொல்வதற்கு ஆராலாகும்**
**அறிவுகுரு அல்லாது ஆசானுண்டோ**
**நிச்சயமாய் ஆதிதன்னை மூலத்தூனில்**
**நிலைத்திட்டால் சுழிமுனைதான் நிசமாக்கானே**

அட்சரம் என்பது எது என்று சித்தர்கள் அறிவார்கள் ஆனால் உலோகோர் தெறியாமல் அலைந்து கெட்டனர்.

நமக்கு **அறிவுதான் குருவாகும்.** அறிவை விட்டால் வேறு குரு இல்லை.

சித்தர்கள் எதையும் சிந்தித்து முடிவு எடுக்கும் சித்தாந்த வாதிகளாவர். ஆகவேதான் அறிவை முன் நிலைப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றனர்.

**அட்சரம்** எனப்படும் இடத்தில் மனத்தை நினைவை நிலையாக செலுத்தி அறிவு கொண்டு சிந்தித்தோமானால் அடங்கி நின்ற பொருளெல்லாம் என்ன மவுனம் தான் யோக நிலையில் மனத்தை ஒரே நிலையாக உள் நோக்கி செலுத்த வேண்டும்.

மூலத்தில் அவ்வாறு நிலைத்திட்டால் சுழி முனை காணும்.

**போடவே வழலை யென்றசுண்ணமாச்சு**
**புத்திகெட்ட வாதிகளே சித்தர்சொல்லார்**
**ஆடவே நாதாக்கள் ஆட்டமெல்லாந்தான்**
**அம்மம்மா வழலைவிட்டால் வேறுயுண்டோ**
**பேரான அண்டபிணடம் பிரமகற்பம்**
**வண்டென்றும் எரியென்றும் பாறையென்றும்**
**மதயானைக் கல்லென்றும் வீரமென்றும்**
**ஆடவே சொன்னதெல்லாம் விந்துநாதம்**
**அதையல்லால் வேறென்றும் அறியேன்பாரே**

புத்தி கெட்ட வாதிகளே முப்புச் சுண்ணம் என்று சொல்கிறிர்களே அந்தச் சுண்ணம் எது அது வழலை தான்.

வழலைவிட்டால் வேறுண்டோ இதை அண்டமென்றும், பிண்டமென்றும், பிரமகற்பம், வண்டென்றும், எரிஎன்றும், பாறை என்றும், மதயானைக் கல்லென்றும், வீரம் என்றும் சொன்னது எல்லாம் விந்து நாதம் இதை விட்டால் நான் வேறு அறியேன்.

இதில் முதலில் வழலை தவிர வேறு இல்லை என்று சொல்லிவிட்டு அண்டம், பிண்டம் என்ற பெயர்களை சொல்லிவிட்டு விந்து நாதம் தவிர வேறு இல்லை என்று சொல்கிறார். வழலை என்றாலும் விந்து நாதம் என்றாலும் ஒன்றுதான்.

தங்கமா?, ஞானமா? எதுவேண்டும் என கேட்டால் இன்றைய உலகம் தங்கம்தான் கேட்கும், அந்த அளவிற்கு மோசமான சூழலில் நம்முடைய இன்றைய வாழ்க்கை முறை உள்ளது.

அதற்காக ஆண்டவனை தேடும் ஆன்மாக்கள் இல்லாமல் இல்லை, அவரவரின் முன் அனுபவப் பதிவுகளே அவர்களை அவ்வாறு யோசிக்க வைக்கின்றது.

ஒருவர் செய்கின்ற செயலில் இருந்து கிடைக்கும் பலன் அது நல்லதாகவோ, அல்லது கெட்டதாகவோ இருக்கும், அல்லது இரண்டும் கலந்ததாகவோ இருக்கலாம், ஆனால் அதற்கான விளைவு ஒன்று இருந்தே தீரும்.

விளைவு எதுவானாலும் அது நம்மை பந்தத்தில் பிணைக்கின்றது, மனதில் ஒரு பதிவை உண்டாக்குகின்றது.

அந்த பதிவு மேலும், சில செயல்களைச் செய்யுமாறு நம்மை தூண்டுகின்றது.

நாமும் மீண்டும் அதே செயலை திரும்ப திரும்பச் செய்து, இந்த தொடர் செயலின் பயனால், தொடர் பிறவிக்கு வித்திடுகிறோம்.

நம்முடைய சிற்றறிவிற்கு தெரிந்து கொண்ட விஷயங்கள் உண்மை போல் தோன்றும், நமது மனதில் தவறாக ஒன்றை உருவகப்படுத்திக் கொண்டு அது இப்படித்தான் என்று வாதிடுவது மனம் செய்யும் மடமை.

ஐந்து முடவர்கள் எப்படி ஒரு யானையை வைத்துக் கொண்டு அந்த யானையின் உருவம் பற்றி தாங்கள் சொல்வதுதான் சரி என வாதிடுகின்றார்களோ அதுப் போன்று, நமக்குள் இரசவாதம் செய்ய இவ்வளவு வாதம் தேவையா?

முதலில் இந்த உலகை இறைக்கு உரியதாக கண்டு, அந்த பிரபஞ்ச பேரறிவின் முன் நம் அறிவு ஒன்றும் இல்லை என்ற நிலையில், சற்றே சிந்திக்க தெரிந்து கொண்ட நமக்கு, நம் அறியாமையை ஒப்புக்கொள்ள அந்த மனதில் இடம் தராததுதான் நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடை எனலாம்.

விஞ்ஞானம், மருத்துவம், என பல கலைகளை நாம் அறிந்திருக்கலாம். ஆனால் இவைகள் எல்லாமே நம் மனதில் ஏற்றிவைக்கப்பட்ட புறத்தகவல்களே தவிற, உண்மை அறிவு ஆகிவிடாது.

நம்மை பற்றி நாம் அறிவதே, **உண்மை அறிவு** ஆகும்.

அதற்கான நம் அக வளர்ச்சிக்கான ஓர் ஆன்மீக சாதனையாக, நம்மை உயர் நிலைக்கு அழைத்துச் செல்லும் சரியான பாதையாக இந்த அட்டாங்கயோகம் நமக்கு வழி காட்டுகின்றது.

இத்துடன் இன்னும் சில வேதாந்த நூல்களையும் கற்று, அதில் கூறப்பட்ட சம, தம, உபடதி, திதிக்ஷா, சமாதானம் போன்ற நற் பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ளும் பொழுது, நம்முடைய உண்மை அறிவு என்கின்ற உண்மை சொரூபம் நமக்கு வெளிப்படத் தொடங்கும்.

இந்த யோகத்தின் வாயிலாக மனித அறிவின் உயர் நிலையான ஞானம் பெறாமல், இன்பம் - துன்பம், வெற்றி - தோல்வி, நல்லது - கெட்டது, உயர்ந்தது - தாழ்ந்தது என்ற இருமைகளை வெல்லாமல், எதையுமே செய்யமுடியாது.

இப்படி இருக்க, மனம் என்ற ஒன்றை அறியாமல், அதன் அபரிமிதமான ஆற்றலை புரிந்து கொள்ளாமல், பழைய பதிவுகளின் தாக்கத்தில் மனம் போன போக்கில் செயலுக்கு வராமல் பேசிக்கொண்டே இருப்பதினால் பயன் என்ன?.

இந்த யோகத்தின் வாயிலாக செயல்பட்டு மனதினை வெல்லாமல் இந்த மனிதன் முப்பு முடித்து மரணத்தினை வெல்ல முடியாது.

முப்பு அகம் அல்லது புறம் செய்ய விரும்பு பவர்களுக்கு முதல் படியே இந்த யோகம்தான் என்றால் அது மிகையாகாது.

**பாரென்ற நாதத்தில் விந்து புக்கில்**
**பாங்கான பிருதிவியும் அப்பும் வாய்வும்**
**ஆரென்ற ஐவருந்தான் சேர்ந்ததாலே**
**அருவுருவாய் ஐங்கோலப் பிண்டமாச்சு**
**சாரென்றும் வழலையென்றும் முப்புவென்றுஞ்**
**சவுக்கார குருவென்று மிதற்கேபேராம்**
**பாரென்ற கோசபீச மிதற்கேபேராம்**
**பஞ்சபூதச் சரக்கென்றும் இதற்கேபேராம்**
**பரண்யென்றும் இதைமறைத்துச் சித்தரெல்லாம்**
**பலபலவாய் நூல்தோறும பாடினாரே**
**பாடினாரென்நூலில் வெளியாச் சொன்னேன்**
**பதினெட்டுப் பேருமென்னை பகைத்திட்டார்கள்**
**விதியே சொன்னதொரு வழலைப்போக்கு**
**வெவ்வேற யென்று சொல்லி மலைக்க வேண்டாம்**

இந்தப் பாடலை சற்று கூர்ந்து நோக்கினால் நாதம் இந்த இடத்தில் கரு முட்டையை குறிக்கிறது. இந்த நாதமாகிய கரு முட்டையில் விந்து எனப்படும் சுக்கிலத்தில் உள்ள உயிர் அணுவானது இணைந்தால் **மண், நீர், காற்று, தீ, ஆகாசம்**

எனப்படும் ஐந்தும் சேர்ந்த, **ஐங்கோலப் பிண்டம்** என்று உடல் ஆகியது.

இது கருப்பையில் இணைந்த காலத்தில் கண்ணுக்கு தெரியாத அருவமாக (வெளிப்பார்வைக்கு தெரியாத நிலை) இருந்தது. பின் அது வளர்ந்த கண்ணுக்கு தெரியக் கூடிய நிலையில் உடலாக ஐந்து அடிப்படைப் பொருள்களும் சேர்ந்த பிண்டமாகியது.

உயிர் அற்ற நிலையில் **பிண்டம்** என்று அழைக்கப்படும்.

(நாம் திதிச் சடங்குகளுக்கு சொல்லும் போது பிண்ட தானம் என்ற வார்த்தையைப் பயன் படுத்துவார்கள்) இதற்கு வழலை என்றும் முப்பு என்றும் பஞ்சபூதச் சரக்கு என்று பெயர். இதை எல்லாம் பார்த்து மலைக்க வேண்டாம்.

**பாடியதோர் நாத விந்தில் வழலையாகும்**
**பரிவான பிண்டத்தால் வழலையாகும்**
**ஆடியதோர் அடிமுடியும் வழலையாகும்**
**மத்தியொடு மாமிசமும் வழலையாகும்**
**ஆடியே வழலைதொட்டு வாதம்பாரு**
**அலையாதே கற்பத்தை உண்டுதேற**

இந்தப் பாடலின் மூலம் எல்லாம் வழலையாகும் என்று கூறுகிறார்.

எனவே யோகத்தில் இருந்து, அந்த உயர் நிலையில் உண்டாகும் ஞானத்தினால் அறிந்துக் கொண்ட கற்பத்தை உண்டு தேறுக.

**தேறவே ரசவாதஞ் சிவசொத்தப்பா**
**செப்ப்பதே பொருள் தனையேஇச்சிக்காதே**
**ஆறவே செய்தாலும் பரத்துக்கீந்து**
**அறிவுகுரு போதத்தில் அடங்கிநில்லு**
**பாருநீ பாரபரப்பாய் திரிந்தாயானால்**
**பலியாது அவள்தனக்கு வாதமேது**
**கூறார்கள் வாதமொடு ஞானம்ரெண்டும்**
**குருபதத்தைப் போற்றி செய்யில் அறிவிற்கூடும்**
**விறக என்நூலில் வெளியாய் சொன்னேன்**
**விண்டிடால் விண்ணிலிட விளங்க்கும்பாரே.**

இரசவாதம் என்பது சிவன் சொத்தப்பா அதனால் இதையாரிடமும் எளிதாக சொல்லாதே, பொருள் மேல் ஆசை உள்ளவர்களுக்கு உரைக்காதே என்கின்றது சித்தர் நூல்கள்.

அப்படி ஒருவேளை நீ ஊருக்கு உரைத்தாலும், உன் உழைப்பை, அந்த பரத்துக்கு சமர்பித்துவிடு, அதைவிடுத்து நீ ஆடிப்பாடி பரபரப்பாய் திரிந்தாயானால், அந்த மெய்ப்பொருள் உனக்கு உதவாது என்பதை அறிந்து, மௌனமாக இருந்து அறிவாகிய குரு சொல்படி கேட்டு ஞான நிலையில் இரு.

பெரியோர்கள் வாதத்தை, ஞானத்தை என இரண்டையும் கூறவே மாட்டார்கள்.

அவளிடத்தில், அதாவது சக்தியிடத்தில் வாதமேது அதை விடுத்து குருவைப் போற்றி, அறிவுடன் செயல்பட்டு இந்த நூலில் நான் வெளிப்படையாக சொன்னேன் விண்டு சொன்னால் விளங்கும் பாரே என்கின்றார்.

இதில் ஓரளவுக்கு புரிவது மாதிரி இருந்தாலும் சில குழப்பங்கள் இருக்கும். எனவே, நாயனார் பாடல்கள் மற்றும் அகத்தியர் பாடல்களையும் மீண்டும் பாருங்கள்.

மீண்டும் நாம் நாயனாரின் பஞ்சரத்தினம் பாடலில் சிலவற்றைப் பார்ப்போம்.

**செகமாய்கையது திர்ந்திடாவிழிலே**
**செய்வதேது நல்யோகும்**
**வெகுமாய்கை மனம் யோனியாசைதனில்**
**வெம்பியே கீழிழுத்திடும்**
**சுகமாகமனம் அலையாதிருக்கச்**
**சொல்லினார் பதினெென் சித்தர்தாம்**
**அகமாய்கை தனை நீந்தினால் வரும்**
**ஆத்ம ஞானப் பூநீரதே** (பஞ்ச பாடல் - 52)

**சந்திர புஷ்கரணி தீர்த்தமும்**
**சலியாத பானம் அமுரிகள்ளுதான்**
**சுந்திதிரமாகவும் பிண்டத்தில்**
**தோன்றுமே கண்டத்தானமே** (பஞ்ச பாடல் - 59)

இந்தப் பாடல்களில் உலக ஆசை நமக்கு தீராவிடில் யோகம் செய்ய இயலாது.

பலரின் மனமானது பெண்ணாசையில் சென்று கீழ் நிலையை அடைந்து விடுகிறது. இதானால் தான் மனத்தை அலையாது இருக்கச் சொல்கின்றனர் பதிணென் சித்தர்கள்.

நம் மனம் சுத்தமானால் வரக்கூடியது ஆத்மா என்று அழைக்கப்படும் பூநீராகும்.

சந்திர புஷ்கரணி தீர்த்தம், சலியாத பானம், அமுரி, கள்ளு என்று எல்லாம் சொல்லப்படக் கூடியதானது நம் உடலிலேயே தோன்றக் கூடியதுதான் வேறல்ல.

இவைகள் எல்லாம் அழகாக நம் உடலின் கழுத்துப் பகுதியில் **விசுத்தி** என்று அழைக்கப்படும் நிலையில் தோன்றக் கூடியது.

**காரம்மென்னும் பூநீரு காயமதிலும் இருக்க**
**சாரமதைக் கொண்டு சவுக்காரமதை கட்டரியார்**
**பூரம்மென்றால் காரமிது பூநீறதுவும் புளிகான்**
**வீரமென்ற விந்தமுரி வெளியில் வெடியுப்பறிந்தே**

(பஞ்ச பாடல் - 931)

நம் உடலிலேயே காரம் என்று சொல்லப்படும் பூநீரு இறுகும் போது இதைக் கொண்டு சவுக்காரத்தை

கட்டறியாதவர்கள். பூரம் என்றாலும் காரம் தான் இதுவும் பூநீர் என்றும் பழம்புளி என்றும் வீரம் என்றும் சொல்வது எல்லாம் ஒன்றுதான் இதையே அமுரி வெடியுப்பு என்றும் சொல்லப்படும்.

**பிருதிவி நகாரமதாம் பிராணனும் மகாரமப்பு**
**இருதயத்திலும் இருந்த இந்திரியமாமுரி**
**அறியப்போமோ வெளிக்காண் அம்புவியில் எங்குமுண்டு**
**சுருதி முடிவான சுடர் சூச்சமறிந்ததே முடிப்பர்**

(பஞ்ச பாடல் - 932)

பிருதிவி (பூமி) **நகாரம்** எனப்படும்.

பிராணன் **மகாரம்** எனப்படும்.

நம் இருதயத்தில் உள்ள இரத்தமானது **அமுரி** எனப்படும்.

இவை எல்லாம் எங்கும் உண்டு என்பதையறிந்து, ஆஞ்ஞா சக்கரத்தில், அறிவுச் சுடர் (ஒளி) பிரகாசிப்பதை கண்டவர் முப்பு முடித்தவர்கள் ஆவர்.

இந்த நுட்பத்தை அறியுங்கள். இந்த இடத்தில் பிருதிவி என்பது நம் உடலைக் குறிப்பதாகும்.

**வன்னியும் வாயுவு மப்புவும் வாய்த்துமே**
**நன்னயம் பெற நன்மையாய்க் கூடினால்**
**இந்நிலந் தனில் முப்பு வென்றாச்சுதே**
**பின்னும்ற்றும் பிறப்பகற்றும் மிதே**

இந்தப் பாடலில் முப்பு பற்றி மிகத் தெளிவாக சொல்லியுள்ளார்.

இதை நன்கு கவனிக்க வேண்டும். வன்னி - தீ, வாயு - காற்று (பிராணன்), அப்பு - நீர் இது மூன்றும் நன்மையாய் ஒரு சேரக் கூடினால், இந்த நிலம் (நம் உடல் - பிருதிவி) என்னும் உடலில் இணையும் போது "**முப்பு**" ஆகும்.

அதாவது வானத்தில் இருந்து ஒரு உப்பு காற்று (இதில் பிராணவாயு உள்ளது), கடலில் இருந்து ஒரு உப்பு நீர், இதுவும் நம் உடலில் இரத்தமாக உள்ளது. இவை இரண்டும் சுவாசப் பயிற்சியின் போது ஏற்படும்போது ஒரு விதமான உஷ்ணம் இந்த உடலுக்கு உண்டாகும். இதுவே தீ என்னும் ஒரு உப்பாகும்.

இந்த மூன்று உப்பும் சேர்ந்தால் மூவுப்பு - **முப்பு** ஆகும்.

இதே கருத்து உள்ள பாடல் அகத்தியர் வல்லாதி 600 என்னும் நூலில் 105 ம் பக்கம் 671 ம் பாடலில் அகத்தியரின் கருத்தையும் படித்து பார்த்தீர்களானால் உண்மை அறிவீர்கள்.

இனி அகத்தியர் கேசரி குரு நூல் - 54 லில் சில பாடல்களைப் பார்ப்போம்.

**பதி தலத்திலீரெட்டு இதழுமொன்றாய்ப்**
**பதினாராய்ச் சோடசமாய் வளர்ந்துதேய்ந்து**
**திதிபிளந்துக் கதிர்நாளிற்பௌரனையே யானாற்**
**தினமறிந்து யிடகலையைக் கதிரிற்சேர**
**கதிமுத்திக் காய்ச்சிக்கு இதுவேதீட்சை**

பவுர்ணமி நாளில், இடது கலையில் பூரித்து கும்பித்து, வலது கலையில் இரேசிக்க வேண்டும், இதை பதினாறு இதழ்களையுடைய தலத்தில் இருந்து செய்ய இதுவே **காயசித்திக்கு** தீட்சையாகும்.

மேலும், யோகத்தில் பதினாறு தாமரை இதழ்கள் கொண்ட, உள்ளே நீல நிறத்தையுடைய அடர் நீலம் கொண்ட சக்கரமாகும்.

பஞ்சாட்சர எழுத்துக்களான "**சிவயநம**" என்னும் எழுத்துகளில் ஒன்றான "**வ**" என்னும் எழுத்தையும், அதன் தத்துவத்தையும் **விசுத்தி சக்கரம்** விளக்குவதாக அமைகின்றது.

இந்த சக்கரத்திலிருந்து தாமரை இதழ் போன்ற **பதினாறு யோக நாடிகள்** கிளம்புகின்றன. அவற்றின் அசைவுகளால் ஏற்படும் சப்தங்களை **லுௗ, ருஊ, வஈ, இஆ, அஅ, அம்ஔ, ஓஐ, ஏலூ** என்ற எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன.

**<u>இருப்பிடம்:</u>**

தொண்டை, இந்த சக்தி ஆதார மையமானது நமது தொண்டையின் அடிப்பாகத்தில் சுழுமுனை நாடியில் அமைந்து இருப்பதாக குறிப்பிடுகின்றனர்.

நமது குரல்வளை, மூச்சுக்குழாய், தையராய்டு சுரப்பிகள், நுரையீரல், கைகள் போன்ற உறுப்புகளுடன் விசுத்தி சக்கரம் தொடர்புடையதாக குறிப்பிடப் படுகிறது.

**மூலக்கூறு:** ஆகாயம்

**மிருகம்:** சாம்பல் நிற யானை.

**சம்பந்தப்பட்ட உறுப்புகள்:** தொண்டை, நுரையீரல்

**பீஜமந்திரம்:** ஹங்.

**<u>பலன்கள்:</u>**

சரணாகதியை வெளிக்கொணரும். மறைவான ஆத்ம சக்தியின் பரிமாணத்தைத் திறக்கச் செய்யும். புனிதத்துவம் வளரும்.

விசுக்தி சக்கரம் தூண்டப்பட்டிருந்தால் விஷத்தன்மை உடலுக்குள் நுழையாமல் தடுக்க முடியும்.

விஷம் என்றால் உணவு மட்டுமல்ல, தீய உணர்வுகள், எண்ணங்கள், சக்திகள் என்று விஷத்தன்மை கொண்டவற்றிலிருந்து விடுபட முடியும்.

இந்த சக்கரம் மலர்வதன் மூலம் தீமையை உருவாக்கும் அல்லது விளைவிக்கும் எண்ணங்கள், உணர்வுகள் எல்லாம் சாதகனை விட்டு நீங்கிடும்.

இதனால் எதனையும் விருப்பு வெறுப்போ அல்லது பற்றுதலோ இல்லாது சாட்சி நிலையில் இருந்து கவனிக்க முடியும். நான் என்கிற அகந்தை அழிந்து அன்பும், கருணையும் மிளிர்ந்தவனாகிடுவான் என்கின்றனர்.

விசுக்தி சக்கரத்தின் மந்திரம் "**ஹம்**" என்பதாகும்.

அதாவது, மலரின் மணம் எப்படி அனைவரையும் கவருமோ, அதைப்போன்று தூய அன்பினால் நிரம்பிய நம்முடைய நேசமான அணுகுமுறை, அனைவரையும் வசீகரிக்கும்.

அதாவது, "**அன்பே சிவம்**" என்று இறைவனைப் பற்றி வேத சாஸ்திரம் நமக்கு உபதேசத்திருக்கின்றது. அதையே நம்முடைய நேரடி அனுபவத்தில், இருமைகள் அற்ற அனன்ய அன்பு செய்வதினால் உணரலாம்.

அதற்கு முதலில் அஹங்காரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நான், எனது (கர்த்தா/ போக்த்தா) என்ற அபிமானம் உள்ளவரை அன்பு மலராது.

அன்பு இல்லாதவர்களிடம் இறைவன் எப்படி வெளிப்படுவான்?

**கருத்தரித்து வளர்ந்து வெளியேறுங்காலங்**
**கருவாளி நீயானாற் கருவைபாரு**
**உருப்படுத்தியுன்னை வளர்த்த அருமைதனை**
**உற்றுப்பாரு உண்மையதிலறிவாய் நீயும்**
**கருத்துள்வைத்துப் பருதி மதி கதிரிற் சேர்ந்த**
**கலவையரிந்து உருதிபெற்றுக் காயசித்தி**
**திருத்தமாய்ப் புகுந்து கண்டால் முத்தி**
**தேறுவது திண்ணமிது சித்தியாமே**

பொதுவாக, நாம் நடைமுறை வாழ்க்கையில் ஒரு கருவானது உருவாக்கி அது கருவறையில் வளர்ந்து வெளிவருகிறது என்பதை அறிவோம்.

இதனை நாம் வாழ்வியலில் பார்க்கும் அன்றாட நிகழ்ச்சியாகும் ஆனால், இந்தக்கரு வளர்ச்சி யாரால், எதனால், எப்படி உருவாகியது? அதற்கு காரணம் யாது? என்று சிந்திப்பதே கிடையாது.

நீ உண்மையான கருத்து அறியும் அறிவாளியானால் சிந்தித்துப்பார்.

பருதி - சூரியன் - வலது கலை எனப்படும் வலது நாசியில் வந்து போகின்ற சுவாசம். அடுத்து, மதி - சந்திரன் எனப்படும் இடது கலை, இடது நாசியி வந்து, போகும் சுவாசம், இவ்விரண்டும் ஒன்றிணைந்து அக்கினிகலை ஆகியவுடன், அதுவே சுழுமுனை நாடியாகிய, நடு நாடியில் செயல்பட்டால் பக்தன், முக்தன் ஆவது உறுதி.

**சித்தாதி பதினெட்டுஞ் சேருசித்தர்**
**சிறுத்து மதிபெருத்து வளர்பதியைக்கண்டு**
**அத்தர் திருனடனந்தாள் பதியைப்போற்று**
**ஆயிதிரோதாயினுட மாய்கை நீக்கி**
**முத்தர்பரிபூரணமாய்த் தாயைப் போற்றி**
**மூலமுதலாறுவரை யகண்டர் கண்டோர்**
**இத்தகைமையரிந்த சித்தர் கெல்லாம்நாமே**
**யோகரிஷி யானோமப்பா அறிவற்றனே**

சித்தர்கள் மனதின் மாயையை நீக்கி, மூலாதாரம் முதல் உள்ள ஆதார இடங்களைக் முறையாக கடந்து, அந்த சித்தின் திரு நடனத்தை திருச்சிற்றம்பலத்தில் (சிதாகாசம்) கண்டு, பரிபூரணமாகிய அந்த தாயை போற்றி வாகை கொண்டனர்.

இவர்களுக்கு எல்லாம் நான் என் அறிவால் அவர்களுக்கு யோகம் சொல்லும் தலைவனானேன். என அகத்தியர் கூறுகின்றார்.

அகத்தியர் பரிபூரணம் - 400, பக்கம் - 68 - பாடல் - 377

இந்தப் பாடல் இவ்வாறு மேன்மை பொருந்திய சித்தர்களால் கூறப்பட்ட முப்பு இரகசியங்களை மட்டுமே இங்கு மறைப்பில்லாமல் கூறப்பட்டது. யாருக்கு புரியுமோ, அந்த தகுதியான அதிகாரிகளுக்கு மட்டும் புரிந்தால் போதும்.

இங்கு கூறப்பட்டது எதுவும் அடியேனுடைய சொந்த கருத்துக்கள் கிடையாது. அதனால், இந்த முப்பு ஆராய்ச்சியில் முயற்சித்துக் கொண்டுள்ள சித்த வைத்தியர்கள் சிலருக்கு இந்த பகுதிகள் மிகவும் உபயோகமாக இருக்கும் என்ற அன்பினாலேயே இதனை இங்கு அளித்துள்ளேன்.

## 14. முப்பூ (அகம்) நிறைவுரை:-

சித்தர்களின் முப்பூ என்னும் பொருள் எது என்பது ஓரளவு விளங்கி இருக்கும் என்று நம்பலாம். முப்புவின் பெருமைகளைப் பற்றி சொல்லி உள்ளவைகளை கூர்ந்து கவனித்தால், அவ்வறிய பொருள் புறப்பொருளாக இருக்க முடியாது. அது நம் அகத்தில் அறியக்கூடிய அரிய மெய்ப்பொருள் என்பது நன்கு விளங்கும்.

**இரசமணி, கற்பம்** என்றும் **வகாரம்** என்று கூறப்படுவது எல்லாமே உள்ளே நடைப் பெறவேண்டிய அகச் செயல் பற்றியதாகும் என்பதை இதுவரைப் படித்து புரிந்தவர்கள் மறுப்பதற்கு இல்லை.

இத்துடன் "**முப்பூ அகம்**" (நம்முள்ளே) நிறைவுற்றது.

**ஓம் தத் சத்!**

# முப்பூ

## (புறம்)

### 15. <u>முப்பூ - புறம்</u>

இதுவரை முப்பூ (அகம்) பற்றி, நம் உடலின் உள்ளே பார்த்தோம். இனி வருகின்ற பகுதிகள் முப்பூ (புறம்) பற்றி வெளியே பார்க்க இருக்கிறோம்.

இதில் வெளியே செய்யும் முப்பு - வைப்பற்றி சித்தர் பெருமக்கள் கூறாமல் இல்லை. அவர்கள் என்ன கூற வருகின்றார்கள் என்பதனை பார்பதற்கு முன்பு, நம்மிடையே வாழ்ந்து வழிகாட்டிய சித்தமருத்துவ சிகாமணி திரு. **முகமது ஹக்கீம் அப்துல்லா சாயபு** என்ன கூறுகின்றார் எனவும் காணலாம்.

## முப்பூ விபரம் முகமது அப்துல்லா சாயபு:-

=====================================

அப்துல்லா சாயபு அவர்கள் தனது இரசவாத சிந்தாமணியில் - பக்கம் 26 முதல் 126 வரை உள்ள பகுதிகளில் முப்பூ பற்றி கூறிய சில முக்கிய விபரங்களை தருகின்றேன் என்கிறார்.

முப்பூ முடிப்பதற்கு முதன்மையானது பூநீரே ஆகும். இந்த வார்த்தையானது பூநிரா? அல்லது பூநீறா என்பதில் எல்லோருக்கும் சந்தேகமுண்டு.

ஏனெனில் பூநீர் என்பது பூமியின் குணம் அல்லது பூமியின் தன்மை அல்லது பூசாரம் என அர்த்தமாகிறது.

ஆகையினால் பூநீரென்பதே சரியானது எனச்சிலரும், பூசாரம் என்பதே சரியான வார்த்தை எனச் சிலரும் வாதிடுகின்றனர்.

இவர்களது இவ்வார்த்தைகளுள் **பூநீர்** என்பதே சரியானது என பெரும்பாலோர் அபிப்பிராயம். ஆனால் இந்த உப்பை பக்குவப்படுத்தி சுண்ணம் செய்தபின் **பூநீறு** என்பதே சரியானதாய் இருக்கும் என்பது என் கருத்து.

ஏனெனில் இதன் யோக முறையானது பற்பங்கள், செந்துரங்கள், லோகமாரனங்கள் முதலிய எல்லாவித விஷங்களுக்கும் உபயோகப்படுகிறது.

இதன் யோகமுறைகள் ஒவ்வொருவரால் அவரவர் அனுபவப்படி, ஒவ்வொரு விதமாக கூறப்படினும் இங்கு அனுபவமான சிலமுறைகளை விபரமாய் கூறுகிறேன்.

## 16. <u>பூநீர்</u>

**பூநீர்** என்பதைப் பக்குவப்படுத்தும் **தீட்சை செய்தல்** அல்லது **சுத்தி செய்தல்** என்றும் அல்லது சுத்தி செய்யப்பட்ட அந்த வஸ்த்துவுடன் (பொருள்) வேறு சில சரக்குகளைச் சேர்த்து செய்யப்பட பாகத்திற்கு கீழ்க்காணும் விதம் அநேக நாமங்கள் (பெயர்கள்) உண்டு.

அந்த பெயர்களையும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறுகின்றனர்.

ஆயினும் அவற்றில் முக்கியமானவைகளை மாத்திரம் இங்கு காணலாம்.

**<u>பாகப்படுத்தின பூநீரின் பெயர்கள்</u>**

(1) வழலை - இது ஏகநாமம் (ஒரேபெயர்).

(2) அண்டம் - பிண்டம் இவை துவ நாமங்கள் (இரண்டு பெயர்கள்).

(3) இடகலை, பிங்கலை, சுழிமுனை திருநாமங்கள் (மூன்று பெயர்கள்).

(4) அம்பு, ஏரி, பரிதி, மதி, வில் இவை பஞ்ச நாமங்கள் (ஐந்து).

(5) அரிதாரம், இடி, இரண்ய கற்பம், இறையம், கோசம், கௌரி, தனித்தியம், பீசம், மேகம், வாயு இவை தச நாமங்கள் (பத்து).

(6) அமுரி, உரி, உவர், உவர்மண், கடுக்காய், சிகை, சுண்ணம், தசைனஞ்சு, திரிகுனஜலம், நஞ்சு, நாதம், பாசனம், பூமிநாதம், வயிரம், விந்து, வெள்ளைக்கல், இவை சோடசநாமங்கள் (பதினாறு).

(7) அடி, அமாவாசை, அரக்கி, ஊனுப்பு, ஐம்பத்து ஒன்று, கணபதி, கம்பி, கருநெல்லி, கிரகம், குயவன், கொள்ளி, நடு, நவமூலி, நீருப்பு, பிரதமை, பூநீர், மிதுனம், மூடி, மேடம், லவனம், வண்ணான், விஷமி, விஷம், வெடியுப்பு, வென்சாரை, இவை பஞ்சீகாரண நாமம் (இருபத்திஐந்து).

(8) அனாமி, எழுபிறப்பு, ஐவர், ஓசை, கண்மணி, கதிர், கமலம், காமி, குடிபோம்வீடு, கூற்றன், சாரி, சிங்கி, சுடர், சுட்டால், சுயம்பு, சூடன், நாயகம், நிலப்பூடு, நீரண்ணம், பச்சை, படிகம், பண்ணை, பரமன்,

பிடாலவனம், புஷ்டி, பொட்டல், மடையன், மனற்பொடி, மலம், மவுனம், மாசி, முயல், லிங்கம், விஷ்ணு, வெடி, வெளி, என்னும் இவை 36 - நாமங்களாம்.

(9) அக்கினிக்கம்பு, அங்கி, அயம், அவுரி, இந்திரகோபம், சிரம், இராசவர்க்கம், உரம், உருளை, ஏகசவுக்காரம், ஏமம், ஒளி, கடற்பாசி, கண்டங்கத்திரி, கண்ணாடி, கந்தகம், கரடு, கரந்தை, கரும்பூனை, கருவி, களிச்சுன்னம், தணல், தணல்மேலுப்பு, கண்ணி, குண்மம், குரு, குருத்து, கொக்கு, கொள்ளி, கொடி, கொன்றை, கோதை, கோமயம், கோரோசனை, சங்கம், சங்கு, சந்நியாசிமண்டை, சமாதி, சரபீசம், சர்ப்பம், சாளக்கிராமம், சிங்கு, சுக்கான், சுத்தம், சூக்கமம், சூலம், சொறி, சோடசம், சோதி, சோமநாதம், தலைப்பிள்ளை, தாது, திருமேனி, துத்தி, துருசு, தூலம், தேர்க்கால், தொட்டி, நன்டோடு, நந்தி, நாகம், நிலவுப்பு, பஞ்சமித்திரம், படலம், பரம, பரி, பாலைநிலம், புத்தான், புரியட்டம், புனுகு, பூரம், பூரணம், பொன்னுமத்தைவித்து, மகரம், மதனப்பூண்டு, மதி, மந்திரம், மலைருது, மீன், மீனம், முட்டை, முத்தான், யானைக்கால், ரவி, வங்கு, வலியான், வள்ளி, வாசி, வியாக்கிரம், விருட்சம், வெண்கண்டர், வெண்காரம், வெள்ளையாவாரை, என்னும் இவை தொண்ணுற்றாறு (96) நாமங்கள்.

பாகப்படுத்தப்பட்ட இந்த பூநீருக்கு 125 - மறு நாமங்கள் (பெயர்கள்) உண்டு.

இவை எல்லாம் கூடிய தொகை 319 ஆகும்.

அதாவது, 1+2+3+5+10+16+25+36+96+125 = 319. பெயர்கள் என்று சிலரும் இன்னும் சிலர் 1000 - பெயர்கள் என்றும் கூறுகின்றனர்.

இந்த பூநீரை பாகப்படுத்துவது தான் முப்பு அல்லது மூப்பு எனச் சொல்லப்படுகிறது.

பழைய உப்பு எனவும் அல்லது மூவகை உப்பு எனவும் முப்பூ என்பதைப் பற்றி மாந்திரிக சாஸ்திரிகள், ஞான சாஸ்திரிகளும் (படித்தவர்கள்) முதலிய ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாஸ்திரங்களில் தான் சொல்வதுதான் சரி என சொல்லியுள்ளார்கள்.

இவ்வாறு பலவிதமாக சொல்கிறார்கள். ஆகையால் பலதடவை அனுபவமான வகைகளை எழுதுவோம்.

இவ்வாறு உயர் திரு முகமது அப்துல்லா சாயபு அவர்கள் மேற்கண்ட நூலில் கூறியுள்ளார்.

ஏன்? **திரு. முகமது அப்துல்லா சாயபு** அவர்களின் கருத்தை இதில் கூறி, பின்பு நாம் நம் ஆய்வை செய்யலாம் என்றால், **இரசமணி, கற்பம், முப்பு** இந்த மூன்றையும் மிக

முக்கியமானதாக சித்தர் நூல்களில் சொல்லுவதாலும், அவர்கள் இதை முன், பின்னாகவும், மறை பொருளான உபமான சொற்களை சொல்லியும், ஒருவர் சொல்லியது பற்றி அடுத்தவர் நூல்களை பார்க்கும் படியும் கூறுவதால், உண்மைப் பொருள் விளங்காது பலரும் இதுகுறித்து சரியான முடிவுக்கு வர முடியாமல் இருக்கின்றது.

அன்றைய நாளில் மிகப் பெரிய மருத்துவராக கருதப்பட்ட **திரு முகமது அப்துல்லா சாயபு** அவர்களின் கருத்தைப் பற்றி தெரிந்து கொண்டால்தான் இதை நாம் இனி வரும் பகுதிகளை எளிதாகப் புரிந்துக் கொள்ளமுடியும்.

நாம் இனி சித்தர் நூல்களில் இருந்து **முப்பு (புறம்)** பற்றி காணலாம்.

தன்வந்திரி என்னும் சித்தரின் நுட்ப வைத்தியம் இருநூறு என்னும் நூலின் பக்கம் - 5, பாடல் - 12 லில் இருந்து பாடல் 18 வரை உள்ளவைகளைப் பார்ப்போம்.

**ஆச்சென்ற யோகத்தைப் பாரானாகில்**
**அப்பனே வாதமொடு ஞானஞ்சித்தி**
**வாச்சென்ற வாதத்தா லென்ன வாகும்**
**வளமான ஞானத்தைப் பாரு பாரு**
**நாச்சென்ற ஞானத்தை யரிந்தாரானால்**
**நலமான சிவயோகப் பதவி யாவார்**
**நீச்சிநின்ற பொருளறிந்தோன் சித்தன் சித்தன்**
**நிலையான மனத்தோர்க்குச் சித்தியாகும்** (பாடல் - 12)

யோகம் செய்யாமல் அதன் நெறி முறைகளைக் பார்த்து அதன் வழி போகாமல் சித்தர்களின் உண்மைக் கருத்தை அறிய முடியாது. வாதம் (தங்கம் செய்தல்) அறிவு முதிர்ச்சி எதுவும் உண்டாகாது. தங்கத்தால் என்ன கிடைக்கும் என்று அறிவால் சிந்தித்து பார்த்தாரானால் நலமான சிவயோகப் பதவியடைவர். சித்தர்களின் மறை பொருள் அறிந்தோன் சித்தன் என்று வலியுறுத்திச் சொல்கிறார்.

**சித்தென்ன வூமையனை தெரிந்து சொன்னேன்**
**சிறப்பான வழலையுட மார்க்கங்கேளு**
**வத்தென்ன வைத்தியத்தின் வழலைகேளு**
**மண்பான பூமியுட நாதமப்பா**
**சுத்தனாயிருந்தாக்காற் சொல்வேன்பாரு**
**சொற்பெரிய உவருப்பைக் கொண்டுவந்து**
**நற்றன்ன படிஒன்று அளந்துகொண்டு**
**நலமான பாண்டத்திற் கொட்டிப்பாரே** (பாடல் - 13)

**பாரப்பா பணிநீரைக் கொண்டுவந்து**
**பரிவாக இரண்டுபடி அதனில் வார்த்து**
**சேரப்பா கலக்கியே யடுப்பிலேற்றிச்**
**சிறப்பான குழம்பு போலாகும் சோதி**
**வாரப்பா இறக்கியதை வைத்துக்கொண்டு**
**வளமாக வாறிவரும் பதத்தைகேளு**
**சீரப்பா பீங்கான்றான் அகலமாகச்**
**செப்பமுடன் கொண்டுவந்ததனிலூற்றே (**பாடல் - 14)

ஊற்றியதோர் பீங்கானை இல்லத்தில்வை
உணர்வான வாலையைத்தான் லட்சமோது
வாத்தியதோர் நைவேத்தியம் துபங்காட்டு
வளமான பால்பழுங்கள் வைத்துவைத்து
நாத்தியதோர் நாற்பதுநாட் சென்றதானால்
நலமான பூப்பூத்துக் காய்க்கும் பாரு
மாற்றிய தோரஞ்சாநா ளானபின்பு
வளமான காய் காய்த்துப் பழமாம்பாரே (பாடல் -15)

பழமாகு நாற்பத்தியைந்துக் குள்ளே
பரிவாகப் புவெடுத்துப் பதனம்பண்ணு
வளமாகும் தூபமொடு தீபங்காட்டி
அப்பனே வைத்தியமுப் பிதுதான்பாரு
பழமாகும் முப்புவின் சுண்ணம்கேளு
நலமான கல்வத்தில் முப்புவிட்டு
கழமாகும் குக்குடத்தில் லண்டம்வாங்கி
கணமாகப் பிளந்ததிலே விந்தை வாரேன் (பாடல் - 16)

வாரப்பா சாமமது ஒன்றுமட்டும்
வளமான பணிநீறார் சாமமாட்டு
ஆரப்பா வில்லைசெய்து நிழலுலர்த்தி
யப்பனே விந்துவினா லேழுசீலை
நாரப்பா யாறவைத்துக் கோழிபுடம்போடு
நலமாகச் சுண்ணமதாய் வெண்ணீறாகும்
காரப்பா சுண்ணமதை யெடுத்துக்கொண்டு
கருவாக வயிரவர்க்கும் பூசைபண்ணே (பாடல் - 17)

**பண்ணவே குப்பிதனிற் பதனம்பண்ணு**
**பண்பான வவுடதத்தின் கூடச்சேரு**
**வண்ணவே யாக்கிராணங் கலிக்கத்தோடு**
**வகுத்தவிந்தக் கட்டுவகை செயநீர்ப்போக்கு**
**மென்னவே சிந்தூரம் பற்பத்தோடு**
**மேவான மாத்திரைகள் எண்ணையோடும்**
**சுன்னவே தைலமொடு சூரணங்கள்**
**கனமான லேகியங்கள் கிருதந்தானே** (பாடல் - 18)

தன்வந்திரி தனது **சூட்சம வைத்தியம் - 200**, என்னும் நூலில் இருந்து மேற்கண்ட பாடல்களைப் பார்த்தோம்.

இதில் வாதம் (தங்கம்) செய்முறையால் என்னபயன் ஒன்றும் இல்லை யோகத்தை அனுசரித்து ஞானம் பார்த்து வந்தால் நிலையான மன நிலையில் சிவயோகத்தை அறிந்து சிவயோகப்பதவி அடைவர்.

நான் ஊமையனைத் தெரிந்து சொன்னேன். சிறப்பாக சொல்லப்படும் வழலை என்ற முப்பு பற்றித் தெரிந்துகொள்.

வைத்தியத்திற்கானது இந்த வழலை - பூமியுனுடைய நாதமாக உள்ளது. இதற்கு உவருப்பு (களர் நிலத்தில் இருந்து எடுக்கும் உப்பு இதை வண்ணார்கள் எடுத்து வந்து துணி வெளுக்க இது கரைத்த நீரில் துணிகளை முக்கி அலசிப் பிழிந்து, வெள்ளாவி அடுப்பில் வைத்து வேகவைத்து, துணிகளை வெளுக்கச் செய்வார்கள்.

இதற்கு தற்கால இரசாயனப் பெயர் ‘**சோடியம் கார்பனேட்**’ என்று அழைக்கப்படும் இது களர் நிலங்களில் பூமிக்கடியில் இருக்கும்.

சுண்ணாம்புக்கல் அல்லது **ஓடைக்கல்** என்ற பெயரில் இது வழங்கப்படுகிறது.

இக் கல்லானது மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் இரவில் ஏற்படும் பனிப்பொழிவை ஏற்று காலையில் அடிக்கும் வெய்யிலின் உஷ்ணத்தால் பக்குவப் பட்டிருக்கும்.

இதனால் இரவு நேரங்களில் இராசயணக் காரணங்களால் பொங்கி நிற்கும். இது நிலா வெளிச்சத்தில் பளபளத்துக் காணப்படும். இதுவே **பூநீர்** எனப்படும்.

இதனைச் சித்த மருத்துவர்கள், வாதிகள் மேற்கண்ட நிலத்தில் இரவில் போய் இருந்து எடுத்து வருவார்கள்.

(பகலில் சூரிய ஒளியினால் மாறிவிடும் என்பதால்) இதை பனை ஓலைகளைக் கொண்டு இரவு நேரங்களில் மண் கலக்காமல் எடுத்து வந்து இந்த பூநீரை ஒரு பானையில் போட்டு இரண்டு படி நீர்விட்டு கலக்கி தெளிவு இருத்தி அடுப்பில் வைத்து எரித்து குழம்பு பதத்தில் எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு வைத்து இதற்கு பால், பழம் வைத்து பூசைசெய்து சாம்பிராணி தூபம் காட்டவும்.

இந்த பீங்கானை அப்படியே அசையாது வைத்து இருந்தால் நாற்பது, நாற்பத்தி ஐந்து நாள் கழித்து அதன் மேல் உப்பு படரும். அந்த உப்பை எடுத்து வேறு பீங்கானில் போட்டு வரவும்.

இவ்விதம் உப்பு விளையும் வரையில் போட்டு அதை வெய்யிலில் வைத்து காய்ந்தபின் எடுத்து கல்வத்தில் போட்டு கோழி முட்டை வெண்கருவால் அதனை அறைத்து வில்லை செய்து நிழலில் உலர்த்தி சட்டியில் வைத்து ஏழு சீலை மண் செய்து கோழி புடம் போடவும்.

அது வெளுத்து சுண்ணம் ஆகும்.

இதை எடுத்து குப்பியில் வைத்துக் கொண்டு வைரவர்க்கு பூஜை செய்து எடுத்துக்கொண்டு உபயோகிக்க சொல்கிறார்.

இதனை நாம் படித்தவுடன் இவ்வளவு எளிதாகத் தோன்றுகிறதே என்று எண்ணத் தோன்றும். ஆனால் அகத்தியர் இந்த வைத்திய முப்பு பற்றி மிக விரிவாக சொல்லியுள்ளனர்.

அதனையும் அடுத்து பார்ப்போம்.

## 17. அகத்தியர் குருநூல் முப்பு 50

**பாரடா முன்னுரைத்த முப்புவெல்லாம்**
**பாரான சித்தருக்குஞ் சிவயோகிக்குஞ்**
**சேரடா வைம்பதுக்குள் சொன்னேன்முப்பு**
**செகத்திலுள்ள மானிடற்குச் செய்யவேண்டி**
**ஊரடா வேறுகொண்டா லுத்தருக்கு**
**உறுதியாய்த் திரேகமது பெலத்துபோச்சு**
**ஆரடா என்னைபோற் சொல்லப்போறார்**
**ஆச்சரிய முப்பூவின் பெருமைபாரே** (பாடல் - 6)

**பாரென்ற வுருப்பைக் கொண்டுவந்து**
**பரிவாக சுத்த ஜலந் தண்ணிலிட்டு**
**சீருடனே கலக்கியே தெளியவைத்து**
**தெளிவாகக் காய்ச்சி நன்றாய் வற்றினாக்கால்**
**நீரிலே மறுபடியும் விட்டுக்கிண்டி**
**நிலையாக தெளிய வைத்துயிருத்துக்கொண்டு**
**வாரமுடன் காய்ச்சியே வற்றவைத்து**
**வாகாகயிப்படியே காய்ச்சு காய்ச்சு** (பாடல் - 7)

**காச்சுகின்ற முறைக்கெல்லாஞ் சுத்தஜலம்விட்டு**
**கலக்கியே தெளியவைத்து காச்சுகாச்சு**
**ஆச்சிந்த பூவதுதான் வெளுத்துப்போகும்**
**அப்புறத்தே வைத்துயினி வறையக்கேளு**
**வாச்சதொரு கரியுப்பை வாரிக்கொண்டு**
**மானிடர்கள் கூட்டுமுப்பின் மார்க்கங்க்கேளு**
**பாச்சிந்தபடி சுத்த ஜெலத்தைவிட்டு**

**பரிவாகத் தெளிவிருத்து பத்துமுறை காச்சே** (பாடல் - 8)

**முறையாக நிலவுப்பைச் சொல்லக்கேளு**
**மூதண்ட பிர்மாண்ட விந்தும்பின்னை**
**அறையான பூமியுட நாதமாச்சு**
**ஆதியுப்பு சிவமென்று இதற்கேபேரு**
**மறைவாக வொளித்துவைத்தார் நூல்களெல்லாம்**
**மார்க்க மெல்லாந் சொல்லுகிறேன் வரிசையாக**
**நிறையாகக் கல்லுப்பால் வளர்ந்ததப்பா**
**நீற்றியே தின்பவர்க்கு சுன்னாம்பாச்சே** (பாடல் - 9)

**சுண்ணமென்று லோகத்தோர் சுட்டுநீற்றி**
**சுகமாகதாய் போலத் தின்பார்கேளு**
**சுண்ணாம்புக் கல்லென்று இதற்கேபேரு**
**சுந்தரவிபூதியு மிதற்கே பேரு**
**எண்ணமுள்ள சுண்ணம்பா காரச்சுன்னம்**
**இயல்பான கல்லுப்பு சுண்ணமாச்சு**
**தண்ணியிலே போட்டவுடன் நீரிப்போச்சு**
**சவுக்கார குருவாச்சு சார்ந்து பாரே** (பாடல் - 10)

அகத்தியர் சொல்கிறார் நான் கூறிய முப்பூ பற்றியது எல்லாம் சித்தனாக வேண்டியவர்களுக்கும், ஞானிகள் யோகிகளுக்கும் ஆகும். உலகத்தில் உள்ள மனிதர்களுக்கு உதவியாக அருமையான முப்புவைக் சொல்லப் போகிறேன்.

உவருப்பை கொண்டுவந்து சுத்தமான நீரில் கரைக்கச் சொல்கிறார். தன்வந்திரி பணி நீரை சேர்த்து கரைக்கச்

சொன்னார் (பணி நீர் என்பது மார்கழி தை மாசி மாதங்களில் புதிய காடாத்துணியை வாங்கி அதை கடலை, கேழ்வரகு போன்ற விவசாயம் செய்துள்ள தாவரங்களின் மீது இரவு நேரங்களில் விரித்து காலையில் சூரியோதயத்துக்கு மூன் எடுத்து பிழிந்து எடுத்த நீராகும்) ஆனால் இவர் சுத்தமான ஆற்றுநீரை எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்.

இந்த ஆற்றுநீரில் மேற்கண்ட உவருப்பை கரைத்து பின் சிறிது நேரம் வைத்து இருந்து தெளிவாக வடித்து எடுத்துக்கொண்டு காய்ச்சவேண்டும்.

இவ்விதம் 10 முறை கரைத்து, கரைத்து தெளிவிருத்துக் காய்ச்சி எடுத்து தனியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

உவருப்பு எனப்படுவது சில இடங்களில் மண்சுவர்கள் பொரிந்து உதிரும் இந்த மண்ணை எடுத்து வந்து நீரில் கரைத்துக் காய்ச்சுவதும் உண்டு.

சில இடங்களில் அழுகிய தாவரங்கள் பிராணிகள் சிறு குழந்தைகளின் சிறுநீரை விட்டு பக்குவங்கள் செய்தும் எடுப்பார். இயற்கையாக சில இடங்களை விளைவதும் உண்டு. இது வெடியுப்பு எனப்படும்.

இதன் பின் நாம் சமையலுக்கு உபயோகிக்கும், கரியுப்பு (சோடியம் குளோரைடு), எடுத்து இது போல் ஆற்று நீர் விட்டு கரைத்து தெளிவிருத்து காய்ச்சவேண்டும்.

இவ்விதம் பத்து முறை காய்ச்சி முன்போல் வெய்யிலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

இனி முறைப்படி நிலவுப்பு என்பதை பற்றிக் கூறுகிறார்.

**அண்டம்** என்று சொல்லப்படுகிற பிரமாண்டமான விந்துவானது பூமியுட நாதமாச்சு. இதுவே **ஆதியுப்பு** என்றும் **சிவம்** என்றும் இதற்குப் பெயர்.

இதை நூல்களில் சித்தர்கள் மறைத்துக் சொல்லியுள்ளனர். இவை பற்றியெல்லாம் இனி சொல்கிறேன் என்று கூறுகிறார்.

இதை நீற்றினால் சுண்ணாம்பு ஆச்சு. உலகோர் சுண்ணாம்பை சுட்டு நீத்து உபயோகிப்பார்கள் இதற்கு **சுண்ணக்கல்** என்று பெயர். இது காரமுள்ள சுண்ணமாச்சூ இயல்பான **கல்லுப்பு** சுண்ணமாச்சு.

இதை தண்ணீரில் போட்டவுடன் நீரிப்போகும். இது **சவுக்காரக் குருவாச்சு.** (சவுக்காரம் - சோப்பு) அதாவது சவுக்காரம் செய்ய பயன்படும் **சோடியம் கார்பனேட்** எனப்படும் சலவைச் சோடாவாகும்.

**சார்வாகயிதை மறைத்தார் சித்தரெல்லாஞ்**
**சமுசயங்களில்லையப்பா வெளியாய்ச் சொல்வேன்**
**சீரான கல்லதுதான் துய்யவெள்ளை**
**செகத்திழ்ந்த கல்லுதான் மெத்தவுண்டு**

**நீறான கல்லொன்று மாகாதப்பா**
**நாமமெல்லாம் வெள்ளைக்கல் பிர்மகற்பம்**
**சாவாகயிதை எடுத்து அமுரிக்குள்ளே**
**யப்பனேயுவர்மண்ணைக் கரைத்துக் கொள்ளே**
**கொள்ளவே யதிலிந்தக் கல்லைபோடு** (பாடல் - 11)

**கொள்ளவே யதிலிந்தக் கல்லைப்போட்டு**
**குமுறவே காய்ச்சிவிடு கட்டிப்போகும்**
**வெள்ளையாய் சுண்ணக்கல் கட்டிப்போகும்**
**வேதாந்த மூர்த்தி என்று இதற்குபேரு**
**கல்லென்ற கல்லதனை யண்டநீரால்**
**கருவாக வறைத்தனை வில்லையாக்கி**
**உள்ளபடி சொல்லுகிறேன் உலையிலூத**
**உத்தமனே சுண்ணாம்பாய் முறைத்துவூதே** (பாடல் - 12)

**ஊதிடவே சுண்ணமுமாஞ் சலத்தைவாரு**
**ஓகோகோ நீர்வற்றும் நீரிப்போகும்**
**வாதிடவே பீங்கானில் வைத்து நீற்று**
**வளமாக ஜலம்மதிலே விட்டு**
**ஆகியே மண்டலமே வைத்தாயானால்**
**மேலே உப்புவந்து படரும்பாரு**
**சோதியா முப்பதனை வழித்து வாங்கி**
**சுகமாக பாலமொன்று தூக்கிக்கொள்ளே** (பாடல் - 13)
**தூக்கியே வகையொன்று பலமொன்றாக**
**சுகமாகச் சூடனொரு பலமுங்கூட்டி**
**நோக்கியே அண்டநீர் விட்டுஆட்டி**
**நுனக்கமாய் வில்லைசெய்து உலரவைத்து**

**தாக்கியே யுலர்ந்தபின்பு ஒடுமுடி**
**சாதகமாய் சீலைமண்ணுஞ் சுத்திக்கொண்டு**
**பாக்கியே முழப்புடத்தில் நீறிப்போகும்**
**பண்பாய் இதைஎத்து பகரக்கேளே (**பாடல் - 14)

**கேளப்பா வீரமொரு களஞ்சி கூட்டி**
**கிருபையுள்ள புழுகுதிலே களஞ்சிகூட்டி**
**நாட்டிலுள்ள சம்பழச்சார் விட்டுஆட்டி**
**தாளப்பா வில்லைசெய்து ரவியிற்போட்டு**
**முழப்புடத்திற் போட்டு வாங்கு**
**வேளப்பா சுண்ணமது கடுங்காரமாச்சு**
**வெகுசுருக்குப் பூநீறுகுரு விதென்றே (**பாடல் - 15)

இதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை.

சித்தர்கள் இதை மறைத்தனர் ஆனால் நான் வெளியாய் சொல்லுகிறேன்.

உலகில் கல்லு நிறைய உண்டு அதில் வெண்மையான கல்லுகளும் உண்டு. ஆனால் இது களர் நிலங்களில் மண்ணுக்கு அடியில் இருக்கும் இந்தக் கல்லை எடுத்துக் கொண்டு அமுரிக்குள்ளே உவர் மண்ணை கரைத்துக் கொள்.

இவ்வாறான கல்லை எடுக்கும் போது அது பனிக்காலத்தில் பனிநீரை எடுத்துக் கொண்டு காலையில் அடிக்கும் வெய்யிலின் உஷ்ணத்தையும் எடுத்துக் கொண்டு, இரவில் பொங்கி பூரிக்கும் இதையே **பூநீர்** எனப்படும்.

இத்தகைய கல்லில் இவ்வாறு பொங்கி இரசாயன மாற்றம் அடையாத கல்லாக இருக்க வேண்டும். நீற்று போன கல்லாகாது.

இந்த பிர்மகற்ப கல்லை எடுத்து அமுரியில் மேற்கண்ட களர் நிலத்தில் உள்ள உவர் மண்ணை எடுத்து கரைத்து தெளிவிருத்துக் கொண்டு. அந்த பிர்மகற்பக் கல்லை போட்டு அடுப்பில் வைத்து காய்ச்ச பொங்கிவரும்.

இவ்விதம் காய்ச்சி சுண்டியபின் ஆறவிட்டு கல்லை எடுத்துக்கொள்ள கட்டிப்போகும். இதற்கு **வேதாந்த மூர்த்தி** என்று பெயர்.

பின் இதனை எடுத்து வேங்கருவாள் அறைத்து வில்லையாக்கி காயவைத்து சட்டியில் வைத்து துருத்தி கொண்டு உலையில் ஊத சுண்ணாம்பாகும்.

இவ்விதம் உலையில் ஊதி எடுத்த சுண்ணக் கல்லை பீங்கான் ஜாடியில் போட்டு வைத்து தேவையான அளவு ஆற்று நீர் விட்டு ஒரு மண்டலம் (சிலர் - 45 நாள், சிலர் - 48 நாள்) வைத்து இருக்கவேண்டும்.

இந்த நீரின் மேல் ஒருவித உப்பு படரும் இதனை பனை ஓலையால் வழித்து எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

இவ்விதம் உப்பு விளையும் வறை எடுத்து பதனம் செய்ய வேண்டும். இக்கலவையை இடையிடையே கலக்கி விடவேண்டும், உப்பை எடுத்து அன்றன்று வெய்யிலி வைத்து உலரவைத்து பாட்டிலில் அல்லது பீங்கான் குப்பியில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இத்தகைய ஜோதி போன்ற உப்பில் ஒரு பலம் எடுத்துக் கொள்ளவும். இதில் வீரம், புனுகு, பூரம் களஞ்சி கூட்டி கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழசாறு விட்டு அறைத்து வில்லைதட்டி காயவைத்து பின்பு முழ புடம் போட்டு எடுக்க கடுங்காரச் சுன்னமாகும்.

இது **பூநீற்று குரு** என்று சொல்லப்படும்.

இது நிச்சயமாய் மருத்துவத்திற்கு பயன்படும். இன்னும் பூநீர் சுத்தி, இதில் சேரும் **வீரம், பூரம்** போன்ற மருந்துகளைக் கட்டிச் சேர்க்கவேண்டும் என்பது போன்ற கருத்துக்கள் உள்ளது.

புறத்தில் செய்யப்படுகின்ற முப்பு கைத்தேர்ந்த அனுபம் பெற்ற பாரம்பரியமாக வரும் மருத்துவ குடும்பங்களைச் சார்ந்த மகா சித்த மருத்துவ மேதைகளாலேயே சித்தர் பாடல்கலை சரியாக கணித்து முப்பு முடிக்க முடியவில்லை என்பதே என்னுடைய தாழ்மையான கருத்து.

அப்படியே முப்புவின் இரகசியம் தெரிந்துகொண்டு முடிக்க முயற்சி செய்யும் வைத்தியர்கள், மற்ற அதி மேதாவி

சித்த வைத்தியர்களின் தவறான கண்ணோட்டத்தினை உள்வாங்கி அவர்களுடன் சேர்ந்து தானும் கெட்டதுதான் இன்றைய நிலை.

மேலும் **குரு மருந்து** என வைத்தியர்கள் முடித்து மற்ற மருந்துகளின் மூலம் கொடுத்து வருவதும் சித்தர்கள் சொன்ன இந்த முப்பு கிடையாது.

அதனால், **முப்பு இரகசியம்** தெரிந்து வெளியே முப்பு செய்யத் தெரிந்தவர்கள் தன்னுடைய பாதை சரியாக இருப்பின் அதன் வழி சென்று மேன்மையடையுங்கள்.

இல்லையேல், இனிதாக இந்த முப்பூ (அகம்) என்ற அரிதான ஆன்ம ஞானப் பாதைக்குள் வந்து, அந்த பரத்தை அறிந்து, நானும், நான் தேடும் அந்த மெய்ப் பொருளும் வேறு, வேறு இல்லை என்ற **சொரூப சித்திக்கு** வாருங்கள்.


இதைத்தான் “**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**” என்ற திருமூலர் உலகுக்கு வெளிப்படியாக கொண்டு சேர்த்த சித்த இரகசியங்களை நாம் புறத்தில் தேடாமல், அகமுகமாக அறிந்து, அதன் அனுபவத்தை நேரடியாகப் பெற்று, பிறவாப் பெரு நிலையான, மரணமில்லா பெருவாழ்வை அனைவரும் பெறவேண்டும் என்ற உன்னத அன்பினால்தான், இந்த “**முப்பூ**” இரகசியத்தை இவ்வளவு வெளிப்படையாக உங்களுடன் பகிந்துக் கொள்ளப்பட்டது.

இந்த இரகஷிய வித்தையைக் கற்றறியக்கூடிய ஒரே பிறவியான மனிதப் பிறவியை மிகச் சரியாகப் பயன்படுத்தி, ஏற்றத் தாழ்வுகள் ஏதுமின்றி, எல்லோரையும் ஒன்று போல், அன்பு செய்யக் கூடிய, தூய உள்ளம் யாரிடத்தில் இருக்கின்றதோ, அவர்களே இந்த முப்பு அகத்தில் முடிக்க அருகதை உள்ளவர்கள் என அறியலாம்.

இத்துடன் **முப்பூ** பகுதிகள் நிறைவடைகின்றன.

**ஓம் தத் சத்!**

# முப்பூ இரகசியம்






வித்திலே பிறப்பதை சிவத்தின் கூறான **சத்தி** எனவும், வித்தின்றிப் பிறப்பதை சத்தியின் கூறான **சிவம்** எனவும், முதலாவதைச் **சுப்ரமணி** எனவும், பிந்தியதை **கணபதி** எனவும் கூடச் சித்தர்கள் கூறுவார்கள்.

சிவ பூசை, சத்தி பூசை, வாம பூசை, சோம பூசை என்பதெல்லாம் சித்தர்களின் மறை பொருள் பரிபாசையாகும். நேரிடையான வெறும் பூசை முறைகளால் எவ்விதமான பலனும் ஏற்படாது. அந்த மறைபொருள் பற்றி, ஒரு எல்லை வரை தான் விவரிக்கவும் சித்தர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.